வெளியீடு 25-4-2001 Issued 25-4-2001

123
2000

791

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 8, 2000 – தொகுதி 103 – எண் 1

Monday the 8th May, 2000 – Volume 103 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

123/2000

# 8-5-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1. வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-36 |
| *2. அறிவிப்பு—* | |
| பேரவைக்குள் பத்திரிகையாளர்கள் கறுப்புத் துணியும் அடையாள அட்டையும் அணிந்து வரக்கூடாது என வேண்டுகோள் | 36-38 |
| *3. தகவல் கோரல்—* | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 38 |

223319



பக்கங்கள்


**4. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

| | |
|---|---|
| உடுமலைப்பேட்டை, குமரலிங்கம் பகுதியில் வயிற்றுப்போக்கால் பலர் பாதிப்பு | 38-60 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 39-40,57 |
| *திரு. கே. சுப்பராயன் | 40-42 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 42-43,59 |
| திரு. ஐ. கணேசன் | 43-45 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 45-46 |
| *திரு. லா. சந்தானம் | 46 |
| திரு. டி. மணி | 46-47 |
| திரு. சி. வேலாயுதன் | 48-49 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 49-50 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 50-54,55-56 |
| திரு. சி. ஞானசேகரன் | 55-56 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 57-58,59 |
| *திரு. ப. ரங்கநாதன் | 60 |

**5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 24 — தொழில்கள்<br>(ஆ) கோரிக்கை எண் 53 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 61-146 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 61,66,69,72, 73-74,104, 119-142 |




பக்கங்கள்


**5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

| | |
|---|---|
| திரு. ச. அழகிரி | 70-81 |
| திரு. ஆர். சிவராமன் | 81-88 |
| *திரு. கே. சுப்பராயன் | 88-94,98 |
| திரு. தங்கம் தென்னரசு | 94-100 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 100-106,142 |
| திரு. ஜி.கே. மணி | 106-110 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 110-113 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 114-118 |

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 145-146

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| **1. முதலமைச்சர்** | **: மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, வணிக வரிகள் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| **2. கல்வி அமைச்சர்** | **: மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| **3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | **: மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| **4. வருவாய்த் துறை அமைச்சர்** | **: மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| **5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | **: மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு: உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்: பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃபு).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா: சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public. General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes and Environmental Pollution control.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** .. | **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** .. | **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** .. | **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** .. | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** .. | **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** .. | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** .. | **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Sports and Youth Service Corps** .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps. |
| 18. | **Minister for Housing** .. | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** .. | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and Printing** .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

| | | |
|---|---|---|
| 21. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜிஎல். | - தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம் எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி எம்.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | - கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - மேட்டுப்பாளையம் |
| 9. | அழகுராஜா, திரு. என்.ஆர். | - தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | - சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | - அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | - வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன, திரு. ஆ. - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடானை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. - மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் கே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79 சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80 சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்

109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி

112. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்

113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்

115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)

116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

118. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2

119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு

120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி

121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)

122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு

123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி

124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1

125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்

126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்

127. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)

128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி

129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)

131. துரை. திரு. கே. - திருவெறும்பூர்

132. துரைமுருகன், திரு. - காட்பாடி

133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி

134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)

135. நடராசன், திரு. ஆ. - பேரூர்

136. நடராஜன், திரு. த. - செஞ்சி

137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்

138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)

139. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி

141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி

142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்

143. நேரு, திரு. கா.நா. - லால்குடி

144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை

145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)

146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1

147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு

150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)

152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்

153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
165. பொன்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பென்னாகரம்



176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
177 மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
179 மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்

198. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)

199. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்

200. ரவி அருணன், திரு. கே. - தென்காசி

201. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்

202. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்

203. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)

204. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்

205. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்

206. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி

207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்

208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்

209. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

210. வல்லரசு, திரு. பி.என். - உசிலம்பட்டி

211. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்

212. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்

213. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்

214. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி

216. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை

217. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு



220. வெங்கடேசன், திரு. ச.க. - மதுராந்தகம்

221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்

222. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்

223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)

224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்

225. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்

226. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு

227. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)

228. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி

229. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்

231. ஜோதிகண்ணன், திரு. மு.நு. - முசிறி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

234. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்

235. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 26, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 8, திங்கட்கிழமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

``இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

தாமே தொழில் செய்து ஊதியம் பெற்று உண்ணும் இயல்புடையவர், பிறரிடம் சென்று கையேந்த மாட்டார், தம்மிடம் வேண்டி நின்றவர்க்கும் ஒளிக்காமல் வழங்குவார்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 541, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

541—

### விக்டோரியா ஹால்

***29411—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள விக்டோரியா ஹால் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்க்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலுள்ள 'விக்டோரியா ஹால்' சென்னை மாநிலக் கல்லூரியின் மாணவர்கள் விடுதியாகத் தற்போது செயல்பட்டு வருகிறது. இக்கட்டடத்தில் பழுதுபார்க்கும் பணிகள் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.16.82 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 542, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**542—**

## மின்மாற்றி

*** 28129—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், தேனி ஒன்றியம், சங்ககோணாம்பட்டி கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாகவுள்ளதால், அங்குள்ள எஸ்.எஸ். 3 மின்மாற்றியை மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்ககோணாம்பட்டி கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது தொடர்பாக மேற்படி கிராமம், செயற் பொறியாளர் பகிர்வு, தேனி அவர்களால் நேரடியாக ஆய்வு



செய்யப்பட்டதில் அங்குள்ள sub-station 3 மின்மாற்றியிலிருந்து 50 வீட்டு மின் இணைப்புகளுக்கு மட்டும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருவது அறியப்பட்டது. அவற்றுக்கு single phase மூலம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதனால் தற்போது உள்ள மின் அழுத்தம் 160 வோல்ட் இருக்கிறது. எனவே, இப்பொழுது உள்ள மின் அழுத்தக் குறைவைச் சீராக்கும் வகையில், தற்பொழுதுள்ள மின் கம்பித் தொடருடன் ஒரு மின் கம்பித் தொடர் இழுத்து, கூடுதலாக மற்றொரு phase-ல் மின் விநியோகம் செய்வதற்கு ரூ.35,000 செலவில் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, கூடுதலாக மின் தொடர் அமைக்கும் பணி 30-9-1999 அன்று முடிக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா, இருக்கையில் இல்லை.

வினா எண் 543, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**543—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***29877—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, கோட்டப்பட்டி புலியூர் ஊராட்சியை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், கோட்டப்பட்டி ஊராட்சியில் உள்ள புலியூரில் துணைச் சுகாதார நிலையமும், 7 கிலோமீட்டர் தொலைவில் கம்பைநல்லூர் அரசு மருத்துவமனையும், 8 கிலோமீட்டர் தொலைவில் ஆனந்தூர் மற்றும் பாரூர் ஆரம்ப சுகாதார நிலையங்களும், போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. மேலும், புலியூர் கிராமம் அடங்கிய

[2000 மே 8

காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப போதுமான அளவில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி புலியூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால், தற்போதுள்ள மக்கள்தொகை அடிப்படையிலே கோட்டப்பட்டி புலியூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம் என்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்து, கோட்டப்பட்டி புலியூரை மையமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1 இலட்சத்து 59 ஆயிரத்து 850. ஏற்கெனவே, ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் இந்த ஒன்றியத்திலே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல இப்போது எடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தின் அடிப்படையிலேதான் இன்னும் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழகத்திற்கு வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் கொடுப்பார்களா, இல்லையா என்று இதுவரையில் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும்கூட, அப்படிக் கிடைக்குமானால் priority அடிப்படையிலே யார் யாருக்குக் கொடுப்பது என்பது பற்றி அரசு ஆய்வு செய்து அதை வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 544, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**544—**

**கணினி வழங்குதல்**

***34885—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மே 8]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கணினி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முதற்கட்டமாக இம்மாநிலத்தில் 50 வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினிகள் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக சேலம் மாவட்டத்தில், சேலம் மற்றும் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் நிதியாண்டில் எடப்பாடி வட்டம் சேர்க்கப்படவுள்ளது.

முற்பகல் 9-35

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் வரும் நிதி ஆண்டிலே கணினிமயமாக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதற்காக தமிழக அரசுக்கு நன்றியைச் சொல்லி, இது எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கமாகவே பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் அனைத்து வட்டங்களிலும் நிலப் பதிவுறுக்கள் கணினிமயமாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. தற்போது திருவள்ளூர் மாவட்டத்திலும் நிலப் பதிவுறுக்களை கணினி மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலப் பதிவுறுக்களை கணினிமயமாக்குவதற்கு மாநிலத்தில் முதலில் 50 வட்டாட்சியர் அலுவலகங்களில் அறிமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 50 வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினிகள் நிறுவுவதற்காக மத்திய அரசு 133.00 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. அதற்கிணங்க 50 வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கணினிகள் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கணினிகள் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த 50 வட்டங்களில், சேலம் மாவட்டத்தில் சேலம் வட்டாட்சியர் அலுவலகமும் ஆத்தூர்

[2000 மே 8

வட்டாட்சியர் அலுவலகமும் முதற்கட்டமாகக் கணினிமயமாக்கும் திட்டத்தில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போல மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவாக்க பொருத்தமான மென்பொருட்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, டாக்டர் அனந்த கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரையைப் பெற்று, இந்த நிதியாண்டில் மாநிலத்தில் ஏனைய வட்டாட்சியர் அலுவலகங்களும் முழுமையாகக் கணினி மயமாக்கப்படும். இதில் எடப்பாடி வட்டமும் அடங்கும். இதன்மூலம் வருங்காலத்தில் அரசின் வருவாய்த் துறைப் பணிகள் கணினி மூலமாக நடைபெறும் குறிக்கோளை நோக்கி நாம் செல்ல இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 545, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

545—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***18987—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஒன்றியத்தில் உள்ள மாமண்டூர் காலனி, மாமண்டூர், திருவாதநல்லூர், வாடப்பாடி, நேத்தப்பாக்கம், காட்டேரி, தசராப்பேட்டை, கணிகிலுப்பை, எஸ்.வி. நகரம் மற்றும் புதுப்பேட்டை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க, வாழப்பந்தல் ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஒன்றியத்திலுள்ள மாமண்டூர் காலனி, மாமண்டூர், திருவாதநல்லூர், வாடப்பாடி, நேத்தப்பாக்கம், காட்டேரி, தசராப்பேட்டை, கணிகிலுப்பை, எஸ்.வி. நகரம் மற்றும் புதுப்பேட்டை ஆகிய கிராமங்களுக்கு,



2000 மே 8]

வாழப்பந்தல் குடியிருப்புக்கு அருகில் உள்ள செய்யாற்றில் நீராதாரம் அமைத்து நீர் உறிஞ்சும் கிணறுகள் அமைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடப்பு நிதியாண்டில், அதாவது 2000-2001-ல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் செயலாக்குவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 546, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

546—

**பேருந்து நிலையத்தை மாற்றுதல்**

***22357—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் பேருந்து நிலையத்தை சானடோரியம் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள புல எண் 138-க்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேருந்து நிலையம் அமைக்க, கடப்பேரி கிராமத்தில் புல எண் 138 பகுதி மற்றும் புல எண் 164 பகுதி, ஆகியவற்றில் உள்ள நிலத்தை, தாம்பரம் நகராட்சிக்கு உறுதி மாற்றம் செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. நிலம் பெறப்பட்டதும் திட்டத்தைச் செயல்படுத்த மேல் நடவடிக்கை நகராட்சியால் மேற்கொள்ளப்படும்.

[2000 மே 8

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கே சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய கால்கோள் விழா நிகழ்ச்சியிலேயே அதை அறிவித்தார்கள். ஆனால் அங்கே இருக்கிற நெஞ்சக நோய் மருத்துவ மனையைச் சார்ந்த அதிகாரிகள், சித்த மருத்துவமனை பக்கத்திலேயே இருக்க வேண்டும், சித்த மருத்துவமனைக்கும் நெஞ்சக நோய் மருத்துவமனைக்கும் இடையிலே பேருந்து நிலையம் இருக்கக்கூடாது என்று சொல்வதால், இப்போது புல எண் 139-ல் சித்த மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டு அரசு ஆணை வழங்கப்பட்டுவிட்டது. அந்த இடத்தை மாற்றி, 138-லே வழங்கி, 138-லே பேருந்து நிலையம் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.எஸ்.டி. சாலையில் மத்திய பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான சுமார் 10 ஏக்கரில் நவீன பேருந்து நிலையம் அமைக்க முடிவு செய்து, மத்திய அரசுக்கு இதற்கான செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. மத்திய அரசு மேற்குறிப்பிட்ட இடத்தை, தாம்பரம் நகராட்சிக்குத் தர மறுத்துவிட்ட காரணத்தால், பேருந்து நிலையம் தேவை என்பதால், தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட, ஜி.எஸ்.டி. சாலையை ஒட்டிய சானடோரியம் இரயில் நிலையம் எதிரில் உள்ள கடப்பேரி கிராமம் புல எண் 138-ல் மொத்தம் 7 ஏக்கர் 39 செண்ட் நிலம் மற்றும் புல எண் 164-ல் 5 ஏக்கர் 61 செண்ட் நிலம், ஆக மொத்தம் சுமார் 13 ஏக்கர் பரப்பில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-40

நகர மன்றம் தனது தீர்மானத்தில் அதாவது, தீர்மான எண் 383, நாள் 30-11-1998-ல் மேற்படி அரசு நிலத்தை நகராட்சிக்கு நிலமாற்றம் செய்யவும், பேருந்து நிலையத்தை அமைக்க அரசின் நிதி உதவி பெறவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த நில மாற்றம் செய்யக்கோரி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு நகராட்சி அனுப்பிய கருத்துரு மாவட்ட ஆட்சியர் மற்றும் நிர்வாக ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்டு தற்போது மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் வருவாய்



2000 மே 8]

துறை தீவிர பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நிலம் கிடைக்கப்பெற்றதும் தேவைப்படும் நிதியுதவி பெற்று நகராட்சியால் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்தப் புல எண்ணை மாற்றித் தருவதற்கு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்கூட, நமது நில நிர்வாக ஆணையருக்குப் பரிந்துரை செய்திருக்கிறார். நானும் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அந்த நகலையும் கொடுத்து பரிந்துரை செய்திருக்கின்றேன். எனவே, மறுபரிசீலனை செய்து புலமாற்றம் செய்வதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 'மாற்றிக் கொள்ளலாம்' என்ற உறுதியை என்னிடத்திலே இப்போது தந்திருக்கிறார்கள். அதன்படி மீண்டும் கடிதப் போக்குவரத்து நடத்தி இதை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 517, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**547—**

### விவசாய உபகரணங்கள்

***31865—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்களை இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 மே 8

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஓர் ஊராட்சியை எடுத்து, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, விவசாயிகளைத் தேர்வு செய்து, எப்படி விவசாயப் பணியிலே நாம் ஈடுபட வேண்டும் என்று பயிற்சி கொடுத்து, விவசாயிகளுக்கு மானிய விலையிலே உளுந்து, துவரம் பருப்பு, தட்டைப் பயிர், கடப்பாரை, அரிக்கேன் லைட், சலவைப் பெட்டி போன்ற பொருட்களைக் கொடுக்கிறார்கள். இதற்குக் கிராமத்திலே வரவேற்பு இருக்கிறது. அதை ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு பஞ்சாயத்து என்று எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை சம்பந்தப்பட்ட உபகரணங்களை மானிய விலையிலே நாம் வழங்குகிறோம். அதிலும் குறிப்பாக, கடப்பாரை, மண்வெட்டி போன்றவற்றை மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் இரண்டும் இணைந்து, இப்போது 50 சதவிகித மானியத்தில் வழங்கி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இலவசமாக இடுபொருட்களை வழங்குகிறபோது, அங்கே இருக்கின்ற விவசாயிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதன்மூலம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இதுபோன்ற இலவசமான பொருட்களை வழங்குகிறபோது யார் எல்லாம் பயன்பெற வேண்டுமோ அவர்களுக்கென்று இல்லாமல் வேறு சிலர் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி பயன்பெறுகிறார்கள். ஆக, உண்மையான விவசாயிகள் பயனடையக்கூடிய விதத்தில் இதுபோன்ற ஒரு கமிட்டி அமைத்து வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 மே 8]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே இருக்கின்ற வேளாண்மை இணை இயக்குநர்கள் விவசாயிகளிடத்திலேயிருந்து வரக்கூடிய அந்தக் கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து சிறு, மிகச் சிறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆகியோரை முறையாகத் தேர்வு செய்து இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்குச் சொன்னதைப்போல அரசுக்குப் புகார் இல்லை. அப்படி ஏதாவது தவறாக விநியோகிக்கப்பட்டிருந்தால், ஆதாரத்தோடு என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகள் நவீன முறையில் சிறிய டிராக்டர்கள், கதிர் அடிக்கின்ற இயந்திரங்கள் ஆகியவற்றை அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, துறையின் மூலமாக, மானியமாக வழங்குவதை அதிகப்படுத்தி வழங்குவதற்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ், விசை உழவுகள், (Power Tillers) விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் அதிகபட்சமாக, 30,000 ரூபாய் வரை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று குறியீடு நிர்ணயித்து அனுமதிக்கிறார்கள். அதைத்தான் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் விரிவாக்குவதற்கு இயலாது.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 548, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

[2000 மே 8

548—

## அணைக்கட்டு

***7227—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பச்சையாற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அணை எப்போது கட்டப்படும்?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் பச்சையாற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி, பச்சையாற்று அணைக்கட்டு பற்றி நேரில் சென்று ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த இடத்திலே தொலைக்காட்சிக்கெல்லாம் பேட்டியளித்தார்கள், "அணை கட்டுவதற்கு சரியான இடம், உகந்த இடம் இதுதான்" என்று. ஆகவே அந்த விவசாயிகளின் நீண்ட நாளைய கோரிக்கையை மறுபரிசிலனை செய்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணை கட்டுகிற இடத்தை நானும் சென்று பார்த்தேன். ஏற்கெனவே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, இந்தத் திட்டத்தைக் கைவிடலாம் என்று அரசு கைவிட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த இடத்திற்குச் சென்று நான் பார்வையிட்ட பிறகு மீண்டும் ஒருமுறை இதை ஆய்வு செய்யும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டேன். அவர்களும் ஆய்வு செய்து அறிக்கை தந்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தால் 1800 ஏக்கர் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறும் என்றும், 1200 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு நீர் ஆதாரம் உறுதி செய்யப்படும் என்றும்



2000 மே 8]

தெரிவித்திருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் நில நிருவாக ஆணையாளர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் இதனுடைய விகிதாச்சாரம்—Benefit-Cost Ratio—நாம் போடுகிற பணத்திற்கு எவ்வளவு திரும்பி வரும் என்று ஒரு கணக்கை, வட்டிக் கணக்கைப் போடுவார். அதன் அடிப்படையிலேதான் இங்கே விடை தரப்பட்டிருக்கிறது, 'இல்லை' என்று. ஆனால் கிட்டத்தட்ட நாம் இப்பொழுது கட்டிக் கொண்டிருக்கிற 39 அணைக்கட்டுகளில், 4 அணைக்கட்டுகளுக்கு மட்டும்தான் Benefit-Cost Ratio இருக்கிறது என்று நில நிருவாக ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றல்ல, 1989-ல் மட்டுமல்ல, அவர் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோதே ஒன்றைச் சொன்னார், 'இந்த Benefit-Cost Ratio என்பதை நீங்கள் பார்த்தால் விவசாயிகளுக்கு நாம் நன்மை செய்ய முடியாது. எவ்வளவு விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று பாருங்கள், அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று தெரிவித்திருக்கிறார். அந்த யோசனையின் அடிப்படையில், அறிவுரையின் அடிப்படையில் இந்தத் திட்டம் சாத்தியக்கூறானது. ஆனால் நில நிருவாக ஆணையாளரின் நிருவாகத்தின் அடிப்படையில் இது சாத்தியமற்றது. எல்லாவற்றையும்விட இதற்கு 30 கோடி ரூபாய் வேண்டும். நிதிநிலை ஆதாரம் இடம் தருமானால் அரசு இதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 549, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

549—

## பசுமை வேலி

***25226—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுச் சுவர் இல்லாத அரசுப் பள்ளிகளில் வனத் துறையின் மூலமாகப் பசுமை வேலி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2000 மே 8

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்தான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பள்ளிகள், அரசுக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், மற்றும் மயானம் போன்றவற்றுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு உள்ளாட்சித் துறையின் சார்பாக நிதி ஒதுக்குவதில்லை. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்துகூட இது போன்ற சுற்றுச்சுவர் கட்ட அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகவே வனத் துறையின் மூலமாக இதுபோன்ற அரசுக் கட்டடங்கள், பள்ளிகள், மயானங்கள் போன்றவற்றுக்குப் பசுமை வேலி அமைத்தால், செலவும் குறைவாக இருக்கும்; பாதுகாப்பாகவும் இருக்கும்; இயற்கை வளமும் பாதுகாக்கப்படும். இந்தத் துறை இதுகுறித்து மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கென்று தனி நிதி பொதுப் பணித் துறையிடம் இல்லை. பொதுவாகக் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டு, அந்தக் கல்வித் துறையின் மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் "இன்னின்ன பள்ளிகளுக்கு இன்னின்ன பணியை நீங்கள் செய்யுங்கள்" என்று எங்களுக்கு எழுத்து மூலமாகத் தருகிறபோதுதான், அவர்கள் தருகிற நிதியிலிருந்து பொதுப்பணித் துறையின் கட்டடப் பிரிவு அந்தப் பணியை நிறைவேற்றுகிறது. வனத் துறையிலிருந்து செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது தெரிவித்தார். வனத் துறையின் மூலம் இப்படிப்பட்ட பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் எழுப்புவதற்கு எந்தவிதமான நிதிவசதியும் இல்லை. அந்தப் பணியை வனத் துறை செய்யாது. காரணம், காடுகள் வளர்ப்பது, மரங்களை நடுவது, பசுமைகளைப் பெருக்குவதுதான் வனத் துறையினுடைய நோக்கம். ஆனால் TAP புரோகிராம் பிரகாரம், காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சில இடங்களில் சில ஊர்களை எடுத்துக்கொள்கிறபோது, அந்த ஊர்களுக்கு எது முக்கியத்துவமோ, அந்த ஊரில் பள்ளி கட்டுவது, குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைப்பது, சாலைகள் போடுவது, தொலைக்காட்சி நிலையம் அமைப்பது, பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தருவது என்பது போன்ற இந்தப் பணிகளை அந்தக் கிராமத்தில் வனத் துறை செய்யும். அப்படிப் பார்த்தால் ஒரு ஜில்லாவுக்கு 1,2,5,6 கிராமங்கள்தான் வரும். எனவே, எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டுவது என்பது சாத்தியமானது அல்ல.



2000 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 550, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**550—**

## கட்டண விதிவிலக்கு

***24203—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்துகளில் தென்னங்கன்றுகள் ஏற்றிச் செல்ல கட்டணம் வசூலிக்காமல் அரசு விதிவிலக்கு அளிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசுப் பேருந்துகளில் தென்னங்கன்றுகளை ஏற்றிச் செல்ல கட்டணம் வசூலிப்பதிலிருந்து அரசு விதிவிலக்கு அளிக்காது.

முற்பகல் 9-50

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். இலவச மின்சாரம் தங்களுடைய இதயத்தைவிட்டு நீங்காத ஒரு சாதனை என்று விவசாயிகள் போற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, இலவச பஸ் பாஸ் திட்டம், அபராத வட்டித் தள்ளுபடி, தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின் இணைப்பில் சலுகை, உழவர் சந்தைக்கு எடுத்துச் செல்லப்படும் காய்கறிகளுக்கு, கீரைகளுக்குக் கட்டணமின்மை, இப்படிப் பல சலுகைகளை வழங்குகிற நம்முடைய அரசு, தென்னங்கன்றுகளை நட்டு, அதை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களை மேலும் ஊக்கப்படுத்துகின்ற வகையிலே, தென்னங்கன்றுகளை பஸ்களிலே ஏற்றிச் செல்வதற்குக் கட்டண விலக்கு அளிக்குமா என்றும், அதேபோல, அந்த முடிவை

நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு தென்னங்கன்று மட்டும் பேருந்துகளிலே இலவசமாக எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட தென்னங்கன்றுகளை எடுத்துச் செல்லவேண்டுமானால், ஒரு தென்னங்கன்றுக்கு இரண்டு ரூபாய் என்று, எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் வசூலிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல எல்லாவற்றிற்குமே இலவசமாகக் கொடுத்துவிட்டால், பேருந்தையே இலவசமாக விடுகிற சூழ்நிலை வரும்; அப்படிச் செய்தால் பேருந்தே ஓட்ட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பல வழித்தடங்களில் பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒவ்வொருவருக்காகவும் நாம் இவ்வாறு இலவசமாகக் கொடுத்துக் கொண்டு சென்றால், பேருந்துகளை இயக்க இயலாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்கிற சூழ்நிலை இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைப் பேருந்து நிறுவனங்கள் மிகவும் நட்டத்திலே இயங்குகின்றன. இந்த நிலையில், தொடர்ந்து இலவசம், இலவசம் என்பது ஆரோக்கியமான ஒரு நிலையல்ல. ஆகவே, இனி எதற்குமே இலவசம் வழங்கப்படமாட்டாது என்ற நிலையை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடித்தளத்து மக்கள் கல்வி பெற வேண்டுமென்ற உணர்வோடு, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள் கல்வி பெற வேண்டுமென்ற உணர்வோடு, அதைச் செய்தார்கள். அதேபோல, உழவர் சந்தையிலே சாதாரண விவசாயப் பெருங்குடி மக்கள் நன்மை பெற வேண்டுமென்ற உணர்வோடு, அந்த நட்டத்தைக் கூட போக்குவரத்துக் கழகங்கள் ஈடுகட்டிக்கொள்ள வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் அதை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, தேவையானபொழுது இதுபோன்ற திட்டங்களை அறிவித்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மேலும் அதை





விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தைகளுக்குக் காய்கறிகளை ஏற்றிச் செல்லும்போது சில Conductors, Drivers திருநெல்வேலி போன்ற இடங்களில் அதை ஏற்ற மறுக்கிறார்கள். ஆகவே, உழவர் சந்தைகளுக்குக் காய்கறிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசு, Conductors மற்றும் Driversக்குத் தகுந்த ஆணையைப் பிறப்பிக்குமா? அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட நேரத்தில் உழவர் சந்தைக்குக் காய்கறி ஏற்றிச் செல்ல முடியவில்லை. ஆகவே, தனியார் பேருந்துகளிலும் இலவசமாகக் காய்கறிகள் ஏற்றிச் செல்வதற்கு அரசு சிறப்பாணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒவ்வொரு நிர்வாக இயக்குநரின் மூலமாக ஓட்டுநருக்கும், நடத்துநருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுபோன்ற உழவர் சந்தைப் பகுதிகளிலே தனியாகப் பேருந்துகள் இயக்குகின்ற காலகட்டங்களில் பொதுமக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று உறுதியாக ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி அங்கே ஏதேனும் சில பேருந்துகளில் அவ்வாறு ஓட்டுநர்களோ, நடத்துநர்களோ ஏற்றமாட்டேன் என்று சொன்னால், அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது. தனியார்ப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு முடிவு எடுக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *551*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**551—**

## நகரப் பேருந்து

***25105—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டியிலிருந்து கொடை ரோடு வழியாக காந்தி கிராமத்திற்கு நகரப் பேருந்து விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் வாடிப்பட்டியிலிருந்து 26.5 கிலோமீட்டர் தூரத்தில் காந்தி கிராமம் அமைந்துள்ளது. வாடிப்பட்டி, கொடை ரோடு, காந்தி கிராமம் வழியாகக் குறைந்த தூரத் தடமான மதுரை-திண்டுக்கல் பேருந்துகள் உட்பட அரசுப் பேருந்துகள் மூலம் 332 தனிச் சுற்றுகளும், தனியார் பேருந்துகள் மூலம் 144 தனிச் சுற்றுகளும் இயக்கப்பட்டு வருகின்றன. நேரடிப் பயணிகள் விரைவான பயணத்திற்காகப் புறநகர்ப் பேருந்துகளையே பயன்படுத்துவார்கள். மேற்கண்ட பேருந்துகள் அனைத்தும் வாடிப்பட்டி, அம்மையநாயக்கனூர், கொடை ரோடு, காந்தி கிராமம் ஆகிய ஊர்களில் நின்று, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. எனவே, வாடிப்பட்டி-காந்தி கிராமம் என்ற வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி கிராமம் என்பது அந்தப் பகுதியிலே மிகப் பெரிய கிராமியப் பல்கலைக் கழகம் உள்ள இடம். அங்கு படிக்கின்ற மாணவர்களும், ஊழியர்களும் இந்தப் பகுதியிலிருந்து நிறையச் சென்று வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது போல, எல்லாப் பேருந்துகளும் இந்த இடங்களிலேயெல்லாம் நிற்பதில்லை என்கிற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், அரசின் மூலமாக நகரப் பேருந்து இயக்கினால், அது மிகுந்த வருவாய் ஈட்டுகின்ற வழித்தடமாகவும் இருக்கும். அது தேசிய நெடுஞ்சாலை என்கிற காரணத்தினால், பேருந்துக்குப் பழுது ஏற்படுகின்ற நிலையும் குறையும். எனவே, அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து, நகரப் பேருந்து இயக்க முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே தேவையான அளவிற்கு அங்கே பேருந்துகள் இயங்குகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, எங்கேனும் நிறுத்தவில்லையென்று சொன்னால், நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அவர் சொன்னார், நகரப் பேருந்துகளை விட்டால் அதிக வருமானம் வரும் என்று. அது தவறான



செய்தி. ஏனென்றால், புறநகர்ப் பேருந்துகளிலே கட்டணம் 5 ரூபாய் 75 பைசா. நகரப் பேருந்துகள் என்றால் நான்கு ரூபாய்தான் வரும். ஒரு டிக்கெட்டுக்கு ஒன்றே முக்கால் ரூபாய் குறைந்துவிடும். அதனால்தான் நகரப் பேருந்துகளைவிட—இந்தச் சாலைகளிலே அதிகப் புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்படுகிற காரணத்தினால்—புறநகர்ப் பேருந்துகளே அங்கே போதுமான அளவிற்கு இயக்கப்படுகிற காரணத்தினால், நகரப் பேருந்துகளை இயக்குகிற ஆலோசனை எதுவும் இல்லை.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழியாக வந்து பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை. நிறைய பேருந்துகள் வருகின்றன. ஆயிரக்கணக்கான பேருந்துகள்—மதுரை-திண்டுக்கல், மதுரை-திருச்சி—வந்தால்கூட, அங்கே எந்த இடத்திலும் நிற்பதில்லை. அந்த அளவுக்கு ஏறுவதற்கு இடமில்லாமல் இருக்கின்றார்கள். ஆகையினாலே, மாண்புமிகு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கையைத் தயவுசெய்து மீண்டும் பரிசிலனை செய்து, பஸ் விடுவதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்து நாட்களுக்கு முன்புகூட அந்தப் பகுதியிலே பயணம் செய்தேன். பேருந்துகள் குறித்து ஆய்வு செய்வதற்காகவே, தேனி மாவட்டத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களையெல்லாம் வைத்துக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக ஒரு ஆய்வுக் கூட்டமே நடத்தப்பட்டது. அங்கே இதுபோன்ற கோரிக்கைகள் ஏதும் எழுப்பப்படவும் இல்லை. பொதுவாகவே, அந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், ஓரளவிற்கு மக்களுடைய தேவைகளை ஏற்கின்ற அளவிற்குப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, பேருந்துகள் இல்லாத இடத்திலே நகரப் பேருந்துகளைக் கேட்பதுதான் நியாயமாக இருக்க முடியும். அங்கே நிறைய பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், நகரப் பேருந்துகள் இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 552, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

552—

**மேல்நிலைப் பாலம்**

***26815—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேலூர் அருகே பெரிய ஓடை தாழ்நிலைப் பாலமாக உள்ளதால், மேல்நிலைப் பாலமாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதைகளின் குறுக்கே ஓடைகளிலே பாலம் கட்டுவது, அல்லது கிராமச் சாலைகள் திட்டத்திலே சாலைகளைத் தேர்வு செய்வது போன்ற பணிகளை மேற்கொள்கின்ற நேரத்திலே, எந்த அடிப்படையிலே தேர்வு செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதி, பேருந்துகள் நீண்டகாலமாகச் சென்றுகொண்டிருக்கக்கூடிய பகுதி, மழைக் காலங்களிலே தீவுகளைப் போல காட்சியளிக்கக்கூடிய பகுதி, அப்படிப்பட்ட பகுதிகளில் எல்லாம், ஓடையின் குறுக்கே பாலம் கட்டவேண்டுமென்று சொல்லி, நீண்ட நாட்களாகக் கோரி வருகிறோம். அதைப் போலவே, கிராமச் சாலைகள் திட்டத்திலே நீண்டகாலமாக——

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை இப்போது பொது நிகழ்வைப்பற்றி எல்லாம் பேச விடமாட்டேன். குறிப்பிட்டு உங்கள் தொகுதியில் ஏதாவது ஒன்றைக் கேளுங்கள். அவ்வளவுதான். நீங்கள் தமிழ்நாட்டிலேயுள்ள அத்தனை தரைப் பாலங்களையும் கட்டவேண்டுமென்றால் அது கேள்வியா? (குறுக்கீடு)



2000 மே 8]

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. தொகுதியில்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொன்னால், நீங்கள் "உன் தொகுதி சம்பந்தமாக என்றால் அனுமதி இல்லை" என்று சொல்வீர்கள் என்றுதான் அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு) என்னுடைய தொகுதியிலே அரக்காசாளி என்ற ஊருக்கு ஆறு ஆண்டுகளுக்கு மேலாகப் பேருந்து சென்றுகொண்டிருக்கிறது. மழைக் காலங்களிலே அந்த ஓடையிலே நீர் வந்துவிட்டால், தீவைப் போலக் காட்சி அளிக்கிறது. தருமபுரிக்கு பஸ் செல்லமுடியாத நிலையுள்ளது. ஆகவே அந்தப் பாலம் கட்டவேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கேட்கிறோம். அதைப் போலவே இந்தூர்—பாலவாடிக்கான சாலையைக் கிராமச்சாலைத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகக் கோரி வருகிறோம். நான்கு ஆண்டுகளாகப் பேருந்து செல்லக்கூடிய பகுதி. இந்த ஆண்டுகூட அந்தப் பாதை சேர்க்கப்படவில்லை. ஆகவே, இதெல்லாம் இந்த ஆண்டு சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியோடு நேரடியாகத் தொடர்பு இல்லாத கேள்வியாக இது இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கிராமப்புற இணைப்புச் சாலைகள் திட்டம் என்பது, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சிச் சாலைகள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, அவை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக NABARD நிதியுதவியோடு அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தச் சாலை பஞ்சாயத்து யூனியன்—ஊராட்சி ஒன்றியச்—சாலையா, ஊராட்சிச் சாலையா அல்லது ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறையோடு இருக்கக்கூடிய இதர மாவட்டச் சாலையா என்பது எனக்குத் தெரியவில்லை. இதர மாவட்டச் சாலையாக இருந்தால், கிராமப்புற இணைப்புச் சாலையிலே எடுத்துக்கொள்ள இயலாது; NABARD திட்டத்தின் மூலம் அதை மேம்படுத்தலாம். அதுகூட இந்த ஆண்டு NABARD திட்டத்தில் அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்குப் பணம் தர முன்வரவில்லை. O.D.R. என்று சொல்லக்கூடிய இதர மாவட்டச் சாலைகளிலே பாலம் கட்டுவதற்கு மட்டும் அனுமதி

[2000 மே 8

அளிக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்குமானால் அல்லது ஊராட்சிச் சாலையாக இருக்குமானால், அதைத் தெரிவித்தால் கிராமப்புறச் சாலைத் திட்டத்திலே எடுத்துக்கொள்வதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூருக்கும், காட்பாடிக்கும் பாலாற்றின் குறுக்கே செல்லக்கூடிய பாலம் உடைந்து விழுந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தப் பழைய பாலத்துக்கு 1½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. பகுதி-2 திட்டத்திலே ஏற்கெனவே சேர்த்துவிட்டார்கள் என்றுகூட அமைச்சர் தெரிவித்தார். ஆனால், இன்னும் அந்தப் பாலம் சரிசெய்யப்படாமல் இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலே—ஐந்து கண்மாய்கள் உடைந்துவிட்டிருக்கின்றன—ஐந்து கண்மாய்களை மீண்டும் புதுப்பித்து, அந்தப் பாலத்தைச் சரிசெய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பழைய பாலம் இடிந்துவிட்ட காரணத்தினாலும், இடியப்போகிறது என்ற நிலை ஏற்பட்ட காரணத்தினாலும்தான், புதிய பாலம் கட்டி, அது போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் புதிய பாலத்தோடு பழைய பாலத்தையும் கொஞ்சம் ரிப்பேர் செய்து கொடுங்கள் என்றுதான் மாண்புமிகு உறுப்பினரும் கேட்கிறார்; மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் கேட்டுக்கொண்டு இருக்கிறார், அதேபோல, ஆறகாட்டிலே ஒரு பழைய பாலம் இருக்கிறது. புதிய பாலம் ஒன்று இருக்கிறது; ஆற்காட்டுக்குச் செல்லக்கூடிய அந்தப் பழைய பாலத்தையும் கட்டித் தாருங்கள் என்று அங்கேயும் கோரிக்கை இருக்கிறது. ஒரு பழைய பாலம் சிரழிந்துவிட்டது; புதிய பாலம் கட்டப்பட்டு இருக்கிறது. மீண்டும் பழைய பாலத்தையும் ரிப்பேர் செய்யச் சொல்வது பொருத்தமுடையதாகாது. என்றாலும் கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அது பரிசீலிக்கப்படும்.



2000 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *553*, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**553—**

**பாலம்**

**•36814—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், நாகநதி ஊருக்கும், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சிக்குமிடையே ஓடும் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் அல்லது தரைப்பாலம் கட்டி, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நாகநதியின் குறுக்கே மேம்பாலம் அல்லது தரைப்பாலம் அமைக்கப்பட வேண்டிய இடமானது, நெடுஞ்சாலைத் துறையால் இதர மாவட்டச் சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் மத்திய சிறைச்சாலை - அமர்த்தி சாலை (கி.மீ. 0/0-14/4)-யின் தொடர்ச்சியாகச் செல்லும் வனத் துறைப் பராமரிப்பில் உள்ள சாலையாகும். இச்சாலையின் நீளம் 16.4 கிலோமீட்டர் ஆகும். மேலும், பாலம் அமைக்கப்பட வேண்டிய இடமானது, வனத் துறையின் பராமரிப்பில் உள்ள சாலைப் பகுதியாக உள்ளதால், மேற்கண்ட பாலத்தை வனத் துறையின் அனுமதி பெற்ற பின்னர் அமைக்க வேண்டியுள்ளதால், இதனை இத்துறையின் வாயிலாக மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும் வாழ்கின்ற நடுத்தர ஏழை மக்களுக்கு ஜவ்வாது மலைதான் கொடைக்கானலும் ஊட்டியுமாகும். ஜவ்வாது மலையில் ஒரு Observatory — வானிலை ஆராய்ச்சி நிலையம் — இருக்கிறது. அதைப் பார்ப்பதற்காக சென்னை மற்றும் பல நகரங்களில் இருந்து உல்லாசப் பயணிகள் அதிகம் பேர் வருகிறார்கள். அப்படி வருபவர்கள் எல்லாம் அந்த ஆற்றின் வழியாகத்தான் செல்ல வேண்டும். அப்படிச் செல்வது

[2000 மே 8

மிகச் சிரமமாக இருக்கிறது. மேலும், அப்பகுதி வாழ் மக்கள் எல்லாம் பல ஆண்டுகாலமாக இதைக் கோரி வருகிறார்கள். இது வனத் துறையைச் சார்ந்தது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அத்தகவல் சரியாக இருக்குமா என்று தெரியவில்லை. இருந்தாலும், வனத் துறையினுடைய அமைச்சர் வேலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதாலும், அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு என்ற காரணத்தினாலும், அமைச்சரைக் கலந்துகொண்டு மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இந்தச் சாலை 16.4 கிலோமீட்டர் நீளம் இருக்கிறது. அந்த 16.4 கிலோமீட்டர் இடத்திலே இருந்து அப்பால் செல்லக்கூடிய சாலை, வனத் துறைக்குச் சொந்தமான சாலை. எனவே, அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டப்பட வேண்டுமானால், வனத் துறையினுடைய அனுமதி கட்டாயம் தேவை. எனவே, வனத் துறையினுடைய அனுமதியை நாம் கேட்டு, வனத் துறை அனுமதிக்குமானால் பாலம் கட்டலாம்; வனத் துறை மறுக்குமானால் பாலம் கட்டுவதற்கு இயலாது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்தத் துறை பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 554, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**554.**

**நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள்**

***4511—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பற்ற நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அரசின் சார்பாக ஏதேனும் உதவிகள் செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



2000 மே 8]

(ஆ) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கல்விக்கு உதவும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அரசு நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியில் ஒரு பகுதி நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுப் பணியில் ஈடுபடும், அரசு சார்பற்ற தன்னார்வ நுகர்வோர் சங்கங்களுக்கு நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள், வசதி இல்லாதவர்கள் எல்லாம் இன்று நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுக்குச் சென்று, தங்களுக்கு விரைவாக நீதி கிடைக்கும் என்று நம்பியுள்ள நிலையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனரா என்பதையும், கடந்த ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புக்கு மாத்திரம் தமிழகத்திலே எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. என்பதையும், வரும் ஆண்டிலே அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலமாக அதிகமாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளும் பயன்பெறுவதற்கு அரசு திட்டத்தைச் செயல்படுத்திக் கொடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே ஆறே ஆறு நுகர்வோர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்தான் இருந்தன. இன்றைக்கு தமிழகத்திலே 300-க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வந்திருக்கின்றன; நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் புதிதாகத் தோன்றி இருக்கின்றன. 1992-93 ஆம் ஆண்டு, ஒரு ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, 2000-2001-ல், அதாவது இந்த ஆண்டு, 3½ இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் இந்த நிறுவனங்களுக்குச் செலவு செய்வதற்காக, விளம்பரப்படுத்துவதற்காக, Notice அச்சடித்து அந்தக் கொள்கைகளைப் பரப்புவதற்காக இந்த ஆண்டு 10 இலட்ச ரூபாய் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே இவர்களுக்கு மட்டும் 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுகிறது. இந்த அரசு வந்த பிறகு 3 முறை தலைமை அளவிலே அனைவரையும் அழைத்துக் கூட்டம் போட்டு, உணவுத் துறை ஆணையர் அவர்கள் அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளைக் கேட்டு,

[2000 மே 8

தீர்த்திருக்கிறோம். அரசு சிறப்பாக அவர்களுக்கு உதவிக் கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 555, திரு. திருவோணம் இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**555—**

**நெல் கொள்முதல் நிலையம்**

***25141—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை கிராமத்தில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், ஓரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை கிராமத்தில், கடந்த சம்பா '95 பருவத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, மிகக் குறைந்த அளவில் 64 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. சம்பா '99 பருவத்தில், இக்கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க, கோரிக்கைகள் பெறப்படாததால், இங்கு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. இருப்பினும், ஈச்சங்கோட்டை கிராமத்திற்கு மிக அருகில், அதாவது 2 கிலோமீட்டர் முதல் 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள வடக்கூர் (2.5 கிலோமீட்டர்), பஞ்சநதிக்கோட்டை (4.5 கிலோமீட்டர்), கே.வி. கோவிலூர் (5 கிலோமீட்டர்), செல்லம்பட்டி (5.5 கிலோமீட்டர்), சோழபுரம் (6 கிலோமீட்டர்) ஆகிய கிராமங்களில் சம்பா '99 மற்றும் நடப்பு சம்பா 2000 பருவங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2000 மே 8]

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஒவ்வொரு கிராமத்திற்கும் இத்தனை, இத்தனை ஏக்கர் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. அத்தனை ஏக்கர்களிலும் குறுவை சாகுபடி, சம்பா சாகுபடி செய்யப்படுகிறது. இதிலே குறுவை சாகுபடி செய்கிற இடத்திலே சம்பா சாகுபடி செய்கிறபோதுதான் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. குறுவை சாகுபடி செய்கிற நேரத்திலேயே குறுவைக் கொள்முதல் நிலையத்தினைத் திறந்தால், குறுவைக் கொள்முதல் வருகிறபோது, கூடுதலான நெல்லைக் கொள்முதல் செய்ய முடியும். ஆகையால் காலம் கடந்து சம்பா கொள்முதல் நிலையம் திறப்பதினாலே அங்கே குறுவை நெல் வருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. அதுமட்டுமல்லாமல், கட்டடம் கட்டப்படாமல் தரையில் வைத்திருக்கிற காரணத்தினாலே, பொதுவான இடங்களிலே—வெளியே—இருந்து வரும், மழையிலே அந்த நெல் கெட்டுப் போய்விடுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு, ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திற்கும் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், தஞ்சை ஜில்லாவிலே இருக்கக்கூடிய அத்தனை கொள்முதல் நிலையங்களையும் குறுவைச் சாகுபடிக்கே திறப்பதற்கும் ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களிலே இயங்குகின்றன. அதிலே குறுவைச் சாகுபடி செய்கிற நேரத்திலே இணைக் கொள்முதல் திட்டம்தான் இருக்கிறது. ஏகபோகக் கொள்முதல் திட்டம் இல்லை. இணைக் கொள்முதல் நிலையங்களை அதிகமான அளவிற்கு, விவசாயிகள் விருப்பப்பட்டால், அந்த இடங்களிலே திறக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே விவசாயிகள் நெல்லை விற்க முடியவில்லை. ஆகவே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அரசு திறக்க வேண்டுமென்ற கோரிக்கை மனுவை மாண்புமிகு உறுப்பினர் தருவாரேயானால், நிச்சயமாக அங்கே கொள்முதல் நிலையம் திறக்கப்படும். இதுவரை 200-க்கும் மேற்பட்ட இடங்களிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் 2 இடங்களிலே, 3 இடங்களிலே கட்டடம் கட்டப்பட்டு வந்ததை மாற்றி, கடந்த ஆண்டு 20 இடங்களிலே கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர்

அவர்கள் உத்தரவு தந்திருக்கிறார்கள். அதன்படி கடந்த ஆண்டு கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் தொடர்ந்து கட்டப்பட்டு வருகிறது. மிக முக்கியமாக, அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படும் இடங்களிலே முன்னுரிமை தந்து, நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் கோடை சாகுபடி, அறுவடைக்கு வருகிற நிலையில், தயார் நிலையில் இருக்கிறது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் மூலம் விவசாயிகள் கோடை சாகுபடி மூலம் விளைவித்த நெல்லை அரசு கொள்முதல் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு இப்போது இணைக் கொள்முதல் கொள்கையை அறிவித்திருக்கிறது. விருப்பப்பட்டால் வியாபாரிகளிடம் விற்கலாம். இல்லையென்று சொன்னால், அரசாங்கத்திடம் விற்கப்பட வேண்டுமென்றால், ஆங்காங்கே இருக்கிற வட்டக் கிடங்குகளின்மூலம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதிகமான அளவிலே தொடர்ந்து கோரிக்கைகள் பெறப்படுமானால் மீண்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, அந்த நெல் கொள்முதல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஊக்கத் தொகையாக வெறும் 35 ரூபாய் மட்டும்தான் தர முடியும். ஏகபோகக் கொள்முதல் என்றால் 50 ரூபாய் வழங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 556, திரு. டி. மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**556—**

## இ.எஸ்.ஐ. திட்டம்

***34352—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் நலம் பெற இ.எஸ்.ஐ. திட்டம் அமலாக்கப்பட்டுள்ளதா?



(ஆ) ஆம் எனில், எத்தனை மருத்துவர்கள் நியமனம் பெற்று நிரந்தரமாகப் பணியாற்றுகிறார்கள்?

(இ) தேவையான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளனவா?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேரவையில் தங்கள் அனுமதியுடன் திருத்திய விடைகளை அளிக்கிறேன்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் பயன்பெறும் பொருட்டு, நித்திரவிளை, இடைக்கோடு, மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் 3 மருத்துவர்களைக் கொண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 1-9-1999 முதல் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மேற்குறிப்பிட்ட மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் மொத்தம் 9 (ஒன்பது) மருத்துவர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போது மாற்றுப் பணி அடிப் படையில், அருகிலுள்ள மருந்தகங்களிலிருந்து வரும் மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள். எனினும், 15-5-2000 முதல் இம்மருந்தகங்களுக்கு நிரந்தர அடிப்படையில் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(இ) இம்மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துகள் அனைத்தும் போதுமான அளவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவசரத் தேவைகளுக்கு உள்ளூர்க் கொள்முதல் மூலம் மருந்துகள் வாங்குவதற்கு மருந்தகங்களில் பொறுப்பு மருத்துவ அலுவலர்கள் மற்றும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலருக்கு, அரசாணை எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10-3-1999-ல் போதுமான நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அவசரக் காலங்களிலும், தேவை ஏற்படும் சூழலிலும் மருந்துகள் வாங்கி வழங்கும் நிலை உள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின் மூலமாக, முந்திரி ஆலையில் வேலை செய்கின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவிக்கென நீண்டகாலக் கோரிக்கைகளுக்கும் பின்னால் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னபடி இந்த மருந்தகங்கள்

[2000 மே 8

ஆரம்பிக்கப்பட்டன. கடந்த வாரம் நான் அந்தப் பகுதிக்கு—குழித்துறைப் பகுதிக்கு—சென்று விசாரிக்கிறபோது, மதுரையிலிருந்து ஒரு மருத்துவர் வருகிறார். அவர் காலையிலே 7-00 மணிக்குப் புறப்பட்டு, 11-00 மணி அளவிலே மருத்துவமனைக்கு வருகிறார். 1½ மணி, 2 மணி அளவிலே புறப்பட்டுச் செல்கிறார். எந்தத் தொழிலாளர்களுக்கும் அதனால் எந்த உதவியும் கிடைப்பதில்லை. அங்கே மருந்து வேண்டுமென்று கேட்டால், மருந்தும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தகவல்களைத் தந்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு அது சரியாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, இந்த மூன்று மருத்துவமனைகளிலும் நிரந்தரமாக அந்தத் தொழிலாளர்களுக்கு மருத்துவம் செய்கின்ற வகையில், உதவி கிடைக்கின்ற வகையில் நிரந்தரமான மருத்துவர்களை நியமனம் செய்வதன் மூலமாகவும், தேவையான மருந்துகளைத் தருவதன் மூலமாகவும், மிகவும் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு அரசினுடைய உதவி கிடைக்கப்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் முந்திரித் தொழிலாளர்களுக்கு இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின் பலன் போய்ச் சேராமல் இருந்தது. ஆனால், கலைஞர் அவர்கள் தலைமையிலுள்ள இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல ஆயிரக்கணக்கான முந்திரித் தொழிலாளர்கள் பயன்பெற, இப்போது ESI Act, 1948, 1(3)-வது பிரிவைத் திருத்தி அதனுடைய நன்மைகள் அனைத்துத் தொழிலாளர்களுக்கே ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய மாவட்டத்தில் 3 இடங்களைச் சுட்டிக்காட்டி, "அங்கே மருத்துவமனைகள் உள்ளன; ஆனால் டாக்டர்கள் வந்து போகிறார்கள்" என்று சொன்னார். வந்து போவது உண்மைதான். ஆனாலும், அந்த நிலைமையை மாற்றி 15-5-2000-லிருந்து Medical Officers 3 பேர், நர்ஸ் 2 பேர், Junior Assistant-*cum*-Typist-1, Assistant-1 ஆகியோர் அங்கே நிரந்தரமாக Redeployment அடிப்படையிலே பணி செய்ய இருக்கிறார்கள்.



2000 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 557, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**557—**

**மாணவிகள் விடுதி**

**•26075—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், மழையூரில் பிற்பட்ட மாணவிகள் விடுதி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், மழையூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவிகள் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற மழையூர் உயர்நிலைப்பள்ளியில் ஏந்தல், எட்டித்தாங்கல், கோதண்டபுரம், கொரசல்வாடி, புதூர், வணக்கம்பாடி உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட கிராமப்புறங்களில் ஏழையெளிய மாணவிகள் கல்வி பயில்கின்றார்கள். அதனுடைய அவசியத்தை உணர்ந்து, அங்கேயே, மழையூரிலேயே தங்கிக் கல்வி பயில்கிற வண்ணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, வரும் மானியக் கோரிக்கையிலேயே இந்தப் பள்ளிக்குப் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் தங்கும் புதிய விடுதி அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்கீழ் 972 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 25 மாணவர் விடுதிகளும், 12 மாணவியர் விடுதிகளும், ஆக மொத்தம் 37 விடுதிகள் இயங்குகின்றன. தற்போது இருக்கும் விடுதிகளை மேம்படுத்த

வேண்டியிருப்பதால், அரசு நிதிநிலையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 558, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**558—**

### சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

***25232—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் தூசு, புகை மற்றும் கழிவு நீரினால், சுற்றியுள்ள கிராமங்கள் பாதிக்கப்படுவதோடு, நிலத்தடி நீரும் கெடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவுத் இந்தியா சுகர்ஸ் என்ற நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற இந்தச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர், தூசு, தும்புகள், புகை இவற்றால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய 20 கி.மீ. தூரத்தில் உள்ள கிராமங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அந்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுத்து, அந்த மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், முண்டியம்பாக்கத்தில் 1965 ஆம் ஆண்டு முதல் திருவாளர்கள் Make



Agro Industries Limited என்ற சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 9,000 டன் சர்க்கரையும், 3,000 டன் கசடு மண்ணும், 4,000 டன் மொலாஸசும், 3,000 டன் கரும்புச் சக்கையும் உற்பத்திச் செய்கின்றது. இந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 10 கிலோலிட்டர் தண்ணீரைத் தொழிலாளர்களின் அன்றாடத் தேவைக்கும், 1,500 கிலோலிட்டர் தண்ணீரைச் செயல்முறை உற்பத்திக்கும் பயன்படுத்துகிறது. அதனால் நாள் ஒன்றுக்கு 8 கிலோலிட்டர் கழிவுநீர் வெளியேறுகிறது. நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதாகப் புகார் வந்ததும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், ஆலைக்கு அறிவுரைகள் வழங்கியது. ஆலை சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எடுத்து, சுத்திகரித்த நீர் முழுவதையும் விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாகவும், கழிவுநீர். மண் குட்டைகளில் தேக்கி வைக்கப்படாததாலும் தற்போது நிலத்தடி நீர் மாசுபடுவதில்லை. கடந்த 1-3-2000 அன்று தொழிற்சாலையைச் சுற்றியுள்ள 5 இடங்களில், சுற்றுச்சூழல் காற்று மாதிரி எடுத்து, ஆய்வு செய்து பார்த்ததில் காற்றில் மிதக்கும் துகள்கள், கந்தக-டை-ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகியவற்றின் அளவுகள் 5 இடங்களில் வாரியம் நிர்ணயித்த குறியீட்டுக்குட்பட்டு இருந்தது. சுத்திகரித்த நீர் முழுவதையும் விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாகவும், கழிவுநீர், மண் குட்டையில் தேக்கி வைக்கப்படாததாலும், நிலத்தடி நீர் தற்போது மாசுபட வாய்ப்பேதுமில்லை. இத்தொழிற்சாலையின் செயல்பாடு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 559, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**559—**

### கால்நடை மருந்தகம்

***23506—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, முத்தூரில் கால்நடை மருந்தகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

[2000 மே 8

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, முத்தூரில் கால்நடை மருந்தகம் அமைத்துத்தர தற்போது செயற்குறிப்பு எதுவுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருக்கிற முத்தூர், என் தொகுதியில் கடைசி எல்லையில் இருக்கிற ஊர். பக்கத்திலே பூம்புகார் தொகுதியில் இருக்கிற செம்படவார் ஒன்றியப் பகுதியான நரசிங்க நத்தம் போன்ற பகுதி எல்லாம் அதிலே வருகிற ஒரு பகுதி. முத்தூரில் இருந்து கால்நடைகளை மருத்துவத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமானால் 6 கி.மீ. தூரத்தில் இருக்கிற பெரம்பூருக்கும், 5 கி.மீ. தூரத்தில் இருக்கிற கிளியனூருக்கும் செல்ல வேண்டும். எனவே, முத்தூரிலே ஒரு கால்நடை மருந்தகம் அமைந்தால், அந்தப் பகுதிக்கு ஏதுவாக இருக்கும் என்பதோடு, அதற்கிடையில் ஒரு பார்வைக் கிளை நிலையமாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை கோட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில், முத்தூர் கிராமம் உள்ளது. தற்போது முத்தூரிலே, சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில், பார்வைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருவதாகத் துறையின் சார்பிலே பதில் தந்திருக்கிறார்கள். மேலும், 4 கி.மீ. தூரத்தில் உள்ள பெரம்பூர் கால்நடைக் கிளை நிலையத்தின் மூலமாகவும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதோடு முத்தூர் கிராமம் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான கடக்கம், பெரம்பூர், கொடவிளக்கம், மகரவீச்சூர், ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 7395 ஆகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில் 29-1-2000 அன்று ஆலங்குடி கிராமத்தில் 3524 கால்நடைகளும், 14-2-2000 அன்று அரியலூர் கிராமத்தில் 1900 கால்நடைகளும், 15-3-2000 அன்று வானாதிராஜபுரம் கிராமத்தில் 2821 கால்நடைகளும் சிகிச்சை பெற்றுள்ளன. எனினும், எதிர்வரும் ஆண்டுகளில் கால்நடைகளின்



2000 மே 8]

எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டும், அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும் முத்தூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கப் பரிசீலிக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 560, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**560—**

**பார்வையற்றோர் சிறப்புப் பள்ளி**

***29285—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத் துறையால் நடத்தப்படும் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் ஆசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சமூக நலத் துறையால் நடத்தப்படும் பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகள் பதினொன்று.

(ஆ) பதினொன்று அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் 153. இதில் 18 இடங்கள் தவிர மற்ற இடங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் திருத்திய விடையாகப் படிக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பூர்த்தி செய்யப்படாத காலி இடங்கள் எப்போது பூர்த்தி செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

[2000 மே 8

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களுக்கான 6 இடங்களுக்கு இப்போது நேர்காணல் நடைபெற்று முடிந்திருக்கிறது. மற்றப் பணியிடங்களும் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### பேரவைக்குள் பத்திரிகையாளர்கள் கறுப்புத் துணியும் அடையாள அட்டையும் அணிந்து வரக் கூடாது என வேண்டுகோள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய பேரவையிலே பத்திரிகையாளர்கள் அவர்களுக்காக அமைக்கப்பட்ட ஏதோ ஓர் ஊதியக் குழுவின் தீர்ப்பை எதிர்த்து அடையாள அட்டையும், கறுப்புத் துணியும் அணிந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, அவர்களுக்கு இந்த அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டார்கள். ஆனால், நம்முடைய மரபுகளின்படி, உறுப்பினர்களே கறுப்புத் துணி அணியக்கூடாது. நம்முடைய உறுப்பினர் ஒருவர்மீதுகூட, கறுப்புத் துணி காட்டியதற்காக, நடவடிக்கை எடுக்கப்பட்டதும் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, இந்த மரபுகளைக் காப்பாற்ற பத்திரிகையாளர்கள் இந்தக் கறுப்புத் துணியை வெளியிலே அணிந்து கொள்ளலாம் அவையிலே அணியக்கூடாது என்று வேண்டுகோளாக வைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் ஜஸ்டிஸ் மணிக்கண்ணா கமிட்டி என்ற கமிட்டிக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? That is not our Committee. அது நம்முடைய Committee அல்ல. That is not Fair.



2000 மே 8]

**திரு. சி. ஞானசேகரன்:** தங்கள் உணர்வுகளை அவர்கள் காட்டுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய உணர்வுகளைத் 'தவறு' என்று நான் சொல்லத் தயாராக இல்லை. கறுப்புத் துணி இங்கே அணியக்கூடாது என்பதை நான் சொல்லிவிட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** கடந்த ஆட்சிக் காலத்தில் அனுமதித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சபாநாயகர், இப்போது நான் அனுமதிக்கவில்லை. அவ்வளவுதான். ஏனென்றால், நான் ஓர் உறுப்பினர் பேரிலேயே, கறுப்புத் துணி காட்டியதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இனிமேல் நீங்கள் பேசக்கூடாது. நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** என்னுடைய கருத்தை நான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொன்னதற்குப் பிறகு நீங்கள் எப்படிக் கருத்தைச் சொல்லலாம்? நான் தீர்ப்பு சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சபாநாயகர் தீர்ப்புக்கு விரோதமாக நான் கருத்துச் சொல்ல வரவில்லை. அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த உணர்வுகளை நானும் மதிக்கிறேன். அவர்கள் போராடுவதில் எனக்கொன்றும் வருத்தம் கிடையாது. ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கறுப்புத் துணி காட்டியதற்காக நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே, கடந்த ஆட்சிக் காலத்தில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டது குறித்து கறுப்புத் துணி அணிந்து வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்க முடியாது. நான் பேரவைத் தலைவராக இருக்கும்போது இதுதான் என்னுடைய தீர்ப்பு, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பத்திரிகையாளர் மாடம் காலியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவர்களுக்குச் சொல்லிவிட்டேன். அவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். நீங்கள் காலி செய்யச் சொல்லாதீர்கள், உட்காருங்கள்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அழைப்பின் பேரில் தமிழக முதல்வர் அவர்கள் டெல்லி சென்று வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கைப் பிரச்சினையை நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) இல்லை. அனுமதிக்க மாட்டேன். ஏற்கெனவே பேசியாகிவிட்டது. இது நம்முடைய அரசைப் பொறுத்தது அல்ல. (குறுக்கீடு) நான் இந்தப் பிரச்சினையை அனுமதிக்கவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நிறைய இடங்களில் wall posters ஒட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு நீங்கள் தீர்மானம் கொடுங்கள். நான் அனுமதிப்பதா இல்லையா என்பதைப் பார்க்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் ஏற்கெனவே தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பார்க்கிறேன். உங்களுக்கு ஒரு கருத்து; அவருக்கு ஒரு மாறுபட்ட கருத்து. உங்களுக்கு இப்போது அனுமதி இல்லை, உட்காருங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### உடுமலைப்பேட்டை, குமரலிங்கம் பகுதியில் வயிற்றுப்போக்கால் பலர் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுமலைப்பேட்டை, குமரலிங்கம் பகுதியிலே பலர் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி,





திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. கே. சுப்பராயன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. டி. மணி, திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. சொ. கருப்பசாமி, திரு. லா. சந்தானம், திரு. ம. சண்முகம், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. மோகன் கந்தசாமி அவர்களை முதலில் அழைக்கிறேன்.

*முற்பகல் 10-25*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆம் தேதியன்று உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலுள்ள குமரலிங்கம் பேரூராட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு கொடுமையான சம்பவத்தைப் பற்றி இங்கே பேசுவதற்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அங்கே குடிநீரிலே புழுக்கள் நெளிந்திருக்கின்றன என்று சொல்லி, கடந்த மே மாதமே தினமலர் பத்திரிகையிலே விரிவாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அங்கே இருக்கிற உறுப்பினர்கள் இதைப்பற்றி அரசு அதிகாரிகளுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றும்கூட, அது சரிவரக் கவனிக்கப்படாததன் காரணமாக, இப்போது கிட்டத்தட்ட 500 பேர் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு, 200 பேர் அபாயகரமான சூழ்நிலையில் இருப்பதையும் 4 பேர் —பழனியம்மாள், மதுபாலா என்ற 4½ வயது குழந்தை, வெங்கிட்டு, பாப்பா ஆகியோர்—இறந்திருக்கின்ற ஒரு பரிதாபகரமான காட்சியையும் நாம் பார்க்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம்.

ஏற்கெனவே இதுபோன்று, "குடிநீரிலே புழுக்கள் நெளிகின்றன" என்று பலமுறை உரிய அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியும்கூட, அவர்களுடைய அசட்டையான, அலட்சியப்போக்கால், இன்றைக்கு இதுபோன்று உயிர்களை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நேற்றைக்கு நான் உடுமலைப் பேட்டைக்குப் போயிருந்தேன். அங்கேயிருக்கிற என்னுடைய நண்பர்களெல்லாம் மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள். "இதுபோன்ற பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததற்குப் பின்னால், அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு சென்று, அதிகாரிகளிடம் காண்பித்தும் கூட, அதிகாரிகள் அதை அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். எனவேதான், இந்தச் சாவு நிகழ்ந்தது" என்று, இன்று அவர்கள் சொல்லக்கூடிய காட்சியைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல,

இதுபோன்ற சாவு நிகழ்ந்த உடனே மருத்துவ அதிகாரிகள் உடுமலைப்பேட்டையிலிருந்து அங்கே சென்றிருக்கிறார்கள். சென்ற அந்த உயர் மருத்துவ அதிகாரிகள்கூட, அங்கே நிகழ்ந்திருக்கின்ற அந்தச் சாவு எண்ணிக்கையைப் பார்த்து பயந்துகொண்டு, உடனடியாக உடுமலைப்பேட்டைக்குத் திரும்புவதற்கு ஆயத்தமாகியிருக்கிறார்கள். ஆனால், அங்கேயிருக்கிற பொதுமக்களெல்லாம் அவர்களுடைய காரைச் சூழ்ந்துகொண்டு, 'எப்படி நீங்கள் தப்பிப்போக முயற்சி செய்கிறீர்கள்' என்று சொன்னதற்குப் பின்னால்தான், 'சரி, எல்லோரையும் உடுமலைப்பேட்டைக்குக் கொண்டு வாருங்கள்' என்று சொல்லி, இப்போது அங்கே ஏராளமானவர்கள், கிட்டத்தட்ட *500* பேர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். *4* பேர் உயிரிழந்திருக்கிறார்கள். *200* பேர் அபாயகரமான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். தற்சமயம்—இப்போதுகூட ஒரு செய்தி—உடுமலைப் பேட்டையிலேயிருந்து தொலைபேசியிலே கூப்பிட்டுச் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, அந்த அதிகாரிகள் காட்டிய அலட்சியப்போக்கினால் இன்றைக்கு ஒரு மிகப்பெரிய கேடு நிகழ்ந்திருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாகச் சொல்லமுடியும்; அமைச்சர் அவர்கள், அதில் வேறு எந்தக் குற்றங்கள் இருந்தாலும், இப்போது சொல்லலாம், பைப்பிலே கிருமிகள் கலந்துவிட்டன, அல்லது பைப் உடைந்துவிட்டது என்றெல்லாம் சொல்லலாம். ஆனால், உண்மைநிலை என்னவென்று சொன்னால், அந்தத் தொட்டியிலேயே புழுக்கள் இருந்ததைப் பார்த்திருக்கிறார்கள். அதை மக்கள் காண்பித்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுப்பதோடு, உயிரிழந்த *4* குடும்பத்திற்கும் கணிசமான நிவாரணத் தொகை, குறைந்தபட்சம் *1* இலட்சம் ரூபாயாவது கொடுத்து, அந்தக் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலை வட்டம், குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே, குடிநீர் குடித்த நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் காலராவால்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பத்திரிகைச்



செய்திகளிலிருந்தும், அதற்குப் பின்னர் வந்திருக்கிற விவரங்களில் இருந்தும் தெரிகிறது. ஆனால், ஒரு விஷயத்தை நான் தங்கள் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி பற்றித் தெரிந்த உடனேயே கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் இரவு ஒரு மணிக்கே சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று, உரிய நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டிருக்கிறார்கள் என்கிற உண்மையை மறுக்காமல், மறந்துவிடாமல், நான் இந்தப் பிரச்சினையில் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்குத் தெரிந்தவுடன் மிக விரைவாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு மாற்று அபிப்பிராயமே இல்லை; உண்மையிலேயே பாராட்ட வேண்டிய ஒரு விஷயம்தான். ஆனால், நாம் கவனிக்க வேண்டிய விஷயம்; இந்தமாதிரி சம்பவங்கள் சிலபல இடங்களில் நடந்து வருகின்றன. இதற்குரிய நடவடிக்கைகளை எப்படி எடுக்கலாம் என்பது குறித்து, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய விளக்க உரையிலே வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்குக் குடிநீர்ப் பிரச்சினை வந்ததும்—அங்குப் பேரூராட்சி நிர்வாகம் இருக்கிறது; அது சார்ந்த பல்வேறு நிர்வாகங்கள் இருக்கின்றன. மார்ச் மாதத்திலேயே தினமலர் பத்திரிகை மிக விரிவாக இந்தப் பிரச்சினையை எழுதி வெளியிட்டுவிட்டது. பொதுமக்கள் சார்பாக அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு சென்றதும், அதேபோல மஞ்சள் நிறத்தில் சில நேரங்களில் புழுக்கள் கூட வெளியே வருகின்றன என்கிற—விவரங்களை எல்லாம் பேரூராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும்கூட, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒரு வேதனையான விஷயமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பது குறித்த விவரத்தையும் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

*முற்பகல் 10-30*

அதேபோல இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு சம்பவம் அல்ல; இது இரண்டாவது சம்பவம். இந்த மாவட்டத்தில், உடுமலைப்பேட்டை குமரலிங்கம் பேரூராட்சியில் *4* பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். அதேபோல ஈரோடு மாவட்டத்தில், சத்தியமங்கலம் தாலுகாவைப் பொறுத்தவரையில்,

தாளவாடி யூனியனுக்கு உட்பட்ட, ஆசனூர் ஊராட்சியில், கோட்டாடை, கீழாடை என்ற மலைப்பகுதியின் உட்கிராமங்களில், கடந்த 29 ஆம் தேதி அன்றைக்கு காலரா ஏற்பட்டு 150-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு, அவர்களில் இரண்டு பேர் மரணம் அடைந்துவிட்டார்கள். அதில் ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், அவை உட்கிராமங்கள்; மலைப்பகுதிக் கிராமங்கள். உடனடியாக வைத்திய வசதி கிடைப்பதற்கு வழி இல்லாத பகுதிகள். அந்தப் பகுதிகளிலே இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, உடுமலைப்பேட்டை குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதிகளிலேயும், அதேமாதிரி ஆசனூர் யூனியனுக்கு உட்பட்ட கோட்டாடை, கீழாடை என்ற மலைவாசிகள் உள்ள மலைப்பகுதி உட்கிராமங்களிலேயும் பாதிப்புகள் ஏற்பட்டு இருப்பதால், நாம் இன்னும், இதை ஒரு முன் அடையாளமாகக் கவனத்தில் கொண்டு, வேறு பல ஊர்களிலும் அந்தப் பிரச்சினைகள் குறித்து குடிநீர்ப் பிரச்சினையால் இத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டுவிடுமா என்பது குறித்து—உரிய முறையில், உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளுமா என்று இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் பேரூராட்சியில், தண்ணீர் குடித்துக் கிட்டத்தட்ட 4 பேர் இறந்ததாகவும், 500 பேர் ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டு இருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. இங்கே திரு. மோகன் கந்தசாமி அவர்களும், நண்பர் திரு. கே. சுப்பராயன் அவர்களும் இதுகுறித்து விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். இதிலே ஒன்றே ஒன்று. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலமாகத் தண்ணீர் எடுத்து, அந்தத் தண்ணீரை மேல்நிலைத் தொட்டியில் தேக்கி, பொதுமக்களுக்கு விநியோகிக்கும்போது, அந்தத் தண்ணீர் சுத்தமாக இருக்க வேண்டும். இதைப் பற்றி ஒரு வாரத்திற்கு முன்பாகக்கூட, 'தினமலர்' பத்திரிகை செய்திகள் வெளியிட்டதாக இங்கே கூறியிருக்கிறார்கள். பொதுமக்கள், இதுபற்றிப் பேரூராட்சி நிர்வாகத்திடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். புழுக்கள் எல்லாம் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு தூரம் நடந்ததற்குப்பிறகும், பேரூராட்சி நிர்வாகம், மாவட்ட பேரூராட்சி நிர்வாகம் எப்படிக் கவனக் குறைவாக இருந்தார்கள் என்பதுதான்



கேள்வி. இதற்கு முன்பு திருவாரூர் மாவட்டத்தில்கூட, இந்த ஆண்டு, குடிநீரின் காரணமாக கிட்டத்தட்ட 20 பேர் இறந்தார்கள் என்ற செய்திகூட வந்திருக்கிறது. ஆகவே, குடிதண்ணீரைப் பொறுத்தவரையில், காய்ச்சிக் குடியுங்கள் என்று கூறிவிட்டால் மட்டும் போதாது. அந்தக் குடிநீர்த் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் விரிவாக்கப்பட வேண்டும். அவை எல்லாம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

அந்த மக்களை எல்லாம் பார்க்க வந்த சுகாதாரத் துறை அதிகாரிகள், அவர்களைப் பார்க்காமலே சென்றுவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்களை முற்றுகையிட்டதற்குப் பிறகுதான், பாதிக்கப்பட்டவர்களை எல்லாம், கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை போன்ற அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே சேர்த்திருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. இவ்வளவு தூரம் நடந்ததற்குப் பிறகு — இது 5 ஆம் தேதி நடந்திருக்கிறது. 6 ஆம் தேதி, 7 ஆம் தேதி, 8 ஆம் தேதி ஆகியும் — நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக அங்கே சென்றிருக்க வேண்டும். நேற்று விடுமுறை, இருந்தாலும் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு உண்மையிலேயே இதன்மேல் அக்கறை இருந்திருந்தால் அவர்கள் நேற்றே அந்த இடத்திற்குச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். சென்னையிலிருந்து உதவி இயக்குநர்கள் எல்லாம் அங்கே சென்றிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இருந்தாலும், இந்த அரசு அதிதீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இறந்தவர்கள் குடும்பத்திற்குக் குறைந்தது 1 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனி நடக்காமல், மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

*முற்பகல் 10-35*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அவையிலே இதுபோன்ற ஒரு கோரச் சம்பவத்தைப் பற்றிப் பேசுவதற்கு உள்ளபடியே என்னுடைய உள்ளம் மிகவும் வருந்துகிறது. ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலை 1 மணிக்கு முன்பே எழுந்து, அனைத்து நாளிதழ்களையும் படித்து, எந்த இடத்திலே, எந்தத் தவறு என்று குறிப்பிட்டிருக்கிறார்களோ, அதை நிவர்த்தி செய்வதற்கு, எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று,

அல்லும் பகலும் பாடுபடக்கூடியவர். தமிழகத்திலே, மார்ச் மாதம் வந்த ஒரு நாளிதழிலே, 6 ஆம் தேதி மிகத் தெளிவாக "இந்த குமரலிங்கம் பேரூராட்சியில் குடிநீர் இவ்வளவு மோசமாக, மஞ்சள் நிறமாக, அழுக்கு நிரம்பியதாக, புழுக்களோடு வருகிறது" என்று செய்தி சொல்லியும், இதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று எண்ணும்போது, வேதனைப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

குறிப்பாக, 500-க்கு மேற்பட்டவர்கள், இதிலே பாதிக்கப்பட்டு, நாலரை வயது குழந்தை மதுபாலா, இறந்திருக்கிறது. அதேபோல 65 வயது பழனியம்மாள் மற்றும் இருவர் இறந்திருக்கிறார்கள். இவ்வளவு கோரச் சம்பவம் அந்தப் பேரூராட்சியிலே நடந்திருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சொல்லியதுபோல, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செல்வதற்குப் பதிலாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்றிருக்க வேண்டும். பொதுமக்கள், அந்தக் குடிநீரை எடுத்து அந்தப் பேரூராட்சியிலே காட்டியபிறகு, அதன்மீது நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன? அந்தப் பேரூராட்சியினுடைய நிருவாகம் யாருடைய கையிலே இருக்கிறது? அந்தப் பேரூராட்சியினுடைய இன்றைய தலைவர் யார் என்பதனை எல்லாம் குறிப்பெடுத்து, அதன்மீது கடுமையாக நடவடிக்கை எடுத்திருந்தால் இதுபோல ஒரு கோரமான சம்பவம் நடந்திருக்காது.

இருப்பினும் உள்ளாட்சித் துறை அமைச்சருக்குப் பதிலாக அமைச்சரவையினுடைய கூட்டுப் பொறுப்பிலே இருக்கக்கூடிய பொங்கலூர் பழனிசாமி அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே அந்தப் பணிகளை எல்லாம் மேற்கொண்டு, அந்த மக்களைப் பல மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதற்காக, அவரைப் பாராட்டுகிறேன். நிருவாகத்தின் தவறு காரணமாக 4 பேர் இறந்திருக்கிறார்கள். அந்தப் பேரூராட்சி நிருவாகத்தின்மீது நிச்சயமாக இந்த அரசு எந்தவிதமான சலுகையும் காட்டாமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறந்துவிட்டவர்களின் குடும்பத்திற்கு, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல ஒரு இலட்சம் ரூபாய் பணம் அளிக்க வேண்டும். அதேபோல மருத்துவமனையிலே, மிகச்சிறப்பான முறையிலே, சிகிச்சை அளிக்க நம்முடைய அரசு இதன்மீது நடவடிக்கை எடுத்து கண்காணிக்க வேண்டுமென்று மக்கள் நல்வாழ்வுத் துறை



அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வேண்டுகோளை வைத்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கோவை, உடுமலைப்பேட்டை, குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே காலராவால் சுமார் 500-க்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு நால்வர் உயிரிழந்திருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த வருடம், இது மூன்றாவது சம்பவமாகும்; திருவாரூர், நன்னிலம் பகுதியிலும், ஈரோடு பகுதியிலும் ஏற்பட்டது. ஆனால், நன்னிலம் பகுதியிலே சம்பவம் ஏற்பட்டவுடன் விரைந்து, அதைப் பரவவிடாமல் தடுத்து, போதிய நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இறப்பு அதிகம் இருந்தாலும், நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 30-க்கு மேல் தாண்டவில்லை என்ற நிலை இருந்தது. இது போன்ற நிகழ்வுகளிலே, ஒருசிலருக்கு நோய் வந்தவுடனேயே Preventive Medicines கொடுத்து நடவடிக்கை எடுத்திருந்தால், இவற்றைத் தடுத்திருக்கலாம். ஆனால், ஏனோ தெரியவில்லை, அங்கே தடுப்பதற்குப் பதிலாக, சுமார் 500 பேருக்கு மேல், இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பாக இருந்துவிட்டது. இப்படி வருடத்திற்கு 10, 15 சம்பவங்கள் நடக்கின்றபோது, நம்முடைய பொருளாதாரமும், உழைப்பும் வீணாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து விரிவாக, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். காய்ச்சிய நீரைத்தான் குடிக்கவேண்டும் என்ற நிலையை அனைவருக்கும் போதிக்க வேண்டும்.

மேலும், நோய் வந்தவுடன் காப்பாற்ற எவ்வாறு நாம் முயற்சி எடுக்கின்றோமோ, அதேபோல், மற்றவர்களுக்கு இந்த நோய் பரவாமல் இருப்பதற்கும், இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதான் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஒவ்வொரு பகுதியிலும், இப்படி மாதத்திற்கு ஒரு முறை, ஒவ்வொரு பகுதியாக காலரா வந்தது என்று சொன்னால், நாட்டின் பொருளாதாரம் வீணாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆகவே, இதுகுறித்து, அரசு ஒரு விரிவான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், வட மாநிலங்களில் எல்லாம் தண்ணீர்ப் பஞ்சத்தால் இதுபோன்ற பாதிப்பான நிலைமைகள் வந்து கொண்டிருக்கின்றன. நமக்கு இதுபோன்று வெயில் நேரத்திலே, தண்ணீர் குறைவாக இருக்கின்ற நேரத்திலே, மாசு சற்று ஏற்படத்தான் செய்யும். ஆகவே,

இதில் விழிப்புணர்வுடன் இருந்து இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டைக்கு அருகிலே உள்ள குமரலிங்கம் பேரூராட்சியிலே, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்ட குடிநீர் மாசுபட்டிருந்த காரணத்தினால், அந்தக் குடிநீர் மூலமாக இன்றைக்கு 500 பேருக்கு மேலாகப் பாதிக்கப்பட்டு, அவர்களிலே 4 பேர் உயிர் இழக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இது மிக வருந்தத்தக்க ஒரு நிலையாகும். இந்த நிலை, ஏற்கெனவே, எடுத்துக்காட்டாத நிலையிலே திடீரென்று ஏற்பட்டிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால், ஒரு பத்திரிகை இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியும்கூட, அங்கிருந்த அந்தப் பேரூராட்சி நிர்வாகம், மெத்தனப் போக்கிலே இருந்த காரணத்தினால், இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அந்த நிலை, வருகின்ற காலத்திலும் ஏற்படாத அளவிற்கு அரசு மிகுந்த வேகத்தோடு செயல்பட்டு, அவர்களுக்கெல்லாம் உரிய மருத்துவ சிகிச்சை அளித்தாலும்கூட, இன்னும் முன் எச்சரிக்கையோடு நடந்து கொண்டிருந்தால், இப்படிப்பட்ட அசம்பாவிதம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்ற முறையிலே, அந்தப் பேரூராட்சி நிர்வாகத்திலே செயல்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, இறந்த அந்தக் குடும்பங்களுக்கு நல்ல முறையிலே இழப்பீட்டுத் தொகையினை அரசு வழங்க வேண்டுமென்று கோரி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே ஏற்பட்ட குடிநீர்க் கோளாறின் காரணமாக, 500 பேர் பாதிக்கப்பட்டு, 4 பேர் உயிர் இழந்த ஒரு துரதிருஷ்டவசமான நிகழ்ச்சி நம்முடைய மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்றது. பொதுவாக, கோடை காலம் என்ற நிலையில், குடிநீர்ப் பற்றாக்குறை, குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுகின்ற நேரம் இது. இந்தக் காலகட்டங்களிலே குடிநீரைத் தருகின்ற குடிநீர் வடிகால் வாரியம் ஆனாலும் சரி, அல்லது பேரூராட்சியினுடைய தனித் துறை ஆனாலும்





சரி, இப்படி ஒரு விவரம் பத்திரிகையிலே—தினமலர் பத்திரிகை என்று நினைக்கின்றேன், அதிலே—தெளிவாக வந்ததற்குப் பின்னால், இந்த அதிகாரிகள் விரைந்து அது என்ன என்று பரிசோதனை செய்திருக்க வேண்டும். அதிலே, ஏதாவது கோளாறுகள் இருந்திருந்தால், அதைக் கண்டறிந்து, நிவர்த்தி செய்வதற்கு அந்த நேரத்திலே முயற்சி எடுக்கப்பட்டிருந்தால் இப்படி துரதிருஷ்டவசமாக 4 பேர் உயிர் இழக்கும் நிலைமை வந்திருக்காது. 500 பேர் மருத்துவமனைக்குப் போக வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்காது.

அதுமட்டுமல்ல, குடிநீரை ஆய்வு செய்கின்ற மையங்கள் போதுமானதாக இல்லை. ஆண்டுக்கு ஒரு தடவைதான், குடிநீரை ஆய்வு செய்கின்ற ஒரு நிலை நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றது என்றே கருதுகின்றேன். எனவே, ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது குறைந்தபட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறை இந்தக் குடிநீரைத் தருகின்ற மையங்களில் ஆய்வு நடத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கினால், இதை இன்னும் கொஞ்சம்கூடச் சிறப்பாக நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த வகையிலே, இந்த துரதிருஷ்டவசமான நிலையிலே, அந்தப் பேரூராட்சி நிர்வாகம் எந்தக் கவனத்தோடு, எந்தக் கவலையோடு, இதில் சிந்தித்துச் செயல்பட்டிருக்கிறது என்று கேட்டால், அந்த நிர்வாகத்தை நாம் குறை சொல்லாமல் இருப்பதற்கு வழியில்லை.

அதற்கு அடுத்து, மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டிலே விரைந்து செயல்பாடுகள் இருந்தாலும், அதிலே உரிய நோக்கத்தோடு, தலையிட்டிருக்கின்றார்கள். எனினும் அதிலே சற்றுத் தொய்வு ஏற்பட்டு இருக்கின்றது. எனவே, இந்தச் சூழ்நிலைகள் மீண்டும் நம்முடைய மாநிலத்திலே ஏற்படக் கூடாது. அந்த வகையிலே, இறந்துபோன குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும்.

மாநிலம் பூராவும் இப்போது கோடைகாலம் என்ற முறையிலே, பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தேக்கி வைத்திருக்கின்ற இடங்களைப் பரிசோதனை செய்கின்ற, ஆய்வு நடத்துகின்ற மையங்களை துரிதப்படுத்தி அந்தச் செயல்முறையை விரைவாக மேற்கொள்ளும் நிலையில்தான் இதைத் தடுத்து நிறுத்த முடியும். அந்த வகையிலே, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

[2000 மே 8

முற்பகல் 10-45

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் குமரலிங்கம் பஞ்சாயத்தில் குடிநீர் அருந்தி 4 பேர் இறந்ததும், 500 பேர் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் வேதனையான சம்பவம். இதில் மாவட்ட நிர்வாகத்திற்குச் செய்தி தெரிந்தவுடன் அவர்களுடைய கடமையை உடனடியாக நிறைவேற்றக்கூடிய வகையில் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அது பாராட்டத்தக்கது. அதிகாரிகள் தங்களுடைய தர்மத்தை ஒழுங்காகச் செய்திருக்கிறார்கள். தினமலர் பத்திரிகை, பத்திரிகைக்கு உண்டான தர்மத்தினைச் சரியாக செய்திருக்கின்றது. ஒரு மாதத்திற்கு முன்னாலே இந்தச் செய்தி வந்தும்கூட, தங்களுடைய கடமையை, தங்களுடைய தர்மத்தைச் செய்யத் தவறியது பஞ்சாயத்து என்று சொன்னால், அது மிகையாகாது.

எனவே, அவரவர்களுடைய தர்மத்தில் அவரவர்கள் சரியாக இருக்க வேண்டுமென்ற நிலையிலிருந்து தவறிய அந்தப் பஞ்சாயத்து நிர்வாகத்தின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குடி தண்ணீர் மாசுபடுவது அல்லது கெட்டுப் போவது, வெவ்வேறு விதத்தில் அமைந்திருக்கின்றது. அந்தந்த மாவட்டவாரியாக பரிசோதிக்கக் கூடிய அந்தத் துறையினரே பரிசோதித்து, இந்தத் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் பணியை முன்பெல்லாம் மேற்கொண்டார்கள். அதாவது, பல ஆண்டுகளுக்கு முன்னாலே எல்லாம் எந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கின்றார்களோ, அந்தக் கிணற்றுக்கு வந்து மருந்துபோடுவது, அந்தக் குடிதண்ணீர் தேக்கத் தொட்டியைச் சுத்திகரித்து, ஒரு நாள் காய வைப்பது, மருந்து போடுவது என்பன போன்ற பழக்கங்கள் இருந்தன. ஆனால் இப்போது பொது மக்களுடைய தண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்ய முடியாத காரணத்தினால், இதுமாதிரி கழிவுகளைச் சுத்தப்படுத்தும் பணியைச் செய்தால்கூடக் காலதாமதம் ஆகுமோ என்று கருதித்தான் செய்யாமல் இருந்திருப்பார்களோ என்று கருதுகின்றேன். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்று சொன்னால், இரண்டு நாட்களுக்கு முன்னாலே, இன்ன தேதியில் தொட்டியைச் சுத்தப்படுத்தி, காய வைக்க இருக்கின்றோம்; எனவே, இரண்டு நாட்களுக்குத் தண்ணீர் வராது என்ற தகவலைக் கொடுத்தாவது அந்தத் தண்ணீர்த் தொட்டிகளைச் சுத்தப்படுத்தி, ஒரு நாளாவது காய வைக்கக்கூடிய பழக்கத்தை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இது எந்த அளவிலும்



2000 மே 8] [திரு. சி. வேலாயுதன்]

பொது மக்களைப் பாதிக்காத அளவிற்கு அறிந்து, அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

இறந்துபோன இந்த நான்கு பேருடைய குடும்பங்களுக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற நிலையில் அரசு அதிகாரிகள் அவரவர்களுடைய கடமையில், தர்மத்திலிருந்து தவறாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும். தினமலர் பத்திரிகைக்கு உண்மையிலேயே என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப் பேட்டை அருகே குமரலிங்கம் மற்றும் பெருமாள்புதூர், சாமராயப்பட்டி கிராமங்களில் அமராவதி ஆற்றிலிருந்து 'ring-well' மூலமாக விநியோகம் செய்யப்படுகின்ற குடிதண்ணீரைப் பருகியதால் இப்போது 500-க்கும் மேற்பட்டோர் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டும், அதன் காரணமாக நான்கு பேர் மரணம் அடைந்தும் இருக்கின்றனர். அவர்களுக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே 500-க்கும் மேற்பட்டோர் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே சுகாதாரத் துறை அமைச்சர் பதில் சொல்லக் கடமைப்பட்டவர் என்றாலும்கூட, இதில் அடிப்படைப் பிரச்சினை, குடிதண்ணீர்ப் பிரச்சினை என்ற காரணத்தினாலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இதிலே பதில் சொன்னால்தான் முறையாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இதை, ஏதோ ஒரு கிராமத்திலே நடந்துவிட்ட பிரச்சினையாகக் கருதாமல், இனிமேல் தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலேயும் இதுபோன்ற ஒரு அசம்பாவிதம் நடக்கக் கூடாது என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு முன்பாகவே, இந்த அமராவதி ஆற்றிலேயிருந்து கொண்டுவரப்படக்கூடிய தண்ணீர் மாசுபடிந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியும்கூட, ஏன் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது அதிகாரிகள் கவனிக்காமல் இருந்தார்கள்? அத்தோடு 500-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றபோது, இது வெறும் மாசா அல்லது வேறு கிருமிகளா, அல்லது விஷமா, அல்லது எப்படிப்பட்ட கிருமிகளால், அல்லது விஷத்தால் இந்தப் பாதிப்பு நேர்ந்தது என்பதைக்

கண்டறிவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்தால்தான், இதுபோன்ற அசம்பாவிதங்கள் ஏற்படாமல் எதிர்காலத்தில் தடுக்க முடியும்.

ஏற்கெனவே உடுமலைப்பேட்டையிலே ஆனைகட்டி மற்றும் சிறுநீரோடைகளிலே வந்த நீரைப் பருகிய மலைவாழ் மக்கள் எல்லாம்—2, 3 முறை—மரணமடைந்திருக்கிறார்கள்; பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே தமிழ்நாடு எங்கும், ஆறுகளிலே, அடிக்கடி, குறிப்பிட்ட அளவில் இருக்கக்கூடிய அந்த விஷப் பொருட்களை அகற்றி — அதாவது பல ஆறுகளிலே, பவானி ஆறு மற்றும் காவிரி ஆற்றில்கூட பல இடங்களில் சாயப்பட்டறைகளினுடைய அந்த மாசுகள் எல்லாம் கலக்கின்றன. எனவே—ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு எங்கும் இதுபோன்று குடிக்கப் பயன்படும் இடங்களிலே, மாசு ஏற்படாமல் தடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு, அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை குமரலிங்கம் பகுதியில் வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்ட சுமார் 350-க்கும் மேற்பட்ட நோயாளிகள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவர்களுக்குக் கிடைத்த தகவல்களை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி, இந்தச் சம்பவங்களுக்காக வருத்தத்தைத் தெரிவித்தும், இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப் பற்றி அரசுக்குத் தகவல் கிடைத்த உடனேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு அங்கே இருக்கக்கூடிய மற்ற அதிகாரிகளிடமும் தொடர்புகொண்டு, மாண்புமிகு அமைச்சர் பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களிடமும் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு போர்க்கால நடவடிக்கைகளைப் போல இதிலே ஈடுபட வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த





அதிகாரிகளும் இரவு பகலாக இரண்டு நாட்களாக அந்தப் பகுதியிலேயே தங்கி அவர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தகவல் கிடைத்தவுடன் நானும் மாண்புமிகு அமைச்சர் பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களோடும் மாவட்ட ஆட்சித் தலைவரோடும் தொடர்புகொண்டு பேசியபோது அவர்கள் முழுமையாக அந்தப் பணிகளிலே ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு கோ.சி. மணி அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் செய்தி கிடைத்த உடனேயே யாரும் இதைப்பற்றிக் கவலைப்படாமல் இல்லை. அனைவருமே சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், "மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அங்கே விரைந்து சென்றிருக்க வேண்டும்" என்று சொன்னார். இருந்தாலும், அமைச்சரவை சார்பிலே பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் அங்கே இருந்த காரணத்தினால் அடிக்கடி அவரோடு தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் "ஒரு வார காலத்திற்கு முன்னாலேயே இந்தச் செய்தி கிடைத்தும் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை?" என்றும், எப்படி இந்தச் சம்பவம் நடைபெற்றது என்றும் இங்கே பேசினார்கள்.

அமராவதி ஆற்றிலேயுள்ள கூட்டுக் குடிநீர்க் கிணற்றைச் சுற்றிலும் தண்ணீர் தேங்கியிருக்கிறது. அந்தத் தண்ணீரில் பொதுமக்கள் குளிப்பது, அசுத்தம் செய்வது, ஆடுமாடுகளைக் கழுவுவது போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தினால் அந்த நீர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கிடைத்திருக்கிறது. இந்தத் தகவல் கிடைத்த உடனேயே, பத்திரிகைகளிலே செய்தி வந்தவுடன், சம்பந்தப்பட்ட பேரூராட்சித் தலைவர் இராமலிங்கம் அவர்களுக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் இரட்டை இலையிலே அ.தி.மு.க. சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர். இருந்தாலும்கூட இப்போது சமீபகாலமாக அவர் தமிழ் மாநில காங்கிரசிலே தன்னை இணைத்துக்

கொண்டிருப்பதாக அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆகவே, எது எப்படியிருந்தாலும், அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர் தன்னுடைய கடமையை உரிய முறையிலே செய்திருப்பாரேயானால் இந்தச் சம்பவம் தடுக்கப்பட்டிருக்கும். ஆனாலும், இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டதற்குப் பிறகு உடனடியாக அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்திருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இந்தப் பிரச்சினையோடு இன்னொரு பிரச்சினையையும் இணைத்து இங்கே பேசினார். தாளவாடி மலைப்பகுதியிலே குறிப்பாக சத்தியமங்கலம் தாலுகாவுக்கு உட்பட்ட அந்தப் பகுதியில் ஆசனூர் ஊராட்சி, கோட்டாடை, கீழாடை என்ற பகுதிகளிலே சுமார் 150 பேர் பாதிக்கப்பட்டதாகவும் அதிலே இரண்டு பேர் உயிரிழந்ததாகவும் சொன்னார்கள். அது வேறு சம்பவம்; இது வேறு சம்பவம். அந்தச் சம்பவத்திலே சுமார் 150 பேர் பாதிக்கப்பட்டு 29 ஆம் தேதி 2 பேர் இறந்துவிட்டார்கள். இந்தச் சம்பவம் தெரிந்தவுடனேயே ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளும் அங்கே விரைந்து சென்று, உடனடியாக அந்த நோயைக் கட்டுப்படுத்தி இன்றைய தினம் ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற தகவலும் இங்கே வந்திருக்கிறது. இருந்தாலும்கூட, இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே, குமரலிங்கம் பேரூராட்சி சம்பவத்தைப் பொறுத்தவரையிலே 4 பேர் இறந்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அங்கே இறந்தவர்களுடைய எண்ணிக்கை 2 மட்டும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு அரசுத் தரப்பிலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாகவும் கிடைத்த சில விவரங்களை மட்டும் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்ற வெள்ளிக்கிழமை 5-5-2000 அன்று இரவு உடுமலை வட்டம், குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியில் வாந்தி பேதியால் பொதுமக்கள் அவதிப்படுவதாகத் தகவல் வரப்பெற்றவுடன், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. வாந்தி பேதியால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தவுடன்





வெள்ளிக்கிழமை நள்ளிரவிலேயே கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே யிருந்து அவசர காலக் குழு மற்றும் திருப்பூர், பொள்ளாச்சி அரசு மருத்துவமனைகளிலிருந்தும் மருத்துவக் குழுக்கள் உடுமலைப்பேட்டைக்கும், குமரலிங்கத்திற்கும் அனுப்பி வைக்கப் பட்டன. உடனடியாக அன்றிரவே பாதிக்கப்பட்ட பகுதியிலே மைக் மூலமாகவும் தண்டோரா மூலமாகவும் குடிநீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டுமென்றும், வாந்தி பேதிக்கான அறிகுறி தென்பட்டவுடன் குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. தொடர் சிகிச்சை அளிக்க இரவு, பகல் இரு நேரமும் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிப்பதற்காக சுமார் 35 பேர் அடங்கிய மருத்துவக் குழுக்கள் குமரலிங்கத்திலும், உடுமலைப்பேட்டையிலும் உருவாக்கப்பட்டன. இதுவரை சிகிச்சை பெற்ற நோயாளிகளினுடைய விவரம் பின்வருமாறு :—

குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலைய உள் நோயாளிகள் 145 பேர்; வெளி நோயாளிகள் 365 பேர். உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றவர்கள் 105 பேர். கோவை அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றவர்கள் 48 பேர்.

முற்பகல் 10-55

இதனிடையே, சாமராயப்பட்டி வேலு என்பவருடைய மனைவி பழனியம்மாள், 65 வயதுள்ளவர் இறந்துவிட்டார். அதைப்போலவே, 1 ஆம் தேதி மருத்துவமனையிலே சேர்க்கப்பட்ட மதுபாலா என்ற 4½ வயது குழந்தையும் இறந்திருக்கிறது. ஆனால் பழனியம்மாள் என்ற அந்த அம்மையாருக்கு ஏற்பட்ட வயிற்றுப்போக்குத் தொடர்பாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு சென்றபோது அவர் இறந்திருந்தாலும் அவர் ஓராண்டு காலமாக உடல்நலம் குன்றி இருந்தார் என்றும் முதியோர் உதவித் தொகை பெற்று வருவதாகவும், இருந்தாலும் இந்த நோயால்தான் அவர் இறந்தாரா என்பதை இன்னும் உறுதி செய்ய முடியவில்லை என்றும், தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையினர் சனிக்கிழமை காலை முதல் திருப்பூர் துணை இயக்குநர் மற்றும் மருத்துவக் குழுக்களோடு குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே முகாமிட்டு ஆய்விற்காகக் குடிநீர் மாதிரியை எடுத்து அனுப்பி உள்ளனர். மேல்நிலைத் தொட்டியிலே உள்ள தண்ணீரில் குளோரினைக் கலந்து குடிநீர்க் குழாய்களைச் சுத்தம் செய்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மே 8

ஆரம்ப சுகாதார நிலையத்திலே கூடுதல் படுக்கை வசதிகளை உருவாக்கி உள்நோயாளிகளை உடனுக்குடன் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நோய் பரவாமல் தடுப்பதற்காக, பேரூராட்சியிலே உள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக, Doxycycline என்ற *60,000* மாத்திரைகளும், Bactrim *50,000* மாத்திரைகளும் மற்றும் O.R.S. *5000* பாக்கெட்டுகளும் தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. காலரா தடுப்பூசி 20,000 dose தருவிக்கப்பட்டு தடுப்பூசி போடும் பணி அந்தப் பகுதியிலே தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வெள்ளி இரவு அன்று இதுபற்றிக் கேள்விப்பட்டவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக மருத்துவக் குழுவை ஏற்பாடு செய்து அனுப்பியதோடு உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் மற்றும் பேரூராட்சி சார் ஆட்சியர் ஆகியோரை அனுப்பி அதிகாலை *4.00* மணிக்கு பாதிக்கப்பட்ட பகுதியில் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டுள்ளார். தடுப்பு நடவடிக்கைப் பணியிலே அனைவரையும் முழுமையாக ஈடுபடுத்தி, கோவை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சுழற்சங்கம் ஆகியவற்றை முழுமையாக ஈடுபடுத்தி சிறப்பு அலுவலர்களை நியமித்து அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு விளையாட்டு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை மற்றும் குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையம் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியிருக்கிறார்கள். குமரலிங்கம் பேரூராட்சிக்கு அமராவதி ஆற்றிலிருந்து நீரூற்றுக் கிணறு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்த நீரூற்றுக் கிணற்றிலே மூழ்கிப் பார்த்தபோது அதில் வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட மரக்கிளையினால் விரிசல் ஏற்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு அதுவும் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. சிறப்பு மருத்துவக் குழுக்கள் குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் உருவாக்கப்பட்டு சிகிச்சைப் பணிகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. பொதுமக்கள் நிர்வாகத்தோடு முழு ஒத்துழைப்புத் தந்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மே 8]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மோகன் கந்தசாமி திரு. சுப்பராயன் உள்பட, இறந்தவர்கள் நான்கு பேர் என்று மிகத் தெளிவாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது பழனியம்மாள் வயது *65*, மதுபாலா வயது 4 ½ ஆகியோர் மட்டுமே இறந்தவர்கள் என்று இங்கே தன்னுடைய பதிலுரையில் சொல்லியிருக்கிறார்கள். `இந்து' நாளிதளிலே பாப்பம்மாள் . . . .

**HON. SPEAKER:** Newspaper is not news. You still say that four people have died. I don't mind. But, don't read newspapers.

**THIRU C. GNANASEKARAN:** What I want to stress is that Venkittu, aged.....

**HON. THIRU ARCOT N. VEERASAMY:** No. No. .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் பெயரையும் சொல்லுங்கள், வயதையும் சொல்லுங்கள். இந்தப் பத்திரிகையை ஆதாரம் என்று என்னிடம் காட்டாதீர்கள். அவ்வளவு தான் நான் சொல்லுவேன். நீங்கள் இன்னும் நான்கு பேர் பெயரைக்கூடச் சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை. இல்லை பாப்பம்மாள் வயது *59*, வெங்கிட்டு வயது *44* ஆகியவர்களும் இறந்து போய் இருக்கிறார்கள். அமைச்சர் சொல்கிறபோது த.மா.கா.-வினுடைய பேரூராட்சித் தலைவர்கூட நடவடிக்கை எடுத்திருந்தால் தவிர்த்திருக்கலாம் என்று சொன்னார்கள். த.மா.கா. தலைவர் பலமுறை ஏற்கெனவே நிர்வாகத்திடம் சொல்லி அது நடவடிக்கை எடுக்காத ஒன்று. எனவே இங்கே ஏற்கெனவே நிர்வாக அதிகாரி இருக்கிறார், சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார். ஏற்கெனவே மார்ச் மாதத்திலே தினமலர் பத்திரிகையிலே தெளிவாக இதுகுறித்து `மஞ்சள் கலரிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது' என்று சொல்லியும்கூட இந்த அரசுதான் விழித்துக்கொள்ளாமல் ஏனோ தூங்கிவிட்டிருந்த காரணத்தினால்தான் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் நான் பதில் சொல்கிற நேரத்தில் சரியாகக் கவனிக்கவில்லை.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மே 8

"இந்தச் சம்பவத்திலே நான்கு பேர் இறக்கவில்லை. இரண்டு பேர் தான் இறந்தார்கள்" என்று சொல்லிவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திருப்பூர் சுப்பராயன் அவர்கள் சொன்ன "ஈரோடு மாவட்டத்திலே நடைபெற்ற அந்தச் சம்பவத்திலே இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள், மொத்தம் நான்கு பேர்" என்று சொன்னேன். ஆனால் கோவை மாவட்டத்திலே இறந்தவர்கள் இரண்டு பேர் தான். ஈரோடு மாவட்டத்திலே இறந்தவர்கள் இரண்டு பேர். ஆக நான்கு பேர். ஆனால் இந்தச் சம்பவத்திலே நான்கு பேர் இறக்கவில்லை என்று சொன்னேன். அ.இ.அ.தி.மு.க.-விலே வெற்றி பெற்று த.மா.கா.-விற்கு இப்போது வந்த பேரூராட்சித் தலைவரைக் காப்பாற்ற முயற்சிக்கிற ஞானசேகரனுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். அவர் என்ன நடவடிக்கை எடுத்தார்? அரசாங்கத்தின் எந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டார்? ஏதாவது கடிதம் எழுதினாரா? என்ன செய்தார்? இருந்தாலும்கூட அவருடைய கவனக்குறைவினால்தான் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மார்ச் மாதத்திலே பத்திரிகையிலே தெளிவாகச் செய்தி வந்திருக்கிறது. அமைச்சர் அதைக் கவனித்து, உள்ளாட்சித் துறை அமைச்சரோ அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோ நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஏற்கெனவே எங்களுடைய பேரூராட்சியினுடைய தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பல முறை சொல்லி இதற்காகப் பல முறையீடுகளைச் செய்தும்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பத்திரிகையிலே வந்த பிறகும் நடவடிக்கை எடுக்கவில்லை. அமைச்சர் ஒழுங்காக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபப்படாமல் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்கெல்லாம் அவர் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு, அப்போதெல்லாம் விழிப்போடு செயல்படாமல் இருந்துவிட்டு இப்போது பேரூராட்சித் தலைவர் என்ன செய்ய முடியும்? அவருக்கு நிதியாதாரம் கொடுக்காமல் . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .



2000 மே 8]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. அது யாராக இருந்தாலும் தவறு தவறுதான். அந்த இராமலிங்கம் என்பவர் த.மா.கா.-வைச் சேர்ந்தவர் அல்ல. அவர் A.D.M.K.-யிலேயிருந்து காங்கிரஸ் கட்சியிலே தன்னை இணைத்துக் கொண்டதாகச் சொல்கிறாரேயொழிய அவர் A.D.M.K. என்றுதான் இதுவரைக்கும் உள்ள நிலை. தொலைபேசியிலே நான் தொடர்பு கொண்டு அதைக் கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் யாராக இருந்தாலும் சரி, A.D.M.K. கட்சிக்காரராக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, தவறு தவறுதான். ஆனால், இதை நான் பேசும்போதே சொன்னேன். தினமலர் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தவுடனே, தண்ணீரை எடுத்துச் சென்று அந்த அதிகாரிகளிடம் காண்பித்திருக்கிறார்கள். நான் தொலைபேசியிலே வந்த செய்தியைச் சொல்கிறேன். ஆனால், அந்த அதிகாரியினுடைய அலட்சியப் போக்கு—தினமலர் பத்திரிகையைப் பொறுத்தவரையிலே அதில் எழுதியவுடனே—எப்போதுமே அந்தப் பகுதியிலே கொஞ்சம் விவரமாகச் செய்வார்கள், அந்தப் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தவுடனே தண்ணீரைக் கொண்டுபோய்க் காண்பித்திருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் அலட்சியமாக இருந்ததால்தான் இந்தப் பிரச்சினை வந்ததேயொழிய அது எந்தக் கட்சிக்காரர் என்பது முக்கியம் அல்ல. ஆகவே, தயவுசெய்து இதில் கட்சிப் பாகுபாடு இல்லாமல், அரசியலைக் கலக்காமல் அந்த அதிகாரிகள் பேரில் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலம் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஞானசேகரன் எது எப்படியிருந்தாலும் அரசுதான் பொறுப்பு என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்கிறார். இந்த அமைப்பு என்பதில் இங்கேயிருந்து செய்கிற நடவடிக்கை என்பது வேறு; அங்கே இருப்பவர்கள் எடுக்கிற நடவடிக்கை என்பது வேறாக இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் அவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டது. ஒப்படைத்ததற்குப் பிறகு முழுமையான

நிர்வாகத்தையும் பேரூராட்சிதான் செய்ய வேண்டும். அவர்கள் செய்ததைச் சரிபார்க்கின்ற பொறுப்பு இங்கே இருப்பவர்களுடையது என்பதை நான் மறுக்கவில்லை. அதற்குப் பிறகு எந்தத் தகவலும் இந்த அரசுக்கு வரவில்லை. ஆனால், அது ஏற்பட்டது எப்படி என்றால் ஒரு மரக்கிளை ஒடிந்து அந்தக் குழாய் வெடித்திருக்கிறது. அதை மாற்றினாலே சரியாக இருந்திருக்கும். அதற்கு அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை மட்டும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட சிறிய, சிறிய குறைகளை, தவறுகளைத் தவிர்க்க, அங்கு இருப்பவர்களே பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியும். ஏறத்தாழ 611 பஞ்சாயத்துகள் இருக்கிற இந்த நேரத்திலே எல்லாவற்றையும் நேரடியாக தினசரி கண்காணிப்பது என்பது அரசால் இயலாது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து பொறுமையாகக் கேட்கவேண்டும். அவர் எடுத்த நடவடிக்கை ஒரு சாதாரண நடவடிக்கையாக இருந்தால்கூட போதும். சில பேர் அரசியலாக்குவதற்காகவும் இப்படி அலட்சியமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். கட்சிகளைப் பற்றி இதிலே கவலையில்லை. அவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, Executive Officer-ஐ காலை 6-00 மணிக்கு அழைத்துப் பேச முயற்சித்தேன். அவர் கிடைக்கவில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்து, விசாரித்து, அவரை இன்றைக்கே தற்காலிக வேலைநீக்கம் செய்கின்ற நிலையை இங்கிருந்து நான் தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி 15 பேர் எழுந்து நிற்காமல், நீங்கள் எல்லோரும் இருக்கையிலே உட்கார்ந்தால்தான் நான் ஒவ்வொருவராக அழைப்பேன். இல்லையென்றால் கடுமையாக நடவடிக்கை எடுப்பேன்.

*(திரு. ச. அழகிரி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. மு. அப்பாவு, திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் எழுந்து நின்று பேச அனுமதி கேட்டனர்.)*

இப்படி 5 பேர் எழுந்து நிற்கிறீர்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. ஞானசேகரன், உட்காருங்கள். மீண்டும் மூன்றாவது தடவையாக name பண்ண மாட்டேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேயே இந்தப் பத்திரிகையைப் படித்தவுடனே மாவட்ட ஆட்சியரோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரியை விசாரித்து, அவர் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யச் சொல்லி நான் வாய்மொழியாக உத்தரவிட்டிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கூப்பிடும்போதுதான் நீங்கள் பேசவேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் எங்களுடைய கட்சியை இழுக்கக்கூடாது. அவர் எங்களுடைய கட்சிக்காரர், பேரூராட்சித் தலைவராகவும் இருந்திருக்கலாம். ஆனால், அந்தப் பொறுப்பை, ஒரு சிறிய குழாய் உடைந்ததை அந்தப் பேரூராட்சிச் செயல் அலுவலர்தான் சரி செய்திருக்க வேண்டும். ஆனால், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தற்காலிக வேலைநீக்கம் செய்திருக்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம்தான் அந்த அதிகாரி செய்ததற்குப் பொறுப்பு என்று சொல்கிறபோது அந்த அதிகாரியை, அங்கு இருக்கிற நிர்வாகம்தானே செயல்பட வைத்திருக்க வேண்டும்? ஏன் செய்யவில்லை என்று நிர்வாக அதிகாரியை இங்கேயிருந்து கோ.சி. மணியா கேட்பான்? அங்கு இருக்கிற பஞ்சாயத்துத் தலைவர் தானே அதிகாரியைக் கேட்டிருக்க வேண்டும்? ஏன் கேட்கவில்லை?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. இத்தோடு பிரச்சினை முடிந்துவிட்டது. I can't allow you to go on talking.

[2000 மே 8

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழகிரி, நீங்கள் ஒரு மரபைக் கடைபிடிக்க மாட்டீர்களா? திரு. ரங்கநாதனுக்குப் பின்னாடி எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். நீங்கள் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கு உடனே பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,——

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், நான் உங்களை அனுமதிக்கவில்லை. திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 'அரசின் மீது குறை கூறுகிறார்களே' என்று தன்னுடைய பதிலுரையிலே சொன்னார்கள். இங்கே உறுப்பினர்கள் அரசின் மீது குறை சொல்லவில்லை. பத்திரிகையிலே செய்தி வந்தவுடன் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், அந்த நிர்வாக அதிகாரியும் நடவடிக்கை எடுக்காதது தவறு. அந்த அதிகாரியினுடைய கவனக் குறைவினால் ஏற்பட்ட இந்தத் தவறுக்கு அந்த அதிகாரிகளை நிச்சயமாக நீங்கள் தண்டிக்க வேண்டும். இந்த நிலை உருவாகியதற்கு அந்த அதிகாரிகள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, அவர்கள்தான் அந்தக் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே எடுக்கப்பட்ட இந்த குமரலிங்கம் பகுதி தண்ணீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்ததாகக் கருதி பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



2000 மே 8]

முற்பகல் *11-05*

## 5. மானியக் கோரிக்கைகள், 2000–2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

### (ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.*16,22,70,000*-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1682*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், பெருமுகை கருகம்பத்தூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*16,22,70,000*-ல் ரூ.*100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3167*, திரு நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4665, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1423, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் பஞ்சாலைத் தொழில்கள் நலிவடையாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2771, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத்தை மூலப் பொருளாகக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2164, திரு. ஆர்.ஆர். சேகரன்.



**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1611, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1329, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தண்டராம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3841, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் எந்தவிதத் தொழிற்சாலைகளும் இல்லாமல் இருப்பதால் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்து வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2754*, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை, சிப்காட் தொழில் வளாகத்தில் அரசு மூலமாக புதிய தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3749*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2389*, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3274*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி பகுதியில் சர்க்கரை ஆலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4080*, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் வட்டத்தில் 1000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் வகையில் பெட்ரோ கெமிக்கல்ஸ் தொழிற்சாலை தொடங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3605*, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் ரப்பரை மூலப் பொருளாகக் கொண்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர்களை உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2455*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூரில் தொழிற்பேட்டை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1374*, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to revamp the sick units in Hosur and other places of Tamil Nadu to provide more employment opportunities to the unemployed youths of Tamil Nadu", I move—

"That the sum of Rs. 16,22,70,000/- allocated under Demand No. 24—Industries be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 748, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,22,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2893, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் எஃகு ஆலையை மீண்டும் திறந்து இலாபகரமாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4986, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில், சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3671, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் தொழிற்பேட்டை ஒன்று தொடங்க உரிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2295, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், காமலாபுரம் ஊராட்சியில் நூற்பாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2000 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2692, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி மிகவும் பின்தங்கியுள்ளதாலும், தொழிற்சாலைகள் இல்லாததாலும் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2412, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1136, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் பெரிய தொழிற்சாலைகள் அமைப்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3071, திரு. பி.வெங்கடசாமி.



2000 மே 8]

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to start Phase-III Industrial Complex in Hosur in view of growing demand from the industrialists", I move—

"That the sum of Rs. 14,000/- allocated under Demand No. 53—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5090, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இன்று 12 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். விவாதத்தைத்

"@ 149 முதல் 191 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது."

தொடங்கி வைக்கின்ற முதல் உறுப்பினருக்கு 15 நிமிடங்களும், மற்ற எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடங்கள் வீதமும் ஒதுக்கப்படுகின்றன. இதைக் கண்டிப்பாக அனைவரும் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றியினைச் சொல்லி என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24 ஆம் எண் மானியக் கோரிக்கைக்கு ரூ.16,22,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் தொகை பெரும்பாலும் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்கான தொகையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்ததாக, தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவிற்கு, 53 ஆம் எண் மானியக் கோரிக்கைக்கு வெறும் 11,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். 11,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்றுதான் இதிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஓர் ஆண்டு 'இந்து' பத்திரிகை வாங்கினால் 11,000 ரூபாய் செலவாகும் என்று ஒரு கணக்குச் சொல்கிறார்கள். எனவே, 11,000 ரூபாய் மூலதனச் செலவிற்கு ஒதுக்கினால் தமிழக அரசாங்கம் தொழில் துறைக்காக எந்தத் தொகையை ஒதுக்கப் போகிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு துறை, முதலமைச்சரிடம் இருந்தால் அந்தத் துறைக்கு அதிக நிதியொதுக்கீடு கிடைக்கும் என்கிற ஓர் எண்ணம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் முதலமைச்சர் அவர்களிடமே ஒரு துறை இருந்தும்கூட, போதுமான நிதியொதுக்கீடு இல்லையோ என்கிற எனது சந்தேகத்தை நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இந்த கூட்டத்தொடரிலே 1-1-2000 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இடையே நானும் ஒரு விளக்கத்தை முதலமைச்சர் அவர்களிடமிருந்து கேட்டோம். அதனைப் பிறகு தெரிவிப்பதாகச் சொன்னார்கள். இந்த நேரத்திலே



அவர்களுடைய கவனத்திற்கு அதனைக் கொண்டுவந்து அதிலிருந்து விளக்கத்தைப் பெற நாங்கள் விரும்புகிறோம். 23-1-2000 தினத்தன்று அரசாணை எண் 12-லே புதிதாகத் தொழில் தொடங்குகின்ற மற்றும் விரிவாக்கம் செய்கின்ற தொழில்களுக்கு விற்பனை வரிச் சலுகைகளை அளிப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்; அந்தத் துறை அறிவித்திருந்தது. அதன்பிறகு, 7-2-2000 அன்று அரசாணை எண் 26-ஐப் பிறப்பித்து, அரசாணை எண் 12-ல் அறிவிக்கப்பட்ட சலுகைகள் எல்லாம் இரத்து செய்யப்படுவதாக அடுத்த அரசாணை 15 தினங்களிலே வந்தது. இதனைப் பற்றிய விளக்கத்தை நாங்கள் கேட்டோம். அரசாணை எண் 12-லே ஒரு ஷரத்து என்ன சொல்கிறது என்றால், "இந்த ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து உற்பத்தியை இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக—அதாவது, 22-1-2002-க்குள்— தொடங்கி விட வேண்டும். அப்படித் தொடங்கினால் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும்" என்று. ஆனால் 7-2-2000 அரசாணை எண் 26-லே 22-1-2001-க்குள் தொடங்க வேண்டுமென்று, ஓர் ஆண்டை நீங்கள் குறைத்திருக்கிறீர்கள். அதன் மூலமாக தமிழகத்திலே இருக்கின்ற இரண்டு சிமெண்ட் ஆலைகள், செட்டிநாடு சிமெண்ட், மெட்ராஸ் சிமெண்ட் மற்றும் Electro Steels Limited போன்ற நிறுவனங்கள் பெருத்த நஷ்டத்தை அடையும், மேற்கொண்டு அவர்கள் தொழில் விரிவாக்கத்தை செய்ய முடியாத அளவிற்கு, அவற்றை மூடிவிடவும் வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த போது, முதலமைச்சர் அவர்கள் "நாங்கள் 23-1-2000-லே போட்ட ஆணையை அமைச்சரவை கூடிப் போட்டோம்; ஆலோசித்துப் போட்டோம். அதன் பிறகு கேரள அரசாங்கம் இதைவிட ஒரு சிறந்த அரசாணையைப் பிறப்பித்திருப்பதாக நாங்கள் அறிந்து, அதனையொட்டியே இந்த அரசாணையை நாங்கள் 7-2-2000-ல் போட்டிருக்கிறோம்" என்று தெரிவித்தார்கள். அதன் பிறகு "கேரள அரசு தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறது" என்று நாங்கள் சொன்னபோது, "அப்படி அவர்கள் மாற்றிக் கொண்டிருந்தால், நானும் பரிசீலிக்கிறேன்" என்று அவர்கள் சொன்னார்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, 'நானும் பரிசீலிக்கிறேன்' என்ற வாசகம் மாத்திரமல்ல, "நமக்குப் பாதகம் ஏற்படாமல் இருக்கும்பட்சத்தில் பரிசீலிக்கிறேன்" என்று

சொல்லியிருக்கிறேன். இப்பொழுது 250 கோடி ரூபாய் அதனால் அரசுக்கு நட்டம் வரும். அந்த வரியை நாம் விட்டுவிட்டால், 250 கோடி ரூபாயை அரசு இழக்கவேண்டியிருக்கும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் ஒன்றைப் பரிசீலிக்க ஆரம்பித்தாலே நட்டம்தான் வரும். அரசாங்கத்திற்கு நட்டம் வந்தால் அது பொதுமக்களுக்கு இலாபம். அதாவது, இரண்டு தொழிற்சாலைகளுக்கு அது இலாபம் என்று நாங்கள் கருதவில்லை. உதாரணமாக, ஹூண்டாய், ஃபோர்டு தொழிற்சாலைகளுக்கெல்லாம் அந்நிய பிரதிநிதித்துவத்திலிருந்து வந்திருக்கிறவர்களுக்கு 14 ஆண்டுகளுக்கு நாம் சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறோம். ஆனால் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஆனால் சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு கிராமப்புறங்களில் வேலை கொடுக்கப்படுகிறது. எனவே, நம்முடைய உள்ளூர்த் தொழிலுக்கு நாம் ஒரு சலுகையைக் கொடுப்பது, அதுவும் ஏற்கெனவே கொடுப்பது என்று நீங்கள் முடிவெடுத்த ஒரு சலுகையைக் கொடுப்பதிலே எந்தவிதமான சிரமமும் அரசாங்கத்திற்கு இருக்காது. நமக்கு 250 கோடி ரூபாய், அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரி வருவாயில் இழப்பு ஏற்படுமானால், வேறு ஒரு வகையிலே அது பொது மக்களுக்கு இலாபம் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுதான் தொழில் சித்தாந்தம். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரள அரசு 31-3-2000 தேதியிட்ட அரசு ஆணை எண் 57-லே தனது முந்தைய கொள்கையை மாற்றிக் கொண்டு, அதாவது நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் மாற்றுவதற்கு எந்த அரசாணை காரணமாக இருந்ததோ, அந்த அரசாணையினுடைய கொள்கையை அவர்கள் மாற்றிக் கொண்டு 31-12-2001-க்குள் உற்பத்தியைத் தொடங்கினால் சலுகை வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல தென்னிந்திய மாநிலங்கள் எல்லாமே ஏதாவது ஒரு வகையிலே உள்நாட்டுத் தொழிலதிபர்களுக்கு, தொழில் முனைவோர்க்கு ஒரு சலுகையை அளித்திருக்கின்றன. உதாரணமாக நாம்கூடச் சொல்லியிருக்கிறோம். என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், நான்கு விதமான காரணங்களை நாம் சொல்லியிருக்கிறோம்.



"ஒன்று, தொழிலகங்கள் மாநில அல்லது மத்திய அரசின் முகவர்களிடம் பதிவு செய்திருத்தல் வேண்டும். இரண்டு, தொழிற்சாலைக்கான நிலம் ஒதுக்கீடு செய்திருக்கவேண்டும்; அல்லது நிலம் வாங்கியிருக்கவேண்டும். மூன்று, நிதி உதவிக்காக முறையான நிதிநிறுவனத்திடம் விண்ணப்பித்திருக்க வேண்டும். நான்கு, 22-12-2002-க்குள் உற்பத்தியைத் தொடங்க வேண்டும்" என்பதுதான் நம்முடைய முந்தைய நிலைப்பாடு. ஆனால் 7-2-2000 அரசாணைக்குப் பிறகு இவையெல்லாம் காலாவதியாகிவிட்டன. எனவே இந்த நிலையை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். அரசுக்கு எதிராக பத்திரிகைகள் இதிலே உள்நோக்கம் கற்பிக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை, இதிலே அரசாங்கத்திற்கோ அல்லது முதலமைச்சருக்கோ உள்நோக்கம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இந்த விஷயம், ஏதோ ஒரு வருவாய் வருகிறது என்று கணக்கிட்டு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கக் கூடும். ஆனால் இன்றைக்கு கேரள அரசு, கர்நாடக அரசு மற்றும் ஆந்திர அரசு ஆகிய இந்த மூன்று மாநிலங்களுமே புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு, விரிவாக்கம் செய்கின்றவர்களுக்குச் சில சலுகைகளை வழங்குகிறபோது, அதே சலுகைகளை நாமும் வழங்கவேண்டும். இல்லையென்றால்; அந்நிய மூலதனத்திற்கு ஒரு ஆதரவும், உள்நாட்டு மூலதனத்திற்கு ஒரு எதிர்ப்பும் என்பது ஒரு இரட்டை நிலையாகும். அது வரவேற்க முடியாத ஒன்று என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும்கூட ஒருபடி நான் மேலே சென்று சொல்ல வேண்டுமானால், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இது இப்பொழுது அந்நிய முதலீட்டுக்கு, உள்நாட்டு முதலீட்டுக்கு என்று பாகுபடுத்திப் போடப்படவில்லை. எல்லா முதலீட்டுக்கும் சேர்த்துத்தான் போடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-20

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்நிய மூலதனக்காரர்கள் ஏற்கெனவே சலுகைகளைப் பெற்றுவிட்டார்கள். நம்மவர்கள் கொஞ்சம் பின்தங்கிப் போய் இருக்கிறார்கள்

என்பதனால்தான் இப்போது இந்தச் சலுகைகளை அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "எதிர்க்கட்சிகள் ஒரு கோரிக்கையை வைத்தால், அந்தக் கோரிக்கையில் நியாயம் இருக்குமானால், நான் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமாட்டேன்" என்று சொன்னார்கள். இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சிகள் மட்டும் வைக்கவில்லை. அழகிரியும் சேர்த்து வைத்திருக்கிறேன். எனவே, முதலமைச்சர் ஏற்றுக்கொள்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். முதலமைச்சர் இதற்கு நல்ல பதிலையும் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதற்கு விரிவான பதில் தேவையில்லை. எதிர்க்கட்சியிலே அழகிரியும் இருக்கிறார் என்று அவர் சொன்னதற்காக நன்றி. "அழகிரியும் சேர்த்துதான் வைக்கிறேன்" என்று சொன்னார். நன்றி கூறிக்கொள்கின்றேன். ஆனால், நான் முதலிலே சொன்னதைத்தான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். பாதகம் ஏற்படாமல் இருக்கும் பட்சத்தில், அவர் குறிப்பிட்டதைப்போல, இதிலே எந்தவிதமான தீமையும் விளையாது என்ற பட்சத்தில் பரிசீலிக்கப்படும் என்பதிலேயிருந்து நான் பின்வாங்கவில்லை; பரிசீலிக்கப்படும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகிரி எப்போதுமே எதிர்கட்சிதான். அதேபோல, இதிலே எந்தப் பாதகமும் வராது. நான் ஏற்கெனவே சொன்னேன். நீங்கள் வரி விலக்கு அளிப்பது என்பது ஒரு வகையிலே இழப்பு என்று தோன்றினாலும்கூட, அது கிராமப்புற வளர்ச்சி, ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது என்ற வகையிலே அரசாங்கத்திற்கு மிகப் பெரிய இலாபம்தான், நாம் ஏற்கெனவே அளிப்பது என்ற முடிவை செய்திருக்கிறோம். அதன் பிறகு அந்த முடிவை மாற்றிக் கொண்டோம். முடிவை மாற்றிக்கொண்டதற்கு நாம் சொன்ன காரணம், கேரள அரசாங்கம் இப்படிச் செய்திருப்பதைப் போல நாமும் செய்தால் என்ன என்பதுதான் என்று சொன்னீர்கள். ஆனால், இன்றைக்கு கேரள அரசாங்கம் தன்னுடைய நிலையை மாற்றிக்கொண்டிருக்கிறது; கர்நாடகம் மாற்றிக் கொண்டிருக்கிறது; ஆந்திரா மாற்றிக்கொண்டிருக்கிறது; தமிழகம் மட்டும் மாற்றிக்கொள்ளவில்லையென்றால், அதற்கு என்ன காரணம் என்பதனையும் மற்றவர்கள் கேட்பார்கள். எனவே, தயவுசெய்து, இந்த நிலையிலிருந்து முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கீழே இறங்கி வரவேண்டும் என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள் என்பதனை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



இரண்டாவதாக, இரண்டு தினங்களுக்கு முன்பு நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சருடைய பெயரால் ஒரு அறிக்கை வெளி வந்திருக்கிறது; அம்புஜா சிமெண்ட்ஸ் பற்றி. நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. அதிலே உண்மை எது, பொய் எது என்பது தெரியாது. உண்மை எது, வதந்தி எது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அந்த அறிக்கையைப் படிக்கிறபோது எனக்கு ஒரு இடத்தில் இடித்தது. அமைச்சர் சொல்கிறார் "குஜாராத்திலிருந்து வந்திருக்கிற அந்த ஆலை அதிபர்கள் சிப்காட்டிலே இடம் கேட்டார்கள். இரண்டு மாதங்களுக்குள் கொடுத்தோம். வரைபடம் போடவேண்டும்; போட்டார்கள். அதிலே 1,600 ரூபாயோ, 2,000 ரூபாயோ கட்டியிருக்கிறார்கள். ஆனால் 18 ஆயிரம் ரூபாய் அவர்கள் கட்டியிருக்க வேண்டும். கட்டாத காரணத்தினால் அந்த மதிப்பீடுகள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன" என்பதுதான் அதிலே இருக்கிற கரு. நான் கேட்க விரும்புகிறேன்; ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிற அரசாங்கம்—அந்த நிறுவனத்தினர் குறைந்த விலையிலே சிமெண்ட் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்களால் கொடுக்க முடியும் பட்சத்திலே இது ஒரு சிறிய தவறாகக்கூட இருக்கலாம்; அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், யாராவது அவர்களுடைய ஏஜெண்டுகள் செய்திருக்கலாம். 18 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டிய இடத்திலே 2 ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார்கள்—அவர்களை அழைத்து–

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்புஜா நிறுவனம் இப்போதுகூட தமிழ்நாட்டிலே சிமெண்ட் கொண்டு வந்து விற்கலாம். இந்தியாவிலே உள்ள எந்த சிமெண்ட் நிறுவனமும் தமிழ்நாட்டிலே சிமெண்ட் கொண்டு வந்து விற்பதை இந்த அரசாங்கம் தடை செய்யவில்லை. அம்புஜா நிறுவனம் செய்த தவறு என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் அழகிரி குறிப்பிடுவதைப்போல, 18 ஆயிரம் ரூபாய் கட்டாததல்ல; 1,100 ரூபாய் கட்டிவிட்டு அவர்கள் சுமார் 1,500 சதுர அடி நிலத்திலே கட்டடம் கட்டுவதற்குப் பதிலாக பெரிய கட்டடத்தை 8 வரைபடங்கள் போட்டு, ஏறக்குறைய 12 ஆயிரம் சதுர அடிக்குக் கட்டடத்தைக் கட்டத் தொடங்கினார்கள். அப்போதுதான் அந்த ஊராட்சி மன்றத் தலைவர், "நாங்கள் 1,500 சதுர அடிக்குத்தானே அனுமதி கொடுத்தோம், நீங்கள் இவ்வளவு பெரிய கட்டடம் கட்டுகிறீர்களே" என்று கேட்டபோது, அந்த ஊராட்சி மன்றத் தலைவருடைய கையெழுத்தை forgery செய்து, அந்தக் கட்டடத்தை அவர்கள் கட்ட ஆரம்பித்தார்கள். அதனால்தான்

பிரச்சினை ஏற்பட்டது. அந்த வழக்கு கிரிமினல் வழக்காக நீதிமன்றத்திலே இருக்கிறது. அதற்கு மேலே விவரம் நான் சொல்ல விரும்பவில்லை.

*முற்பகல் 11-25*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கூட, பிற சிமெண்ட்டுகளை இங்கே விற்பதற்கு நீங்கள் தடை செய்கிறீர்கள் என்று சொல்லவில்லை. நான் அதிலே கவனமாகப் பேசினேன். நான் அப்படிச் சொல்லவில்லை. இந்தக் குற்றச்சாட்டு மிகவும் மலிவான குற்றசாட்டாக இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

அவ்வளவு பெரிய ஒரு நிறுவனம் ஒரு வரைபடத்திற்குப் போய் forgery கையெழுத்துப் போடுவார்கள் என்று நான் நம்பவில்லை. ஒப்பந்தக்காரர் செய்திருக்கலாம். "அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருகிறேன்" என்று சொன்ன ஒப்பந்தக்காரர் செய்திருக்கலாம். ஏஜெண்டுகள் செய்திருக்கலாம் அல்லது நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையிலே அவர்கள் கட்டடத்தைக் கட்டியிருக்கலாம். எப்பொழுதுமே பெரிய தொழில்கள் அப்படித்தான்; விண்ணப்பிப் பார்கள்; வரும் என்ற நம்பிக்கையிலே கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருப்பார்கள். நான் வேறெந்த விஷயத்திற்கும் செல்லவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் சரியில்லாத குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன. அரசாங்கத்தின் தரப்பிலிருந்து, வருகின்ற காலங்களிலாவது இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் இருக்கவேண்டும். *(மணியடிக்கப் பெற்றது)* அவர்களைப் போய் அழைத்துவர வேண்டும். பிற மாநிலங்களிலெல்லாம் hot-line வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கும் தொழில் அதிபருக்கும் hot-line வைத்திருக்கிறார்கள். பத்திரிகையிலே படித்துக்கூட முதலமைச்சரே அவரை அழைத்து, 'உடனடியாக வாருங்கள் நானே உங்களுடைய வரைபடத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறேன்' என்று சொல்லி, அந்தத் தொழிற்சாலையை எப்படியாவது நாம் கொண்டுவந்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்ததாக, தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை முன்னிலைப் படுத்துவதற்கு இந்த அரசாங்கம் பெரிய முயற்சிகளை எல்லாம் எடுத்தது. எனக்கு அதிலே மகிழ்ச்சி. நான் அதை வரவேற்கிறேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கு இருக்கிற வேலைப்பளுவின் காரணமாக, மிக முக்கியமான விஷயங்களிலே வெற்றிபெறாமல் போய்விட்டாரோ என்பதுதான் என்னுடைய கருத்து. தமிழகத்திலே நாங்கள் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம்; முதலிடத்திலே



இருக்கிறோம் என்று சொல்கிறீர்களே, *500* மெ.வா. மின்சாரப் பற்றாக்குறையை வைத்துக்கொண்டு, தமிழகத்திலே நீங்கள் எப்படித் தொழில் துறையிலே முதல் இடத்திற்கோ, இரண்டாவது இடத்திற்கோ அல்லது ஐந்தாவது இடத்திற்கோ வரமுடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. நிச்சயமாக முடியாது. பிரச்சாரம் செய்யலாம். *(மணியடிக்கப்பெற்றது)* பத்திரிகையில் நீங்கள் அறிக்கை கொடுக்கலாம். அதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்பதைத்தான் நான் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரு மாநிலம் தொழில் துறையிலே முன்னேற வேண்டுமானால் இரயில்வே துறையிலே அவர்கள் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் அவர்கள் முன்னேற முடியும். இல்லையென்றால், ஒரு மாநிலம் தொழில் துறையிலே நிச்சயமாக முன்னேற முடியாது. இன்றைக்கு கேரளாவையும், மகாராஷ்டிரத்தையும் எடுத்துக்கொள்வீர்களானால், Broad gauge—அகல இரயில் பாதை—இல்லாத ஊரே கிடையாது. அங்கே Metre gauge முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் தமிழகத்திலே நீங்கள் எவ்வளவு கிலோமீட்டர் Broad gauge—அகலப் பாதை— கொண்டுவந்திருக்கிறீர்கள்? நிச்சயமாக அதிக அளவில் இல்லை, குறைவான அளவிற்குத்தான் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

அடுத்து, நம்முடைய அரசாங்கம், மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிற திட்டங்கள் மிகவும் குறைவானது. அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் அதிகம். என்னிடம் நிறையக் குறிப்புகள், ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனாலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க நான் சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக, விழுப்புரம்—பாண்டிச்சேரி; நமக்குத் தேவையானது *30* கோடி ரூபாய்; ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு கோடி ரூபாய். தஞ்சாவூர்—விழுப்புரம்; நமக்குத் தேவையானது *233* கோடி ரூபாய்; ஆனால், ஒதுக்கப்பட்டிருப்பது 20 கோடி ரூபாய். கடலூர்—விருத்தாசலம்; நமக்குத் தேவையானது *99* கோடி ரூபாய்; ஆனால், ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு கோடி ரூபாய். திருச்சி—நாகூர்; தேவையானது *138* கோடி ரூபாய்; ஆனால், ஒதுக்கப்பட்டிருப்பது *84* கோடி ரூபாய். கொல்லம்—திருநெல்வேலி—திருச்செந்தூர்—தென்காசி—விருதுநகர்; நமக்குத் தேவையானது *280* கோடி ரூபாய்; ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பது

25 கோடி ரூபாய். மதுரை—இராமேஸ்வரம்; நமக்குத் தேவையானது 240 கோடி ரூபாய்; ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பது 10 கோடி ரூபாய். நான் கேட்கிறேன். இவ்வளவு குறைவான மூலதனத்தை வைத்துக்கொண்டு நீங்கள் எப்படித் தொழில் துறையிலே முன்னுக்கு வரமுடியும் என்று. (மணியடிக்கப்பெற்றது) பிரதான இடங்களிலேகூட——

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகி விட்டது. உங்களுக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் மட்டும்தான் அனுமதி.

**திரு. ச. அழகிரி:** இருவழிப் பாதை நமக்கு இல்லை. கேரளத்திலும் மகாராஷ்டிரத்திலும் பிரதான சாலைகள் முழுவதும் இருவழிப் பாதையாக மாற்றப்பட்டிருக்கின்றன. தமிழகம்தான் கேரளத்தை விட, மகாராஷ்டிரத்தைவிட இந்திய இரயில்வேக்கு அதிகமாக வருவாயைத் தருகிறது. ஆனால், தமிழகத்தில் அதற்கு இணையான தொகையை, இணையான இரயில்வேயை நம்மால் பெறமுடியவில்லை. ஒரு சின்ன உதாரணம். நவம்பர் 25ஆம் தேதி அகில இந்திய இரயில்வே, தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, எவ்வளவு நிதி ஒதுக்கீட்டைப் பெறவேண்டும் என்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அதில், கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் தான்—நாற்பதிலே பத்து பேர்தான் கலந்துகொண்டார்கள்—எனவேதான் அதிலே பெருமளவிற்கு நம்மால் எதையும் செய்யமுடியவில்லை என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன். (குறுக்கீடு) மூன்று நிமிடங்கள் அதிகமாகிவிட்டன. இன்னும் 12 பேர் பேசவேண்டும். திரு. ஆர். சிவராமன். (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** துணைத் தலைவர் அவர்களே, Technical Upgradation Fund வந்திருக்கிறது. மத்திய அரசாங்கம் 25 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற தனியார் முதலாளிகளும் அரசாங்கமும் சேர்ந்து அதிலே, எத்தனை ஆயிரம் கோடி ரூபாயை நம்முடைய பங்காகப் பெற்றிருக்கிறோம் என்பதனை முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோல், தகவல் தொழில்நுட்பத்தில்கூட நம்முடைய அளவு என்பது குறைவாக இருக்கிறது. ஹைதராபாத்துக்கும் பெங்களூருக்கும்



இணையாக சென்னை இல்லை என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய சின்ஹா அவர்கள்கூட பாராளுமன்றத்திலே உரையாற்றிய நேரத்திலே....

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, T.U.F. என்பது textiles சம்பந்தப்பட்ட Upgradation Fund. அது 25 ஆயிரம் கோடி ரூபாய். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே இதைக் கொடுக்க வேண்டும் என்பது அடிப்படை. ஆனால், ஒட்டுமொத்தமாகக் கொடுக்கப்பட்ட தொகை வெறும் 501 கோடி ரூபாய்தான், அவ்வளவுதான் இதிலே கொடுக்க முடிந்தது. அதிலும் குறிப்பாக, குஜராத்துக்கு அடுத்தபடியாக நாம்தான் அதிகம் பெற்று இருக்கிறோம். குஜராத் அதிகம் பெற்றதற்குக் காரணம், அவர்கள் Composite Mills வைத்து இருக்கிறார்கள். நாம் கேட்ட காரணத்தினால்தான் நூற்பாலைகளுக்கு அந்த நிதியைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நிச்சயம் அதிலே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். மேலும் அதை ஒழுங்குபடுத்தினால் நிச்சயம் பெரிய அளவிலே அந்தத் தொகையைப் பெற முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கூற்று சரியான கூற்று இல்லை என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. நாம் அதிலே இரண்டாவது இடத்திலே இல்லை. இந்த அவையிலே நீங்களே ஒரு முறை சொல்லி இருக்கிறீர்கள், "நாம் அதிலிருந்து பெற்று இருக்கிற தொகை 71 இலட்சம் ரூபாய்" என்றுதான். இரண்டாவது இடத்திலே இருப்பது குஜராத்; முதலிடத்திலே இருப்பது மகாராஷ்டிரம்; மூன்றாவது இடத்திலே இருப்பது அரியானா. நாம் இன்னும் அதற்காக முயற்சியே எடுக்கவில்லை. தமிழகத்திலே அதற்காக ஒரு Industrial cell அமைக்கப்படவே இல்லை. அதற்காக யார் முயற்சி செய்கிறார்கள்? அதற்குத் தொழில் துறையிலே யாரை நீங்கள் நியமித்து இருக்கிறீர்கள்? தொழில் தானாக வராது. அதற்கு ஒரு கமிட்டி போட வேண்டும்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு குழு போட்டு, வரக்கூடிய வாய்ப்பு உடையதல்ல. யார் யார் தங்களுடைய நூற்பாலைகளில், மற்றவற்றில் புதிய தொழிநுட்பத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற 5 சதவீத வட்டி மானியம்; அந்த 5 சதவீத வட்டி

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2000 மே 8

மானியம் பெறக்கூடிய வாய்ப்பு யார் யாருக்கு என்றால்—அது I.D.B.I-யா, அல்லது I.F.C.I-யா அல்லது I.C.I.C.I-யா அல்லது National Bank-ஆ எந்த வங்கியிலே அவர்கள் கடன் பெற்றாலும், அந்த 5 சதவீதத்தை மத்திய அரசு கொடுப்பதற்கு உரிய தகுதியை அவர்கள் பெற்று இருக்க வேண்டும். நாம் கேட்டு இருக்கிற தொகை அதிகம்தான். ஆனால், நமக்குக் கிடைத்து இருக்கிற தொகைதான் குறைவேயொழிய, அதிலேகூட தவறு எதுவும் இல்லை. சொல்ல வேண்டுமானால் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நான் நிச்சயம் அவற்றை உங்களுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன். *(குறுக்கீடு)*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு point மட்டும் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரயில்வே பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகுதான் திருச்சி வரை இருந்த அகல இரயில் பாதைகூட—அவர்கள் முக்கியப்படுத்தித்தான் அந்தப் பாதை—செப்பனிடப்பட்டது; அதுமட்டுமல்ல, செங்கல்பட்டு-அரக்கோணம் வரை இருக்கிற அகல இரயில் பாதையும் மிகக் குறுகிய காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு இரயில் திட்டங்களைச் சொல்லி, 20 கோடி, 10 கோடிதான் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தத் திட்டங்களுக்கு ஆகின்ற மொத்தச் செலவுகளை ஒரே ஆண்டிலேயே எப்போதும் ஒதுக்குவது இல்லை. முதல் ஆண்டுச் செலவுக்கு மட்டும்தான் ஒதுக்குவார்கள். 1967-லிருந்து 20 ஆண்டுகாலம் காங்கிரஸ் அங்கு ஆட்சி செய்த காலத்திலே வராத திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகுதான்—இத்தனை திட்டங்களையும்—கொண்டுவந்து இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உள்ள சிறப்பு. அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாகத்தான் இவ்வளவு இரயில் திட்டங்களையும்—அடிக்கடி நேரிலே பிரதமரைப் பார்க்கிறபோதும், இரயில்வே அமைச்சரைப் பார்க்கிற போதும் வலியுறுத்தி, மேலும் அடிக்கடி எழுதிய கடிதங்கள் மூலமாகவும்தான் இத்தனை திட்டங்களையும்—பெற்று இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2000 மே 8]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதிலே அரசியலைப் புகுத்த விரும்பவில்லை. அப்படியென்றால், என்னாலும் அரசியலை இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியும். நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள் என்பதைவிட, நீங்கள் செய்யத் தவறியதைச் சொல்வது என்னுடைய கடமை. நீங்கள் செய்ததைவிட செய்யத் தவறியது அதிகம் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்ததையும் சொல்லிவிட்டு, செய்ய வேண்டும் என்று கேட்டால், அது எதிர்க்கட்சி உறுப்பினருக்குச் சரியாக இருக்கும் என்றுதான் நானும் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், இன்றையதினம் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தொழில் மானியத்தில் உரையாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். தொழில் துறையைப் பொறுத்த வரையிலும் தமிழகம் மிகுந்த அளவிற்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது. அதிலும் குறிப்பாக, இப்போது இருக்கக்கூடிய எங்களுடைய தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் பொறுப்பு ஏற்றிருக்கின்ற காலத்தில் எல்லாம் தமிழகம் தொழில் துறையில் வளர்ச்சி பெற்று இருப்பதை நல்லவர்கள், தொழில் வணிகர்கள், தொழில் தொடங்க வேண்டும் என்று நினைக்கக்கூடியவர்கள் வாழ்த்திக் கொண்டிருக் கிறார்கள்; பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-35*

இந்த நேரத்தில் பல்வேறு கருத்துகளை, ஒவ்வொரு தொழிலிலும் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வம் எங்களுக்கு இருந்தாலும் நேரம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே ஒருசில கருத்துகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

எங்களது முதல்வர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலேதான் தொழில் துறையில் எல்லா மாவட்டங்களும் வளர்ச்சி பெற முடியும் என்பதை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகளை எடுத்துச் சொல்ல முடியும். பின்தங்கிய மாவட்டமாக இருக்கக்கூடிய எங்களது சிவகங்கை மாவட்டத்தில்கூட

[திரு. ஆர். சிவராமன்] [2000 மே 8

அவர்களுடைய காலத்தில்தான் சிப்காட் தொழிற்சாலையை உருவாக்கித் தர முடிந்தது. இராணிப்பேட்டையை எடுத்துக்கொண்டால் எங்களது முதல்வர் காலத்தில்தான் சிப்காட் தொழிற்சாலையை உருவாக்கித் தர முடிந்தது. சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சேலம் இரும்பு ஆலை எங்களது முதல்வர் அவர்கள் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதுபோன்ற புள்ளி விவரங்களைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வம் எங்களுக்கு இருந்தாலும் நேரமின்மை காரணமாக, கடந்த 12 ஆண்டு காலமாக நான் ஈடுபட்டிருக்கக்கூடிய கனிம வளத் துறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியை, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியை இந்த அவையில் நான் சொல்ல விரும்புகிறேன்.

தலைவர் அவர்கள் 1989-ல் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் ஏற்கெனவே இருந்த விதிகள் எல்லாம் மாற்றப்பட்டு, ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, டெண்டர் ஒப்பந்தத்தின் அடிப்படையிலே விடப்பட்டு, கனிம வளத்தைத் தனியார் எவரும் ஏலத்தின் மூலம் பெறலாம் என்ற நிலையை உருவாக்கி, 8(ஏ) என்ற விதியை உருவாக்கி, அதன் மூலமாக 20 கோடி ரூபாயை அரசுக்கு வருவாயாகத் தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் காலத்தில் பெற்றுத் தந்தார்கள்.

அதற்குப் பிறகு வந்தவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் 1993-லே, அவர்களுக்கும், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் தனிப்பட்ட விதத்தில் பயனைப் பெற வேண்டுமென்பதற்காக 39 என்ற விதியை உருவாக்கி, அதன் மூலமாகக் கிட்டத்தட்ட 123 நபர்களுக்கு, தனியார்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டு 500 ஏக்கர்களுக்கு மேலாக—அரசுக்கு ஒரு ரூபாய்கூட வருமானம் வராத வகையில்—தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள் என்பது வரலாறு.

அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்கிறது. 1998இல் மீண்டும் இந்த அவையிலே 8(ஏ) என்ற விதியைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதன் மூலமாக ஏற்கெனவே விடப்பட்ட இடங்கள் தவிர, இருந்த இடங்களைத் தேர்வு செய்து tender விடப்பட்டதன் மூலமாக அரசுக்கு 13 கோடி ரூபாய்க்கு மேலாக வருவாய் கிடைத்திருக்கிறது. இதுபோன்ற வரலாற்றை எங்களால் சொல்ல முடியும்.



2000 மே 8] [திரு. ஆர். சிவராமன்]

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் எங்களுடைய கலைஞர் அரசின் காலத்தில்தான், அதிலும் கடந்த 4 ஆண்டுகால ஆட்சியில் 1996-லிருந்து 2000 மார்ச் மாதம் வரையிலும் கிட்டத்தட்ட 406 கோடி ரூபாயை இந்த அரசு இலாபமாக, வருவாயாகப் பெற்றிருக்கிறது. இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் 4 ஆண்டு காலத்தில் இந்த அரசு கனிமத் துறையின் மூலமாகப் பெற்ற தொகை 406 கோடி ரூபாய். ஆனால் கடந்த ஆட்சியில், 5 ஆண்டு காலத்தில், கனிம வளத் துறையின் மூலமாக பெறப்பட்ட தொகை வெறும் 273 கோடி ரூபாய்தான் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு துறையின் மூலமாகச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே பெருமைப்படச் சொல்ல முடியும். மணல் குத்தகையை எடுத்துக்கொண்டால் கடந்த ஆட்சியில் மணலைக் கொள்ளையடித்தவர்கள் மூலமாக, அரசிற்கு பெறப்பட்ட வருவாய் 1 கோடியே 76 இலட்சம் ரூபாய்தான். ஆனால், திராவிட முன்னேற்றக்கழகம் பொறுப்பேற்றதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசின் நேர்மையான நடவடிக்கையினால், கொள்ளை அடித்தவர்களின் நடவடிக்கை தெரிந்து, அவர்கள் மூலமாகப் பெறப்பட்ட தொகை எவ்வளவு என்றால் 9 கோடியே 11 இலட்சத்து 501 ரூபாய். இவ்வளவு ரூபாயை இந்த அரசு வருவாயாக, இலாபமாகப் பெற்றிருக்கிறது.

முற்பகல் 11-40

இதுபோன்று ஒவ்வொன்றையும் பட்டியலிட்டுச் சொல்ல முடியும். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் கனிம வளத் துறையிலே ஏற்பட்ட இடையூறுகள், கொள்ளையடிக்கும் போக்குகள் எல்லாம் மாற்றப்பட்டு இன்றையதினம் அரசுக்கு வருவாய் கிடைத்திருக்கிறது. இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். மணல் குவாரிகள் ஏலம் விடப்பட்டதில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், கடந்த 4 ஆண்டுகாலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 23 கோடியே 33 இலட்சத்து 3394 ரூபாய், ஏலமாக விடப்பட்டு, டெண்டராக விடப்பட்டு, அரசுக்கு வருவாய் கிடைத்திருக்கிறது.

ஆனால், கடந்த ஆட்சியிலே—இங்கே ஒருசில உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதைப் பட்டியலிட்டுப் பார்த்தாலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்கு நேர்மையாக தொழில் துறையில் கவனம் செலுத்துகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். கடந்த

கால ஆட்சியிலே—ஐந்தாண்டு காலத்தில் மணல் மூலமாக அரசுக்குக் கிடைக்கப்பெற்ற வருவாய் வெறும் 4 கோடி ரூபாய்தான். இதேபோன்று எத்தனையோ பட்டியல்களை இங்கே சொல்ல முடியும். இந்தப் பட்டியல்களைச் சொல்கின்ற நேரத்திலே, நான் தலைவர் முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலத்தில் 1993 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 39ஆவது விதியை இரத்து செய்து தமிழக அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயை முறைப்படி அனைத்துத் தொழில் வணிகர்கள் மூலமாக இங்கே நானூற்றுச் சொச்சம் கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே முதல்வர் அவர்களையும், இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய இந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களையும், இந்தத் துறையைச் சார்ந்த கனிம வளத் துறை இயக்குநர் அவர்களையும் நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றை இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். மரியாதைக்குரிய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள். இங்கே இந்த ஆண்டு பற்றாக்குறை பட்ஜெட் அறிவிக்கப்பட்டிருக்கிறது; 600 கோடி ரூபாய்க்கு மேல். அந்த 600 கோடி ரூபாயையும் கனிம வளத் துறையின் மூலமாக எளிதாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கனிம வளத் துறையில் இன்னும் இருக்கிற அந்த வாய்ப்பைப் பெற வேண்டுமென்றால் நான் சொல்லக்கூடிய ஒருசில திட்டங்களைக் கொண்டு வந்தால் எளிதாக ஒருசில மாதத்திற்குள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கனிம வளத் துறையின் மூலமாக இந்த அரசு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதில் ஒன்று, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட 39 ஆவது விதியின்படி கொடுக்கப்பட்ட குவாரிமீது பணம் கட்ட வேண்டுமென்று ஒரு சட்டத்தை நமது அரசு கொண்டு வந்தது. அவர்கள் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அதன்மூலமாகத் தொழில் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் நீதிமன்றத்தில் நமது அரசு மூலமாக வழக்குத் தொடர்ந்து அந்தத் தடையை இரத்து செய்து அதன்மூலமாகப் பலகோடி ரூபாய் பெறக்கூடியதை எளிதாக விரைவாகப் பெற வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக தல வரி, தல மேல்வரி என்று கிட்டத்தட்ட 912 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது. அந்த 912 கோடி ரூபாயில் 63.42 கோடி ரூபாய்தான் நீதிமன்றத்தில் வழக்கில் இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 850 கோடி ரூபாய் இன்னும் வசூல் செய்யப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே அந்தத் தொகையை விரைவாக வசூல் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்க நமது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.





அடுத்தபடியாக தமிழகத்தில் இன்னும் என்னென்ன கனிம வளம் இருக்கிறது, எங்கெங்கே இருக்கிறது என்பதை அறிய முழுமையாக இன்னும் ஆய்வு நடத்தப்படவில்லை. ஆகவே நமது காலத்தில், நமது அரசின் காலத்தில், தமிழக முதல்வரின் காலத்தில் ஆய்வு செய்து தமிழக அரசுக்கு இன்னும் வருவாய் கிடைக்கக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். இங்கே தமிழகத்தில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தாலும் மணல் கொள்ளை என்பது இன்னும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டுமென்றால், மணலுக்கு என்று தனியாக ஒரு கார்ப்பரேஷனை நமது அரசு அமைத்தே ஆக வேண்டும்.

அடுத்தபடியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே தொழில் துறையினுடைய செயலாளர் அவர்கள் தமிழக முதல்வருடைய ஆணையைக் கேட்டு முழுமையாகச் செயல்பட்டாலும், மற்ற மாநிலங்களில் கனிமவளத்திற்கு என்று தனியாக ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டிருப்பதுபோல—காரணம் கனிம வளத்தில் ஒரு நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பெறக்கூடிய அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போன்று—கனிம வளத் துறையின் மூலமாக வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்பைப் பெறுவதற்கு ஒரு தனிச் செயலாளரைத் தயவுகூர்ந்து நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 405 கோடி ரூபாய் கடந்த 4 ஆண்டு காலத்தில் வருமானம் கிடைத்தாலும், இந்தத் துறையினுடைய சிறப்பு என்னவென்றால், இந்தத் துறையினுடைய செலவு வெறும் 3 சதவீதம்தான். மீதம் அனைத்தும் வருமானமாகக் கிடைத்திருக்கிறது. இதில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இன்னும் போதுமான வசதிகள் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. எத்தனையோ மாவட்டங்களில் வாகனங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே இன்னும் தவறுகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் கனிம வளத்திற்கு என்று தலைமை அலுவலகங்கள்கூட இன்னும் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, தமிழக முதல்வர் அவர்களே, அதற்கு நீங்கள் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதற்கு அடுத்தபடியாக N.L.C. பற்றி உங்களுக்குத் தெரியும். அங்கே 1986-ல் royalty உறுதி செய்யப்பட்டது வெறும் 2 ரூபாய் 50 காசுகள்தான்.

நமது அரசு அதற்குப்பிறகு எதுவும் உறுதி செய்யவில்லை. ஆகவே, அந்தத் தொகையை அதிகரித்தால் அரசுக்கு அதன்மூலமாகக் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேலாக வருமானம் வரக்கூடிய வாய்ப்பு உறுதியாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

மொத்தத்தில் தலைவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். முதல்வர் அவர்களே, இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்றால் வெகுவிரைவாக, துரிதமாக அரசுக்கு வரவேண்டிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை கனிமத் துறையின் மூலமாகப் பெற வேண்டுமென்றால், ஒரு குழுவைத் தயவு கூர்ந்து நீங்கள் அமைக்க வேண்டும். அதிகாரிகள் மற்றும் இந்தத் துறையில் நல்ல அனுபவம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் வல்லுநர்கள், ஆகியோரைச் சேர்த்து ஒரு குழு அமைத்தால் உறுதியாக அதன் மூலமாக வருமானத்தைப் பெறக் கூடிய வாய்ப்பு உருவாகும்.

எங்களது மாவட்டம், தலைவர் முதல்வர் அவர்களுக்கு நன்கு தெரிந்த மாவட்டம் ஆகும். எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மாவட்டம் என்பது முதல்வர் அவர்களுக்குத் தெரியும். எத்தனையோ முறை எங்களது மாவட்டத்திற்கு வந்திருக்கின்றார்கள். மருது இருவர் வாழ்ந்த மண்; வேலுநாச்சியார் வாழ்ந்த மண்; இன்னும் சொல்லவேண்டுமென்றால் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பிய கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த மண்; மக்களுக்குச் சொல்ல வேண்டிய கருத்தால், தனது வாழ்வழிந்தாலும் பரவாயில்லை என்று தனது நிலையை மாற்றாமல் கருத்தைச் சொன்ன இராமானுஜர் வாழ்ந்த மண், எங்களது சிவகங்கை மாவட்டம். அந்த மாவட்டத்தில் இப்போது தண்ணீர் இல்லாமல், மக்கள் மிகவும் சிரமத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டேன். அப்போது அவர்கள் காவிரி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டுவருவது ஆய்வில் இருக்கிறது. அந்த ஆய்வு வெற்றி அடைந்தால் நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு வழிவகை இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, தமிழக முதல்வர் அவர்களே, உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் வளர்ச்சி பெறக்கூடிய திட்டங்கள் எப்போதெல்லாம் வருகின்றனவோ, அந்தத் திட்டங்கள் அனைத்தையும் அறிவித்த பெருமை உங்களுக்கு உண்டு. ஆகவே இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும். எங்களது



மாவட்டத்தில் இருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினையையும் தீர்த்துத் தரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் முதன் முதலில் சட்டமன்ற உறுப்பினராக இந்த அவைக்கு வந்திருந்தாலும், ஆளும்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் என்பதால், எங்களுக்குப், பேசக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. எதிர் அணியிலே இருக்கக்கூடியவர்கள் எதை வேண்டுமென்றாலும் பேசலாம் என்று நிலையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். எங்கள் அனுபவம் மிகவும் குறைவாக இருந்தாலும், நாங்கள் எங்களது முதல்வரிடத்தில் பாடம் கற்றுக் கொண்டவர்கள். அவர்கள் சொல்கின்றபோது எதை வேண்டுமென்றாலும் பேசலாம். பொத்தாம் பொதுவாகப் பேசலாம் என்ற நிலையில் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் பேசுகின்றபோது, "முதல்வர் பதவியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, மத்திய அரசு எடுக்கக்கூடிய எந்த முடிவாக இருந்தாலும், ஆதரிக்கக்கூடிய நிலையில் முதல்வர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்" என்று ஒருசில நண்பர்கள் கூறுகிறார்கள். நான் அவர்களுக்கு அதற்குப் பதிலாக எத்தனையோ கருத்துகளை எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். எங்களது தலைவர், இப்போதிருக்கக்கூடிய முதல்வர், மனித நேயத்தினுடைய மாமனிதர் என்பதை இந்த அவை நன்கு அறியும். ஒன்றை மட்டும் அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். நெருக்கடி நிலை புகுத்தப்பட்ட நேரத்தில் மத்தியில் ஆண்டுகொண்டிருந்த பிரதமர் அவர்கள் தமிழகத்திலே காமராஜரைக் கைது செய்யவேண்டுமென்று சொல்கிறார். அப்போது எங்களது இனமான முதலமைச்சர் அவர்கள், நேரடியாக காமராஜர் அவர்களோடு தொடர்பு கொண்டு, "இதுபோன்ற உத்தரவு எனக்கு வரப்பெற்றிருக்கிறது" என்று சொல்கின்ற நேரத்தில், அவரும் சொல்கின்றார், 'உத்தரவை நீங்கள் அமல்படுத்துங்கள்' என்று. ஏனென்றால் அவரும் பெரியவர் அல்லவா? அப்போது எங்கள் தலைவர் சொல்கிறார், "நான் உங்களைக் கைது செய்வதற்கு வரவில்லை. உங்களைக் கைது செய்து, நான் இந்தப் பதவியில் இருக்க விரும்பவில்லை என்று சொல்வதற்காகத்தான், இங்கே வந்தேன்" என்று சொன்ன மனிதர்தான், இங்கே முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கின்றார். ஆகவே, கொள்கைக்காக வாழ்ந்தவர். கொள்கைக்காக எதையும் செய்வதற்குத் தயங்காத மாமனிதர் இங்கே முதல்வராக இருக்கிறார் என்று சொல்லி இதுபோன்ற எடுத்துக்காட்டுகளை, (மணியடிக்கப்பெற்றது) எங்களுக்கு நேரம் ஒதுக்கினால் பேசமுடியும் என்று கூறி மொத்தத்தில் நாங்கள்

வயதில் மிகவும் குறைவானவர்களாக இருந்தாலும் ஒன்றைச் சொல்கிறேன். எங்களது தலைவருக்கு நிகர் எவரும் இனி இந்த மண்ணில் பிறக்கப்போவதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்று மட்டும் சொல்லி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பலமுனைச் செயல் திட்டம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பம் சார்ந்த நவீன தொழிற்சாலைகளை உருவாக்குவது பற்றி மட்டுமே பெரிதும் பேசப்படுகிறது. நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞரின் கேமரா ஒளிமயமான பகுதிகளை மட்டுமே படம் பிடித்துக்காட்டியிருக்கிறது. ஆனால், வறண்டு போன சில பகுதிகளையும் படம் பிடித்துக்காட்ட வேண்டிய நிர்பந்தம் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால், இந்தக் கேமரா, திருப்பப்படாத இடங்களுக்குக் கொஞ்சம் திருப்பிப் பார்க்கலாம், என்று நான் கருதுகிறேன். தொழில் துறை குறித்து, விரிவான சர்வாம்ச பரிசீலனை செய்யவேண்டிய அவசியமும் தேவையும் இருந்தாலும் அதற்குரிய காலம் இல்லை என்கின்ற காரணத்தால், நான் சுருங்கிய நிலையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தொட்டுக்காட்டி முடிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

இங்கே பெரும்பகுதியும் பேசப்பட்டிருக்கின்ற விஷயங்களை நான் திரும்பப் பேசுவது என்னுடைய நேரத்தை விரயமாக்க பயன்பட்டுவிடக்கூடும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு என்று மாநில முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கோரியிருப்பது, தொழில் குறித்த மூலதனச் செலவு 14 ஆயிரம் ரூபாய் என்பது எந்த வகையில் என்பதை அவர்கள் நிறைவாகப் பதில் அளிக்கின்றபோது சொல்லக்கூடும். ஆனால், இப்படி ஒரு குறைவான தொகையைக் கோருவதற்குரிய காரணம் என்ன என்பது பற்றியும் நான் விரிவாகச் சொல்ல வேண்டிய விவரங்கள் இருந்தாலும், அதற்குள்ளே போனால் நேரம் போதாது என்பதால், நான் போக விரும்பவில்லை.

தொடர்ந்து பட்டியல் போடப்படுகிறது எவ்வளவு வேலைவாய்ப்புக்குரிய தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று.



தொழிற்சாலைகளின் ஜனனக் கணக்கு முறைப்படி பதியப்பட்டிருக்கிறது கொள்கைக் குறிப்பில். ஆனால், தொழிற்சாலைகளின் மரணக் கணக்கு மட்டும் பதியப்படவே இல்லை. நான், பதியப்பட்டிருக்கின்ற ஜனனக் கணக்குக்காகப் பாராட்டுகிறேன். உண்மையிலேயே இன்றைய தகவல் தொழில்நுட்பத் துறையில், உயிரியல் தொழில்நுட்பத் துறையில் உலகத்தோடு தமிழகம் சம நடை பயிலவேண்டும் என்கிற வேட்கையும், வேகமும் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதில் நான் மாறுபாடு கொள்ளவில்லை. ஆனால், அந்த வேகமும், வேட்கையும் மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளின்பால், பாரம்பரியமாய் உள்ள இந்தியத் தொழில்களின்பால் ஏன் செலுத்தப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறையாகக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதற்கும் காரணம் இருக்கிறது. சுயசார்பு என்ற பெயரால், உள்நாட்டுத் தொழிலுக்குக் காலவரையற்ற சலுகைகளை அளித்துப் பாதுகாக்கக் கூடாது என்பது மத்திய அரசின் கொள்கை. மத்திய அரசு என்ன கருதுகிறது என்றால், இந்தியாவினுடைய பாரம்பரியத் தொழில்கள் செழித்து, சிறப்படைய உரிய சலுகைகளைத் தொடர்ந்து வழங்கக்கூடாது என்பதுதான். அதற்குக் காரணம், அதற்கான குணதோஷமே மத்திய அரசின் தொழில் கொள்கைதான். மத்திய அரசு கடைப்பிடிக்கின்ற தொழில் கொள்கை இந்தியாவின் பாரம்பரியத் தொழில்களின் ஆணி வேரைத் தகர்ப்பதையே இயல்பாகக் கொண்டு அமைந்துவிட்டது. எனவேதான், இந்தியத் தொழில் துறை காப்பாற்றப்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், சமீபத்திலேகூட ஐ.நா.வினுடைய, அன்க்டாட் என்ற ஒரு பிரிவு ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில் ஆசியாவில் பல்வேறு நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து, அவற்றினுடைய செலாவணி மதிப்புக் குறைந்த நிலையில் இந்தியாவும், சீனாவும் மட்டும் தப்பிப் பிழைத்தன. இந்தியாவும், சீனாவும் தப்பிப் பிழைத்ததற்குக் காரணமே, இந்தியாவிலும், சீனாவிலும் வலிமை நிறைந்த பொதுத் துறை காப்பாற்றப்பட்டதாலும், இந்தியாவின் வங்கிகளும், இன்சூரன்ஸ் துறையும் அரசின் கட்டுப்பாட்டில் நின்ற காரணத்தினாலும்தான் ஆசியாவில் பிற நாடுகளில் ஏற்பட்ட செலாவணி, நாணய நெருக்கடி இங்கே ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டி இவ்விஷயத்தை நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [2000 மே 8

இந்த மாநிலத்தில், பல்வேறு விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். அதில் குறிப்பான ஒரு விஷயம் ஜவுளித் தொழில். மிக முக்கியமான ஒரு விஷயம் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் ஏனோ கண்டு கொள்ளப்படவில்லை. இந்தியாவின் பெருவீத அளவில், தமிழ்நாட்டில் பெருவீத அளவில் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ஒன்று ஜவுளித் தொழில். அந்த ஜவுளித் தொழில் நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கிறது. பஞ்சாலைகள் பல மூடப்பட்டிருக்கின்றன. பஞ்சாலை நகரங்களிலே, ஒரு வீதியிலே நடந்தால், அந்த வீதியிலே 10 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவை மீண்டும் புனரமைக்கப்படுமா என்றால் இல்லை. சமீபத்திலே மத்திய அரசு B.I.F.R. சட்டத்தையே இரத்து செய்து விடுவது என்று முடிவெடுத்துவிட்டது. நலிந்த தொழிற்சாலைகளை, மீண்டும் நலிவை நீக்கி செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசு தயாராக இல்லை. இந்த நிலைமைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு பார்க்கிறபோது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில், புதிய நவீன தொழில்நுட்ப நிலைக்குத் தக்கபடி சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், பிற பகுதிகளில் அவை கவனிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-55*

இன்னொரு விஷயம். ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் 4 விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று துறைமுக வளர்ச்சி; இன்னொன்று அடிப்படைக் கட்டமைப்பு; பிறிதொன்று அகல இரயில் பாதை; இன்னொரு மிக முக்கியமான ஜீவ இரத்தம், மின்சாரம். இந்த நான்கிலேயும் முன்னேற்றம் இருக்கிறது, இல்லை என்று நான் குறிப்பிடவில்லை. ஆனால், இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்கின்ற அளவிற்குத் தேவையான முன்னேற்றம் இவற்றில் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் மின்சாரத்தில் பற்றாக்குறை மாநிலம்தான். தொழில் வளர்ச்சியின் வேகத்திற்கு மின் உற்பத்தி ஈடுகொடுக்கவில்லை. அதேபோல, அகல இரயில் பாதை பற்றிச் சொல்லப்பட்டது. மத்திய அரசு சமீபத்திலே அறிவித்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாக, தமிழ்நாட்டில் சில இரயில்வே திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தும், திட்ட மதிப்பீட்டிற்கும், மத்திய அரசின் ஒதுக்கீட்டிற்கும் சம்பந்தமே இல்லை. அந்த ஒதுக்கீட்டைப் பார்த்தால், தமிழ்நாட்டிற்கு என்று அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறையில் நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குறி; சந்தேகம்



2000 மே 8] [திரு. கே. சுப்பராயன்]

இருக்கிறது. அந்த அளவிற்குத்தான் அவர்கள் நிதியை, 'ஒப்புக்கு சப்பை' என்று சொல்வார்களே, அப்படி அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதுகுறித்தும் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மின் துறையில் மிக அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இல்லையென்றால், நாம் பெரிய அளவிற்குப் பாதிக்கப்படுவோம்.

அதேபோல, இன்னொரு விஷயம், மத்திய அரசு அறிவித்தது. அதுகூட மாநில அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று கான்ட்லா துறைமுகத்திலும், இன்னொன்று நாங்குனேரியிலும் free zone அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு free zone என்று அறிவிப்பதன் மூலம் நமக்கு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு என்ன அனுகூல விளைவுகளை இவை ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தங்களுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது எந்தவிதமான வரி வருமானத்தையும் கொடுக்கப்போவதில்லை. அதுவும் மத்திய அரசு அறிவித்திருப்பது, ஒன்று, காண்ட்லா, குஜராத்தின் கடலோரப்பகுதி, இன்னொன்று, நாங்குநேரி, தமிழ்நாட்டின் கிட்டத்தட்ட கடலோரப் பகுதி. இந்த இரண்டு இடங்களையும் தேர்வு செய்து, Free Zone என்று அறிவித்திருப்பது, இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் எந்த அளவிற்கு பங்களிப்பைச் செலுத்தும் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பைப் பார்க்கிறபோது, சுதந்திர சந்தைப் பொருளாதார நிலைக்கு மாநில அரசின் கொள்கைகள் ஏறத்தாழ இரையாக்கப்பட்டுவிட்டனவோ என்று நான் ஐயுறுகிறேன். வெறும் சுதந்திர சந்தைப் பொருளாதாரம் என்பது, நமக்கு அவ்வளவு பலன் அளிக்கின்ற விஷயம் அல்ல. அந்தச் சிந்தனா ஓட்டத்திலிருந்துதான் தமிழ்நாட்டின் தொழிற் கொள்கையும் வகுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலை தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்யாது என்பதுதான் உண்மை.

இதே கொள்கை விளக்கக் குறிப்பில் சர்க்கரைத் தொழில் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழில் குறித்து அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழில் நஷ்டத்தில் இயங்குகிறது. என்ன காரணம்? சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லையா? பாகிஸ்தானிலிருந்து பல்லாயிரக்கணக்கான டன் இறக்குமதி செய்யப்பட்டது அல்லவா? இறக்குமதி வரிகள் பல விகிதங்களில் குறைக்கப்பட்டது அல்லவா? இந்தியாவினுடைய தொழில்

துறையைப் பாதிக்கிற அளவிற்கு அந்நிய முதலீடுகள் வந்திருக்கின்றன. அதுபற்றியெல்லாம் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நான் ஒரேயொரு விஷயத்தை வலிமையாகக் குறிப்பிட விரும்புகிறேன். அந்நிய முதலீடுகளின் தோற்றத்திற்கு, அதனுடைய விஸ்வரூபத்திற்குத் தக்கபடி வேலைவாய்ப்பு இல்லை. ஆனால், small scale industries என்னும், வேறுசில துறைகளில் அளிக்கப்படுகிற வேலைவாய்ப்பு இந்த heavy industries என்பதில் இல்லை என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல, Ford Company-க்கோ, Hyundai Company-க்கோ, அல்லது வேறுபல MNCs-க்கோ மாநில அரசு வழங்கியிருக்கிற சலுகைகளை இந்த மாநிலத்தில், இந்தப் பேரவைமுன் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். டான்செம். டான்செம் ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. நான் கடந்த முறையும் பேசினேன்; அதற்கு முந்தைய ஆண்டும் பேசினேன்; இப்பொழுதும் சொல்கிறேன். 50 சதவிகிதம் மட்டுமே, அதுவும் open market-ல் பிற சிமெண்ட் கம்பெனிகளோடு போட்டியிட்டு, அரசு நிறுவனங்களுக்கு விற்றுக் கொள்ளலாம் என்று சலுகை அளித்திருப்பது, டான்செம் நடைமுறையில் தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்று மாநில அரசு நிர்பந்திப்பதற்குச் சமம். ஏன் மாநில அரசு டான்செம் நிறுவனத்தை தற்கொலை செய்து கொள்ளவேண்டுமென்று நிர்பந்திக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அரசுத் துறையின் தேவைகளை TANCEM தான் சப்ளை செய்ய வேண்டுமென்ற பழைய நிலைக்குக் கொண்டுவரவில்லையென்றால், அந்த டான்செம் கம்பெனி அழிந்து விடும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு விஷயங்கள். இரண்டு அறிவிப்புகள் மட்டும். விவரங்களுக்குள்ளே போகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவரங்களுக்குள்ளே போனால் நேரமாகும். இரண்டே இரண்டு விஷயங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் தகவலாகத் தந்திருக்கிற விஷயங்களைச் சொல்லி முடிக்கிறேன்.

ஒன்று, செங்கல் சூளைகளிலே சில பிரச்சினைகள் இருப்பதாகத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். கனிம வள விதிமுறைகளில், கனிம வளக் கட்டணம் என்பது ஒன்று. இதுபோல, sales tax என்று ஒன்றும் இருக்கிறது. இது பாதிக்கிறது. அதிலே செங்கல் என்றால், பல்லாயிரக்கணக்கான சாமானியப்பட்ட விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில். அந்தச் செங்கலுக்குப்



பயன்படுகிற மண், கனிம வள விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு வருகிற வருவாயும் மிகக் குறைவுதான். தற்சமயம் கனிம வள விதி கடுமையாக்கப்பட்டுள்ளதால், உரிமம் பெறுவதில் மிகக் கடுமையான, நெருக்கடி இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இந்த விஷயத்தைக் கவனித்து, செங்கல் சூளைத் தொழில் நடத்துகிறவர்கள் கேட்பது ஒரு நியாயமான கோரிக்கை-அந்தக் கனிம வள விதிகளில் இருக்கிற கடுமையை நீக்கி, மிக எளிதாக அவர்கள் செயல்படுவதற்குரிய வாய்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

நிறைவாக ஒரேயொரு விஷயம். கடந்த 3-7-1997 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வேதாரண்யம் சதுப்பு நிலங்களின் பயன்பாடு பற்றிக் கண்டறிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் உறுப்பினர்கள் என்ற முறையில், Revenue Secretary, Industries Secretary, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைச் செயலாளர், நில நிருவாக ஆணையர், முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர் என்று 5 பேர் கொண்ட ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. 3-7-1997-ல் இருந்து இதுவரை அந்தக் குழு, சம்பந்தப்பட்ட இடத்தைப் போய் பார்வையிடவில்லை. பார்வையிடாத காரணத்தால், அந்தப் பகுதியில் உப்பளத் தொழில் நடத்துவதற்குரிய வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு, நான் நிறைவாகத் தெரிவிக்க விரும்புவது, உடனடியாக, அந்தக் குழு, சம்பந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டு, நிலத்தின் தன்மை, மற்ற விவரங்களை, இந்தக் குழு எதற்கு அமைக்கப்பட்டதோ, அந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் அவரது வழிகாட்டுதலுடன் சிறப்பாகச் செயல்பட்டு வரக்கூடிய தொழில் துறை மீதான மானியக் கோரிக்கையின் விவாதத்திலே கலந்துகொண்டு, என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. தங்கம் தென்னரசு] [2000 மே 8

மத்திய அரசினுடைய நிதித் துறை சார்பாக, ஆண்டுதோறும் வெளியிடப்படக்கூடிய economic survey என்று சொல்லக்கூடிய அந்த அறிக்கையிலே — இந்த ஆண்டு வெளியிடப்பட்டு இருக்கக்கூடிய அறிக்கையினைப் — பார்க்கிறபோது, இந்திய பொருளாதாரம், 1999-2000 ஆண்டிலே 6 சதவிகிதம் உயரக்கூடிய, ஒரு நல்ல நிலைமை எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல, தொழில் துறையிலே இருக்கக்கூடிய மந்த நிலை மாறி, மெல்ல மெல்ல தொழில் துறை வளர்வதற்கான அறிகுறியாக, 1998-99 ஆம் ஆண்டிலே இருந்த, manufacturing sector-ல் இருந்த G.D.P.-யினுடைய வளர்ச்சி, 3.6 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, 1999-2000 ஆண்டிலே 7 சதவிகிதமாக, ஏறத்தாழ இரண்டு மடங்கு அதிகரித்து இருப்பதையும், Construction Sector-ல் G.D.P. 5.7 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக அதிகரித்து இருப்பதையும் பார்க்கின்றபோது, நம்முடைய இந்திய தொழில் துறையிலே, ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் வந்திருப்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அதிலும் குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே 1999-2000 ஆண்டிற்கான புள்ளிவிவரங்களைப் பார்ப்போமேயானால், Total G.D.P. இந்தியாவிலேயே 5.9 சதவிகிதமாக இருக்கிறது என்று சொன்னால், தமிழகத்திலே, அகில இந்திய சராசரியைவிட, அதிகமாக 6.6 சதவிகிதமாக அது இருப்பதையும் குறிப்பாக, தொழில் துறையிலே, அகில இந்திய சராசரி 7 சதவிகிதம் இருந்தால், தமிழகத்திலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலே, 13 சதவிகிதமாக இருப்பதையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போல, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் முதலீடுகளைப் பொறுத்து, கொள்கை விளக்கக் குறிப்புகளிலே கொடுத்து இருப்பதைப்போல, 1996 ஆம் ஆண்டு மே திங்களிலே, நம்முடைய கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பிறகு, அன்றிலிருந்து இன்றுவரை, இந்தியா முழுமைக்கும் ஒப்புதல் தரப்பட்டு செயலாக்கத்திலுள்ள திட்டங்களின் மதிப்பீடு, முதலீடுகளின் மதிப்பு, 2 இலட்சத்து 26 ஆயிரத்து 638 கோடி ரூபாயாக இருக்கக்கூடிய நிலையில் தமிழகத்தினுடைய பங்கு 53 ஆயிரத்து 481 கோடியாக — சதவிகிதக் கணக்கிலே பார்த்தால் 23.50 சதவிகிதமாக — இந்தியாவிலே உயர்ந்த முதலீடு மதிப்பீடாக இருப்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2000 மே 8] [திரு. தங்கம் தென்னரசு]

அதைப்போல, 1996 ஏப்ரல் வரை நம்முடைய ஆட்சிக்கு முன்பு இருந்த ஆட்சிக்காலத்திலே இருந்த கணக்கையும் எடுத்துப் பார்ப்போமேயானால், மொத்த முதலீட்டில் தமிழகத்தின் பங்கு வெறும் 8.45 சதவிகிதமாக இருந்ததையும், நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, F.D.I. என்று சொல்லக்கூடிய Foreign Direct Investment என்பதிலும் கடந்த 10 ஆண்டு காலத்திலே, 1991-லிருந்து 2000 வரை, தமிழகத்திலே ரூபாய் 14 ஆயிரத்து 122 கோடி முதலீடு செய்யப்பட்ட நிலையில், நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, இதுவரையிலான, கடந்த நான்கு ஆண்டுகளில், 10,424 கோடி ரூபாய் முதலீட்டினை நாம் பெற்றிருக்கிறோம், அதாவது 73.8 சதவிகிதம் இதுவரை நாம் ஒரு பொருளாதாரத் தேக்கநிலை இருந்த கால கட்டத்திலேகூடப் பெற்றிருக்கிறோம் என்பது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகவே அமைகிறது.

தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய, இந்த முதலீடுகளைப்பற்றி, Business Today இதழில் — ஜனவரி 6 ஆம் தேதிய இதழிலே — மிக அருமையான கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 'The best States to invest in' என்ற தலைப்பிலே அவர்கள் எழுதுகிறபோது, 'South is emerging as the country's largest investment draw because of the improvements in the standards of Governance' என்றுதான் சொல்கிறார்கள். அரசாட்சியிலே, அரசினுடைய அருமையான நிலைப்பாடுகளின் காரணமாக, இந்த முதலீடுகள், தென்னகத்திலே, குறிப்பாகத் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்று அவர்கள் சிறப்பாகச் சொல்லிவிட்டு, மேலும் அதிலே சொல்கிறபோது 'Investments strength' எந்தக் காரணத்தினாலே இங்கே வருகிறது என்கின்றபோது மிக அழகாகச் சொல்கிறார்கள், 'business savvy of State Government and responsive local admininstration' என்று தொழிலாளர்களை ஈர்ப்பதற்கும், வர்த்தகத்திற்கு முழு ஆதரவும் கொடுக்கக்கூடிய ஓர் அருமையான மாநில அரசு இங்கே இருக்கக்கூடிய காரணத்தினால்தான், இத்தகைய முதலீடுகள் இங்கே வருகின்றன என்பதை அவர்கள் மிக அருமையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-05*

அதே இதழிலே 'Why Ford chose Chennai?' என்று ஆர். வெங்கடேஷ் என்பவர் 'National Council for Applied Economic Research-லே Industries and Infrastructure Division என்பதினுடைய தலைவராக இருக்கக்கூடியவர்

ஓர் அருமையான கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே, எந்தக் காரணத்திற்காக உலகத்திலே மற்றும் நம்முடைய இந்தியாவில் இருக்கக் கூடிய பல மாநிலங்களையெல்லாம் விட்டுவிட்டு Ford தொழிற்சாலை சென்னைக்கு வந்திருக்கிறது என்பதை மிக அருமையாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். மகாராஷ்டிரம் கை விரித்த நிலையில், பெங்களூர் ஒத்துக்கொள்ளாத நிலையில், தமிழகம் எந்த அளவில் அவர்களை வரவேற்று, Ford தொழிற்சாலையை இங்கே ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை மிக அருமையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, தொழில்நுட்பப் பூங்காக்களைப் பொறுத்தமட்டிலே TIDCO-வினுடைய மிக அருமையான திட்டமாக இப்போது TIDEL PARK வந்திருக்கிறது. ஏறத்தாழ 1 மில்லியன் சதுர அடி இட வசதி இருக்கக்கூடிய அளவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்காக அது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, நான் இங்கே இதே அவையிலே கன்னிப்பேச்சில் அதைப்பற்றிப் பேசிய நிலைக்குப்பின், இன்றைக்கு வானளாவிய ஒரு கட்டடமாக அது உயர்ந்திருக்கிற நிலையைப் பார்க்கிறபோது 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்கிற நம்முடைய தாரக மந்திரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக TIDEL PARK திகழ்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவாக இருந்தாலும், உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவாக இருந்தாலும், அவை எல்லாம் இன்றைக்கு நம்முடைய தலைவருடைய ஆட்சியிலே மிகச் சிறப்பாக வந்திருக்கின்றன.

பெட்ரோலிய இரசாயனப் பூங்காவைப் பொறுத்தமட்டிலே, நாட்டினுடைய மேற்குப் பகுதியிலே Reliance-ம் IPCL-ம் இருப்பதைப் போல, இப்போது புதியதாகக் கிழக்குப் பகுதியிலே Haldia Petrochemicals வந்திருக்கிறது. நாட்டினுடைய வடக்கிலே GAIL, AVRAIYA மிக அருமையான ஒரு பிளான்ட் போட்டிருக்கிறார்கள். ஆனால், தெற்குப் பகுதியிலே இந்த நாட்டினுடைய மிக முக்கியமான ஒரு கேந்திரம் வரக்கூடிய ஓர் அருமையான தொழிற்சாலை, பெட்ரோல் இரசாயன வளாகம், ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் செலவிலே இங்கே வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கே நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணன் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது, இந்திய அரசினுடைய தொழிற் கொள்கையை விமர்சித்துச் சொன்னார்கள். தொழிற் கொள்கையைப் பொறுத்தமட்டிலே நாம் அதை ஒத்துக்கொள்ள வேண்டும். Small Scale Industries தான் இப்போது 30 சதவிகிதமான உற்பத்தியைச் செய்கின்றன. அதிலேதான் அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பாதகமாக வரக்கூடிய எந்த ஒரு நிலையையும் மத்திய அரசு எடுக்காது என்று இரண்டு நாட்களுக்கு முன்பு, பாராளுமன்றத்திலே கவன ஈர்ப்பு அறிவிப்பிலே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு வர்த்தகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இறக்குமதி—

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், "சிறுவிதத் தொழில் பாதிக்காத அளவிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது" என்று. ஆனால், சிறுவிதத் தொழில் பாதிக்கப்படாத அளவிற்கு மத்திய அரசு செயல்படுவதை பொறுத்ததில்லை அது. அந்தக் கொள்கைகளைத் தீர்மானிப்பது W.T.O. தான். W.T.O.விடம் இந்திய அரசு ஒப்புக்கொண்ட நடைமுறைகளை, நடைமுறையில் நிறைவேற்றியாக வேண்டிய நிர்ப்பந்தம் மத்திய அரசிற்கு இருக்கிறது. எனவே, அந்த நிர்ப்பந்தத்தின் காரணமாக, சிறுவிதத் தொழில்களை பாதிக்க வைக்கின்ற கொள்கைகளைத்தான் மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்கின்ற உண்மையை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. தங்கம் தென்னரசு:** இல்லை, இல்லை. W.T.O.-வினுடைய நிர்ப்பந்தத்திற்கு அடிபணிய வேண்டிய அவசியம் இதிலே மத்திய அரசுக்கு இல்லை. நம்முடைய தொழில் துறை அமைச்சர் மிகத் தெளிவாக அதில் சொல்லியிருக்கிறார்கள். G.A.T.T. என்பதில் உறுப்பினராக 1947-லிருந்து இந்தியா இருந்து கொண்டுதான் இருக்கிறது. W.T.O.-விலே நாங்கள் இன்றைக்கு அங்கம் வகிக்கிற ஒரே காரணத்திற்காக, Imports அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. Imports என்பதைப் பொறுத்தமட்டிலே உங்களுடைய தொழில் அழிந்து போகாத வகையிலே counterveiling duty-ஐ நாங்கள் அங்கே உயர்த்திக் கொடுக்க முடியும். இன்னும் Quantitative restrictions-ஐ நாம் கொண்டு வர முடியும். இன்னும்கூடச் சொல்ல வேண்டுமென்றால், அதிலே பல்வேறு விதமான

anti-dumping proceedings நம்முடைய மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அவற்றின் மூலமாக, அவற்றைக் காப்பாற்றக்கூடிய ஒரு நல்ல நிலையை நாம் உருவாக்குவோம் என்பதை, மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதை நான் நம்முடைய அண்ணன் சுப்பராயன் அவர்களுக்கு இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தமட்டிலேகூட, நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணன் அழகிரி அவர்கள் பேசுகிறபோது இங்கே ஒன்றைச் சொன்னார்கள். தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தமட்டிலே இன்றைக்கு உலகத்திலே மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வோம் என்றால், நேற்றையதினம் பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள் ஓர் அழகான இளம் பெண் உங்களைப் பார்த்து I love you என்று சொன்னார் என்றால், நீங்கள் உள்ளம் பூரித்துப் போகக்கூடிய ஒரு நிலைமை மாறி, இன்றைக்கு I love you என்று சொன்னாலே உலகத்திலே இருக்கக்கூடிய வர்த்தகம் பல நூறுகோடி ரூபாய் அளவிற்கு அழிந்து போகக் கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. love letter வருகிறது என்று சொன்னால், அதிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையும் ஒரு பெண்தான் செய்திருக்கிறார் என்று சந்தேகிக்கப்படுகிறது. (சிரிப்பு)

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனாலேதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். (சிரிப்பு) இனிமேல் யாராவது அப்படிச் சொன்னார்கள் என்றால், நாம் மிகுந்த ஜாக்கிரதை உணர்வோடு இருக்க வேண்டும். love letter-ஐத் திறந்து பார்த்தாலே attachment file போய்விடும் என்ற அளவுக்குத் தகவல் தொழில்நுட்பம் இன்றைக்குப் பல விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய அண்ணன் அழகிரி அவர்கள் சொல்கின்றபோது தமிழகத்திலே இருக்கக்கூடிய தகவல் தொழில்நுட்பம் அந்த அளவிற்கு உயரவில்லை என்றுகூடச் சொன்னார்கள்.

*பிற்பகல் 12-10*

இன்றைக்கு நம்முடைய அவையிலே வைத்திருக்கக்கூடிய Information Technology in Tamil Nadu என்ற இதழிலே ஒன்றை மட்டும் கொடுத்திருக்கிறார்கள். நான் காலத்தின் அருமை கருதி அதைப் படிக்க விரும்பவில்லை.



ஒன்றை மாத்திரம் சொல்லிவிட்டு முடிக்க விரும்புகின்றேன். 'A recent NASSCOMM study rated Tamil Nadu, the best location for setting up a software industry. On a scale of 0 to 3.5, it rated Tamil Nadu very high among a set of indicators" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் அண்ணன் அழகிரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய தொகுதி குறித்து, ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். அருப்புக்கோட்டை தொகுதி மிக மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு தொகுதி. [illegible] மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் நம்முடைய அரசாங்கம்தான் நிறையத் திட்டங்களை அங்கே கொண்டு வந்திருக்கின்றது.

என்னுடைய தொகுதியிலே ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை அமைத்துக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையை முழுவதுமாக நவீனப்படுத்தி, அங்கே அந்தத் தொழில் மிகச் சிறப்பாக நடக்கக்கூடிய அளவில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தாங்கள் கொடுத்திருக்கக்கூடிய இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் இந்தத் தொழில் மானியக் கோரிக்கையில் நான்காவது முறையாகத் தற்போது பேசிக் கொண்டிருக்கின்றேன். ஒவ்வொரு முறையும் நான் பேசும்போது இராசிபுரம் இராசியில்லாத புரமாக இருக்கின்றது. அந்த இராசியில்லாத புரத்திற்கு ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்று நான்கு முறையும் பேசியிருக்கின்றேன். ஒவ்வொரு முறையும் பேசும்போது முதல்வர் அவர்கள் தற்போது கூறியபடி 'பரிசீலிக்கப்படும்' என்று சொல்லவில்லை. "உறுதியாக அங்கே ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்" என்று இரண்டு, மூன்று முறை கூறியிருக்கின்றார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தொகுதி என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, முதல்வர் அவர்கள் கூறியபடி எந்தத் தொழிற்சாலையும் அங்கே ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. அதற்காக நான் ஒரு பெரிய உண்ணாவிரதப் போராட்டம்கூட நடத்தினேன். முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் தெரிவித்தேன்.

"231 தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள்" என்று கூறுவார் முதல்வர். ஆனால் "சொன்னதைச் செய்வோம்" என்ற இந்த அரசு, சொன்னதையும் செய்யவில்லை, செய்வதையும் சொல்வதில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் ஏற்கெனவே ஒவ்வொரு முறையும் கூறியிருக்கின்றேன், பாண்டவர்கள், கௌரவர்கள் பொறுத்தவரையிலான அந்த இதிகாசத்தை எல்லாம் எடுத்துக் கூறி அவர்கள் "ஐந்து சிற்றூர்கள் வேண்டும்" என்று கேட்டு, அதுவும் கொடுக்கப்படாமல், ஐந்து வீடுகள் கேட்டு, அதுவும் கொடுக்கப்படாமல், 5 அடி நிலம் கேட்டு, அதுவும் கொடுக்கப்படாமல், "குத்தூசி குத்துவதற்குக் கூட அவர்களுக்கு இடம் கொடுக்க முடியாது" என்று கூறிவிட்டார்கள் என்பது போன்ற நிலையில், எதிர்க்கட்சி என்ற அந்த ஒரே காரணத்திற்காக ஒவ்வொரு முறையும் நான் கேட்டு, இந்த அரசு ஒரு பெரிய தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்காததை நான் கண்டிக்கின்றேன். நீங்கள் இப்போது கொடுக்கவில்லை என்றாலும், அடுத்த ஆண்டு எங்களது ஆட்சி வந்ததற்குப் பிறகு, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள், இராசிபுரத்திலே ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுப்பார்கள் என்று இந்த மாமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழிற்துறையில் பெரிய சாதனைகள் புரிந்துள்ளதாகப் புள்ளிவிவரங்களை அடுக்கிக்கொண்டிருக்கிறீர்கள். எங்கள் ஆட்சியின்போது அன்றைய முதல்வர் எங்கள் புரட்சித் தலைவி அவர்களால், திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தப்பட்ட பல திட்டங்களைத்தான் இன்றைக்கு உங்களுடைய ஆட்சியிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். முன்பு, மத்திய அமைச்சரவையிலே இருந்த உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், தற்போது தொழிற்துறையிலே அமைச்சராக இருக்கின்ற உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருக்கும்பொழுது, அறிவிப்பை அறிவித்திருக்கிறீர்கள். இந்த நான்கு ஆண்டுகளிலே மத்திய அரசிலே புதிய திட்டத்தைப் பற்றி, எந்தத் தொழிற்சாலையை நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Ford, Hyundai, Mitsuibushi ஆகிய மூன்று பெரிய கார் தொழிற்சாலைகள். இவை அனைத்தும் நீங்கள் கொண்டு வந்ததாகக் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். Ford company-ஐப் பொறுத்தவரையில், எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். Hyundai company-ஐப் பொறுத்தவரையில், எங்கள் ஆட்சிக் காலத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. Mitsuibushi company-ஐப்

223319



பொறுத்தவரையில், அதனுடைய M.D. அவர்கள் எங்களுடைய புரட்சித் தலைவியோடு பேச்சுவார்த்தை நடத்தி, தொழில் தொடங்குவதற்கான அனுமதி பெற்றார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Hyundai Car Company-க்கு விதிமுறைகள் மீறிய அளவில் சலுகைகளைக் கொடுத்து, சிறப்புச் சலுகையாக இருமுனை பவர் சப்ளை, நிலத்திற்கான வரிச் சலுகை, கொள்முதலுக்கான வரி விலக்கு, விற்பனை வரிச் சலுகை என்று ஏகத்திற்கு வரிச் சலுகைகளைக் கொடுப்பதன் உள்நோக்கம் என்னவென்று அறிய விரும்புகிறேன். Hyundai தொழில் நிறுவனத்துடன் நமது தொழில் துறை, இப்போது நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு செய்துகொண்ட ஒப்பந்தத்தை நீங்கள் அவையிலே காட்டினால் நாங்கள் விவாதிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். அந்த ஒப்பந்தத்திலே, இங்கே இருப்பவர்களெல்லாம் பங்குதாரர்களாக ஆக வேண்டுமென்ற காரணத்திற்காகப் பல நடைமுறைகளெல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன. உங்களுக்குச் சந்தேகம் இல்லை என்றால், உங்களுக்குத் தைரியம் இருந்தால் அந்த Hyundai company-ல் நீங்கள் போட்ட ஒப்பந்தத்தை இந்த அவையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-15*

இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆட்சியினுடைய அணுகுமுறை சரியில்லாத காரணத்தினால், உங்களது கவனக் குறைவால் Toyota என்ற கம்பெனியானது இங்கே ஆரம்பிக்கப்படாமல் டில்லிக்குச் சென்றுவிட்டது. அதேபோல Volga என்ற Drug தயாரிக்கின்ற தொழிற்சாலையும் இங்கே வராமல் மைசூருக்குச் சென்றுவிட்டது. அதேபோல, இன்று உலகத்திலேயே பெரிய பணக்காரர் எனறு சொல்லப்படுகின்ற பில் கேட்ஸ் அவர்களுடைய Microsoftware Development Company உங்களுடைய உற்ற நண்பர் ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களின் முயற்சியினால் ஹைதராபாத்திற்குச் சென்றுவிட்டது. Toyota Company, Volga Company, Microsoftware Development Company இந்த 3 கம்பெனிகளுமே உங்களுடைய கவனக் குறைவால் உங்களின் சரியான அணுகுமுறை இல்லாத காரணத்தினால் வெளி மாநிலத்திற்குச் சென்றுவிட்டன என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு மத்தியிலிருந்துதான் இங்கே தொழிற்சாலை வரவில்லை. "நான் சிங்கப்பூருக்குச் செல்கின்றேன். சிங்கப்பூரில் தொழிலதிபர்களைச்

சந்திப்பேன். அவர்களை நான் சந்தித்து, அங்கேயுள்ள தொழில் முனைவர்களையெல்லாம் அழைத்துப் பேசுவேன். அப்போது இங்கே பெரிய தொழிற்சாலை அமைப்பதற்கு முனைவேன்" என்று சென்றார். அப்போது நாங்கள் "நீங்கள் சிங்கப்பூர் செல்வது உங்களுடைய தனிப்பட்ட பயணமாக இருக்கும்" என்று கூடக் கூறினோம். "இல்லை, இல்லை" என்று மறுத்தார். தற்போது சிங்கப்பூரினுடைய பிரதமர் இங்கே வந்திருக்கின்றார். வந்தார், பார்த்தார், சென்றார். அவர் வந்ததற்குப் பிறகு இங்கே தமிழ்நாட்டிலே என்னென்ன ஒப்பந்தத்தைப் போட்டீர்கள்? நீங்கள் சென்றது தனிப்பட்ட முறையில் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது; அப்பட்டமாக ஆகிவிட்டது. முடிந்தால் நீங்கள் கூறுங்கள். சிங்கப்பூர் பிரதமர் இங்கே வந்து, நீங்கள் என்னென்ன தொழிற்சாலைகள் அமைப்பதற்குத் திட்டம் போட்டீர்கள் என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கிரானைட் சம்பந்தமாக, இந்த அரசு போட்ட வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால் அதிகமாகச் சொல்ல (மணியடிக்கப்பெற்றது) நான் விரும்பவில்லை. ஆனால், 1989-90ஆம் ஆண்டில்தான் கிரானைட் எடுக்கின்ற தொழிலுக்கு இந்த அரசு முட்டுக்கட்டை போட்டது. முதல்வருடைய மருமகன் திரு. அதிபன் போஸ் அவர்களுக்குச் சம்பந்தமான Bose Consortium of Industries என்ற அந்த நிறுவனத்திற்காக, தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்காக கிரானைட் கற்களைக் கொள்முதல் செய்யவும், மற்ற குத்தகைதாரர்களிடமிருந்து வெட்டியவற்றை வாங்குவதற்கும் மொத்த அனுமதி கொடுத்ததுதான் இந்த அரசு என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 5 நிமிடங்கள் தானே ஆகியிருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: எவ்வளவு நேரம் ஆயிற்று என்பது எனக்குத்தான் தெரியும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1989-90 ஆம் ஆண்டிலே, அப்போது அந்தக் கனிம நிறுவனத்தின் மூலமாக நீங்கள் அதிபன் போசுக்கு எவ்வளவு நிலம் குத்தகைக்குக் கொடுத்தீர்கள் என்பதைப் பட்டியல் போட்டு, முடிந்தால் அதை நீங்கள் இங்கே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான தகவல்களைச் சொல்லி, புழுதி வாரி இறைக்க அ.தி.மு.க.வினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் முயற்சி மேற்கொள்கிறார்கள். நான் அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன்;



இந்த அவைக்கும் ஞாபகப்படுத்துகிறேன். அதிபன் போசுக்கு இப்படிக் குத்தகை கொடுத்ததாக ஏற்கெனவே ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு குற்றச்சாட்டை வைத்து அதை விசாரிக்குமாறு சிவசுப்பிரமணியம் கமிஷனை நியமித்தார். அந்தக் கமிஷனிலே இந்தக் குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு வந்ததையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 5 நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை. முக்கியமான விஷயம். இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். அதிக நேரம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் எப்படி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதே மாதிரிதான் உங்களுக்கும் நேரம் ஒதுக்கியிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரியலூரில் இயங்கி வருகின்ற தமிழக அரசுக்குச் சொந்தமான அரசு சிமெண்ட் ஆலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கல்லை எடுப்பதற்கு 1500 ஹெக்டேர் நிலத்தை தமிழக அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. சட்டப்படி அரசு சிமெண்ட் ஆலைக்குப் பக்கத்தில் 20 கிலோமீட்டர் தூரத்திற்குள் வேறு யாருக்கும் சுரங்கம் தோண்டுவதற்கு உரிமை வழங்கக் கூடாது என்று இருக்கின்றது. 11-1-1989 அன்று அன்றைய முதல்வர், இன்றைய முதல்வர், அழகப்பா சிமெண்ட் என்ற மிகச் சிறிய

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 மே 8

சிமெண்ட் ஆலைக்கு 200 ஏக்கர் நிலத்தை 20 ஆண்டுகளுக்குச் சுரங்கம் தோண்டுவதற்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கின்றார். 11-1-1989 முன்பு, அதை எதற்கு... (மணியடிக்கப்பெற்றது) இல்லை, முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-1-1989 அன்று எந்த ஆட்சி நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேதி மாறியிருக்கலாம். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே...(குறுக்கீடு) தேதி மாறியிருக்கலாம். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 200 ஏக்கர் நிலத்தை நீங்கள் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த 200 ஏக்கர் நிலத்தில், அழகப்பா ஆலை இயங்கவேயில்லை. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு பெரிய ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது, தேதி மாறியிருக்கலாம் என்று சாதாரணமாகச் சொல்லக் கூடாது...(குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த ஆட்சிக் காலத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** correct-ஆகச் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். இல்லையென்றால், உரையை முடித்துவிட்டு அடுத்த உறுப்பினருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முடித்துக்கொள்கிறேன். அந்த 200 ஏக்கர் நிலத்தில், ஒரு பகுதியை, சுமார் 100 ஏக்கரை இப்போது 1998 ஆம் ஆண்டு ஒரு கம்பெனிக்கு, அழகப்பா சிமெண்ட் நிறுவனம் விற்றிருக்கிறது. இப்போது விற்றிருக்கிற அந்த நிலத்தினுடைய மதிப்பு மட்டும் கிட்டத்தட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய். நீங்கள் ஏற்கெனவே கொடுத்ததை இப்போது மாற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். இப்படி... ...(குறுக்கீடு)



2000 மே 8]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை வேண்டுமானாலும் பேசலாம் என்பது, இந்த அவைக்குப் பொருத்தமாக இருக்காது. 100 ஏக்கர் நிலத்தை, 2000 கோடி ரூபாய்க்கு யார் வாங்குவார்கள்? மாண்புமிகு உறுப்பினர் அதையெல்லாம் விவரமாகச் சொன்னால் நல்லது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதனுடைய மதிப்பு இன்றைக்கு.... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுண்ணாம்புக் கல்லை அடிப்படையாக வைத்து சிமெண்ட் தயாரிக்கிற எல்லா ஆலைகளும் ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு இலட்சம் அல்லது 2 இலட்சம் ரூபாய்க்குத்தான் அதிகமான விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள், அவர்களுடைய ஆட்சியில் நடைபெற்ற ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழலைப் போலவே இப்போது பேசுவதும் முறையல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு இலட்சம் ரூபாய்தான். இன்றைக்கு அதனுடைய மதிப்பு ஒரு ஏக்கர் 20 இலட்சம் ரூபாய். 20 இலட்சம் ரூபாய்; அதைத்தான் சொல்கிறேன் நான்.

இறுதியாக, மணல் திருட்டைப்பற்றி இங்கே கூறினார்கள். மணலைத் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். திருட்டுத்தனமாக மணல் எடுத்து வருகிறவர்களைத் தடுத்துப் பிடிக்க முயன்ற திருவள்ளூர் மாவட்ட பெண் கலெக்டர் அவர்களை மாற்றியது இந்த ஆட்சிதான். அதைப்போலவே, திருவள்ளூர் தாசில்தார் அவர்களும், மணல் எடுத்ததைத் தடுத்ததன் காரணமாக தாக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, மணல் எடுக்கும் விதத்திலே இந்த ஆட்சி கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய தொகுதியிலே... (மணியடிக்கப்பெற்றது) கோழி பதப்படுத்தும் தொழிற்சாலை, முட்டை பவுடர் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான தொழில் மற்றும் தொழில் குறித்த மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கையிலே பேச

வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசிலவற்றை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நேரத்திலேயும், அதைப்போலவே இப்போது தொழில்களுக்கான கொள்கை விளக்கக் குறிப்பும் கொடுக்கப்பட்டிருப்பதையெல்லாம் பார்க்கின்ற நேரத்திலேயும், அவற்றைப் படித்துப் பார்த்து நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், நம்முடைய நாடு விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய நாடு. படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, குறிப்பாக, தென் மாவட்டங்களில் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பல்வேறு சம்பவங்கள் நடந்த நிலைமையை எல்லாம் உணர்ந்து, நடப்பாண்டிலே, தமிழ்நாட்டிலே தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு, அக்கறையோடும், ஆர்வத்தோடும், முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியைப் பார்த்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மிகவும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மிகப் பெரிய இந்த மோட்டார் உற்பத்தி தொழிற்சாலைகளான ஹூண்டாய், மிட்சுபிஷி, ஃபோர்டு இந்தியா நிறுவனங்கள் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலத்திலே தொடங்கப்பட்டு, உற்பத்தி தொடங்க இருப்பது பாராட்டுக்குரியது என்பதை மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களிலே நடந்த கலவரத்தை, மனதிலே வைத்து, மக்கள் அமைதியாக வாழ்வதற்கும், அதைப்போலவே, தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வெளிநாட்டு மூலதனத்தினாலே அந்நியச் செலாவணிகளைப் பெருக்குவதற்கும் நல்ல வாய்ப்பு ஏற்படக்கூடிய விதத்திலே, நாங்குநேரியிலே உயர் தொழில்நுட்பத் தொழில் பூங்கா High Tech Industrial Park என்ற அளவிலே, இரண்டாயிரம் ஏக்கரைக் கையகப்படுத்தித் தொழிலைத் தொடங்க இருப்பது வரவேற்கக்கூடியது.

அதைப்போலவே, ஏற்றுமதி வளர்ச்சி மையம் என்ற அளவிலே, Export Promotion Zone உருவாக்க மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, கடலூரிலே தொழில் பூங்கா — Industrial Park 950



ஏக்கரிலேயும், சென்னைக்கு அருகிலே ஆடை தயாரிக்கும் பூங்கா என்று சொல்லக்கூடிய Garment Park 200 ஏக்கரிலேயும், ஓசூரிலே மலர்ப் பூங்கா Floriculture Park 200 ஏக்கரிலேயும், வருவது பாராட்டுக்குரியது. அதைப்போலத் தகவல் தொழில் நுட்பத் துறைகளுக்கு — Information Technology — அதிக முதலீடு செய்ய வேண்டுமென்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வற்புறுத்தலை ஏற்று, மத்திய அரசு கடந்த ஆண்டு 1377 கோடியாக இருந்ததை நடப்பாண்டிலே 2079 கோடியாக உயர்த்தியிருக்கிறது. ஆகவே, இப்படிப் பெரிதும் முயற்சி எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அதை வழங்கிய மத்திய அரசுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதைப்போலவே, சென்னைக்கு அருகிலே எண்ணூரிலே 6000 கோடி ரூபாய் அளவிலே பெட்ரோ கெமிக்கல்ஸ் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க திட்டப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றன. உயிரியல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான ஆக்கப்பூர்வமான காரியங்கள் நடப்பாண்டிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய தமிழ்நாட்டிலே தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே தொழில் பெருகுவதற்கு அடிப்படைக் கட்டுமானங்கள் என்று சொல்லக்கூடிய infrastructure அவசியம் தேவைப்படுகிறது. infrastructure என்று சொல்லக்கூடிய சாலை வசதி, நீராதாரத்தைப் பெருக்குவது, அகல இரயில் பாதை வசதி, மின் உற்பத்தி போன்ற வசதிகளை எல்லாம் செய்வதில் நாம் அதிக கவனம் செலுத்தி விரிவுபடுத்த வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே இப்போது மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, ஒகேனக்கல் நீர்மின் உற்பத்தித் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லி நான் பலமுறை வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். இதில் கர்நாடக அரசோடு பிரச்சினை இருக்கிறது என்று சொன்னாலும்கூட மத்திய அரசு நமக்கு உகந்ததாக இருக்கிறது. அதைப்போலவே கர்நாடகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர், அமைச்சரிடத்திலும் நான் பலமுறை பேசியிருக்கிறேன். அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மத்திய மின் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் பலமுறை பேசிய காரணத்தாலே நம்முடைய

முதலமைச்சர் அவர்கள் பெரிதும் மனது வைப்பார்களேயானால் இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேறும் என்று சொல்லி அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். இன்னும் நிறைய இருக்கிறது. அந்த வகையிலே இதைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கல் தொழில் சாதாரண குடிசைத் தொழிலைப்போல சாதாரண மக்கள் செய்யக்கூடிய தொழில். எனவே அதற்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய வரியைக் குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் இப்போது அதிக அளவிற்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நஷ்டத்திற்குக் காரணம் அதிகாரிகளுடைய கவனக் குறைவு என்பதை இந்த நேரத்திலே நான் பெரிதும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதையெல்லாம் சீர்செய்ய வேண்டும். அதிகாரிகள் உதிரி பாகங்கள் வாங்குவது, சரக்கு விற்பனை போன்றவற்றில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். அதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, தனியார் சர்க்கரை ஆலைகள் எல்லாம் இப்போது நமது அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய லெவியைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே விவசாயிகளுக்கு மிகவும் பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். முறைகேடுகள் எல்லாம் செய்யப்படக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய அரசாங்கத்திற்கு அதிக வருமானத்தைக் கொடுக்கக்கூடிய தொழில் அந்நியச் செலாவணியைப் பெருக்கக்கூடிய தொழில் கிரானைட் தொழில். அதைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. காடுகளிலே நிறைய கிரானைட் கற்கள் இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பெருக்குவதற்கு இப்போதிருக்கக்கூடிய தொழில் நடைமுறையைத் தாராளப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓசூரில் உள்ள எல்காட் நிறுவனம். அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் சீர்



செய்ய வேண்டும். ஓசூரிலே நிறையத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே தொழிலாளர் பாதிப்பு நிலையை உணர்ந்து அதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, Mettur Spinning Mills, Mettur Textile Mills ஆகியவை எல்லாம் பாதிக்கப்பட்டு நீண்ட காலம் ஆகிறது. புதிய ஆலைகளைத் தொடங்கக்கூடிய அதே நேரத்திலே, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு வழங்கக்கூடிய வகையிலே மூடப்பட்ட ஆலைகளை எல்லாம் திறப்பதற்கும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப்பற்றிச் சொல்கிறேன்; வறட்சியான தொகுதி; சிறு விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதி; இந்த மன்றத்திலே பலமுறை நான் வலியுறுத்திப் பேசியிருக்கிறேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கர்நாடகத்திற்குச் சென்று அங்கே கூலித் தொழில் செய்து வாழக்கூடிய அந்தப் பகுதியினுடைய அவல நிலையைப் போக்குவதற்கு பெண்ணாகரத்திலே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தமாதிரி நடப்பாண்டிலே ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கித் தர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறை குறித்து, இதனுடைய வளர்ச்சி குறித்து, தொடர்புடைய பல்வேறு துறைகளுடைய வளர்ச்சியைக் குறித்தெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். நான் அதிலேயெல்லாம் என்னுடைய கவனத்தைச் செலுத்தாமல், நேரத்தின் அருமை கருதி, எங்களுடைய பகுதியைப் பற்றி மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதுகின்றேன்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 மே 8

*பிற்பகல் 12-30*

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தினுடைய கிழக்குப் பகுதியில்தான் எல்லா முக்கியமான தொழிற்சாலைகளும் சாதாரணமாக இடம் பெற்றிருக்கின்றன. மேற்குப் பகுதியில் அந்த வளர்ச்சி இல்லை. இராணிப்பேட்டையில் தொழிற்பேட்டை அமைத்து நீண்ட நாள் ஆகிவிட்டது. இப்போது ஒரு Saturation Point என்ற அளவிற்கு அந்தத் தொழிற்பேட்டை மேற்கொண்டு வளர்ச்சி அடையாத ஒரு சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இராணிப்பேட்டையில் எப்படி நீங்கள் தொழிற்பேட்டையை அமைத்தீர்களோ அதைப்போலவே ஒரு தொழிற்பேட்டையை வட ஆற்காடு மாவட்டத்தினுடைய மேற்குப் பகுதியில் அமைத்திட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். எனவே, தயவுசெய்து அதிலே கவனம் செலுத்தி, எங்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை நீங்கள் தீர்த்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது வாணியம்பாடி பகுதியாக இருந்தாலும் அல்லது திருப்பத்தூர் பகுதியாக இருந்தாலும் அதை மேற்குப் பகுதியில் அமைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்களுக்கு ஜீவாதாரமாக இருப்பது எங்களுடைய தோல் தொழிற்சாலைகள். ஆனால், தோல் தொழிற்சாலைகள் அண்மைக் காலத்தில் நசிந்து வருகின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மிக நன்றாக அறிவார்கள். அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. எனவே, ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கிற பல சிக்கல்களைப் போக்கிடும் வகையில் சில முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, நாம் ஏற்றுமதி செய்கிற தோலைப் பற்றி வெளிநாடுகளில் பல தவறான அபிப்பிராயங்கள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகின்றன. நம்முடைய தோல் பதனிடும் முறையே சரியில்லை; அதிலே பல ஊனங்கள் இருக்கின்றன. ஆகவே, அவை தேவையான அளவிற்குப் பயன் தரக்கூடியதல்ல என்று வெளிநாடுகளிலே நமக்குப் போட்டியாக இருக்கக்கூடிய நாடுகளின் வாயிலாக அது செய்யப்படுகிறது. எனவே, இந்தத் துறையினர் முக்கியமாகக் கவனத்தைச் செலுத்தி அத்தகைய வதந்திகளை நாம் தடுத்திடும் வகையில் வெளிநாடுகளிலே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2000 மே 8] [திரு. ம. அப்துல் லத்தீப்]

சென்னையிலேயிருந்து வாணியம்பாடி போகின்ற வழியிலே, நான் ஏறக்குறைய 40, 45 ஆண்டுகளாகப் போய் வந்துகொண்டிருக்கிறேன், ஆனால், இப்போது போய்ப் பார்க்கும்போது இரு பக்கமும் நிறையத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. வேலூர் வரையிலும் ஓரளவிற்கு இந்தத் தொழிற்சாலைகள் காணக்கிடக்கின்றன. ஆனால் வேலூருக்குப் பிறகு, ஆங்காங்கே இருக்கக்கூடிய தோல் தொழிற்சாலைகளைத் தவிர்த்து, அரசு சார்பான அல்லது அரசு சார்பற்ற தொழிற்சாலைகள் இல்லை என்பது ஒரு குறையாகவே இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் குறையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

தற்போது வேலூரிலே TIIC-னுடைய Regional Office ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. அந்த Regional Office-ஐ சென்னைக்கு மாற்ற வேண்டும் என்ற ஓர் எண்ணம் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். நான் மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். தயவுசெய்து அதைச் சென்னைக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. சென்னையிலே ஏற்கெனவே இத்தகைய அலுவலகங்கள் நிறைய இருந்து கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) எனவே, வேலூரிலே இருப்பதை மாற்றக் கூடாது என்று நான் இங்கே வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, Export Promotion Council இருந்துகொண்டிருக்கிறது. தோலுக்குக்கூட ஒரு Export Promotion Council இருக்கிறது. ஆனால், மாநிலம் முழுவதற்கும் உரிய ஒருங்கிணைந்த ஒரு Export Promotion Council இருக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த உற்பத்திச் செலவு — Comparative Cost of Production — குறித்து நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், இதிலே நாம் கவனம் செலுத்தாவிட்டால் வெளிநாடுகளில் எல்லாம் நம்முடைய ஏற்றுமதிக்கு மிகப்பெரிய சிக்கல்கள் ஏற்படும். எனவே, Comparative Cost என்று பார்க்கும்போது இந்த உற்பத்திச் செலவை, எந்த அளவுக்கு நாம் நவீன முறையிலே, குறைக்க முடியுமோ அப்படிக் குறைத்து இங்கே உற்பத்தியாகின்ற நம்முடைய பொருட்களை, வெளிநாடுகளிலே மற்றவர்களோடு போட்டி இருக்கும்போதே அங்கே விற்பனை செய்வதற்கு எந்தெந்த வகையிலே நாம் சௌகர்யங்களை

ஏற்படுத்திக்கொள்ள முடியும் அல்லது இந்தத் தடைகளை நீக்கமுடியும் என்பதைக் குறித்தும் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

பொதுவாக எங்களுடைய பகுதியிலே உற்பத்தியாவது தோலும், சந்தனமும்தான். சந்தனத்தைப்பற்றி நம்முடைய முதல்வர் அவர்களும், ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்து விட்டார்கள். எனவே அதைத் துரிதப்படுத்தி இந்த ஆண்டே அதை நாம் தொடங்குவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் நீண்டநாட்களாகச் சொல்லிக்கொண்டிருப்பது; அவர்களுக்கே தெரியும்; நம்முடைய திருவண்ணாமலை பகுதியிலே இரும்பை அடிப்படையாகக் கொண்டு ஓர் இரும்புத் தொழிற்சாலை. அது எந்த வகையிலே என்பதை அவர்கள் முடிவு செய்யட்டும். நிறைய இரும்பு திருவண்ணாமலையில் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். எனவே அதனை அடிப்படையாகக் கொண்டு ஏற்கெனவே, அவர்களே சொல்லியிருக்கிற அந்த இரும்புத் தொழிற்சாலையைத் திருவண்ணாமலை பகுதியில் ஏற்படுத்தவேண்டுமென்று நான் (மணியடிக்கப்பெற்றது) கேட்டுக்கொண்டு, நேரம் இல்லாத காரணத்தினால் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவைக்குள் வந்தார்கள்.)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் பேசி முடிக்கும் நேரம் முதலமைச்சர் அவர்கள் வருகிறார்கள். இவ்வளவு நேரம் வெளியில் போய்விட்டார்கள். எனக்குத் தெரியும். நான் பேசினால் அவர்கள் அவையில் இருப்பதில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் முருகனுக்கும், என்னுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். சிறு தொழில்களுடைய பிரதிநிதியாகப் பேசுவதற்கு



நிறையச் செய்திகள் இருந்தாலும், அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒருசில கருத்துகளை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்லி உரையை நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு ''ஹூண்டாய், ஃபோர்டு போன்ற கார் தொழிற்சாலைகள் இங்கே கொண்டு வந்தோம்'' என்று சொல்லி அரசு பெருமைப்பட்டுக்கொள்கிறது. வரவேற்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல, நீங்கள் காட்டுகின்ற அந்த வெளிச்சத்தை, அந்த வெளிச்சத்தின் பின்னால் இருக்கின்ற, ஏற்கெனவே இருந்த நம்முடைய பஞ்சாலைத் தொழில் இன்றைக்கு நசிந்து போயிருக்கிறது; பஞ்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்க்கவேண்டும். அதுவும் எங்களுடைய மாவட்டத்திலே கிட்டத்தட்ட 82 பஞ்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்ற சூழ்நிலைகளை எல்லாம் பார்க்கிறோம். ஆகவே அதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அந்தப் பஞ்சாலைகள் மீண்டும் இயங்குவதற்கு, வேலை இழந்த தொழிலாளர்கள் மீண்டும் மகிழ்ச்சியோடு தொழிலில் முனைவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். அதற்குரிய நிவாரணங்கள் வழங்க வேண்டும். நாங்கள் கூப்பிட்டுப் பேசிய ஏராளமான கூட்டங்களில் கூட அந்தப் பஞ்சாலை அதிபர்கள் சொல்லியிருக்கிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து நாம் வாங்குகின்ற பஞ்சுக்கு 4 சதவீதம் பொது விற்பனை வரி (C.S.T.) கொடுத்து இங்கே கொண்டு வருகிறோம். ஆனால் மீண்டும் இங்கே அதற்கு 2 சதவீதம் வரி கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது நீக்கப்படவேண்டுமென்று அந்தப் பஞ்சாலை அதிபர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மின்சாரத்தை அதிகமாக உபயோகிக்கும்போது அதற்கு அதிகமாகக் கட்டணம் போடுகின்றீர்கள். அந்தக் கட்டணத்தைக் குறைத்து விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். அதேநேரத்தில் சிட்டா நூலுக்கு எங்கேயும் வரி கிடையாது. ஆனால் நம்முடைய மாநிலத்திலேதான் சிட்டா நூலுக்கு வரி போடுகிறோம். ஆகவே அந்த சிட்டா நூலுக்கு உள்ள வரியை முழுவதுமாக நீக்கவேண்டும். மற்ற மாநிலங்களைப் போல இல்லாமல் அந்த Cone நூலுக்கு 4 சதவீத வரியை இப்போது நாம் போடுகிறோம், அதை இரண்டு சதவீதமாக மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சு உற்பத்தியில் நாம் பின்தங்கியிருக்கிறோம். மீண்டும் பழையபடி பஞ்சு உற்பத்தி இங்கே சரியாக வர வேண்டுமானால், அதற்குரிய ஊக்கமான நடவடிக்கைகளை நாம் ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சைப் பற்றிப் பேசும்போது, கழிவுப் பஞ்சுக்கு, குப்பைப் பஞ்சுக்கு இப்போது நாம் இங்கே வரி விதிக்கிறோம். இங்கே 8 சதவீதம் வரி போடுகிறோம். மற்ற மாநிலங்களில் 4 சதவீதம்தான். ஆகவே அந்த கொட்டுப் பருத்தி என்று சொல்கிற அந்த குப்பைப் பருத்திக்கு மற்ற மாநிலங்களைப் போல 4 சதவீத வரி மட்டும் போடவேண்டுமென்று சொல்லி நான் கேட்டுக்கொள்வேன்.

*பிற்பகல் 12-40*

அதைப்போல விற்பனை வரிப் படிவங்கள் நிறைய இருப்பதன் காரணமாக சிரமமாக இருக்கின்றது. வணிகர்கள் மத்தியிலே பேசி அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

சிறுதொழில் வளர்ச்சிக்கு நம்முடைய அரசு முக்கியமான மூன்று கேந்திரங்களை வைத்துக் கொண்டிருக்கிறது. சிட்கோ இருக்கிறது, அதேபோல T.I.I.C. இருக்கிறது. D.I.C. இருக்கிறது. சிட்கோவைப் பொறுத்தவரையிலே இங்கே பெருமையாகச் சொன்னார்கள். "ஏராளமான கட்டடங்களைக் கட்டி இருக்கிறோம்" என்று. நிச்சயமாக எங்களுக்குத் தெரியும், நான் பாராட்டுகிறேன். ஆனால் அங்கே கட்டியிருக்கின்ற கட்டடங்களில் எத்தனை மூடுவிழா செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை நாம் இங்கே பார்க்க வேண்டும். சிட்கோவிலே இப்போது, அந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டிலே, நிறையக் கட்டடங்கள், தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. பல கட்டடங்கள், அந்த சிட்கோவிலே இருக்கின்ற கட்டடங்கள் இப்போது தொழில் தொடங்காமல் இருக்கின்றன. ஆகவே, நாங்கள் தங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், காலியாக இருக்கின்ற அந்தக் கட்டடங்களை, அங்கே இருக்கின்ற அதிகாரிகளோடு பேசி, அதை வாடகைக்கு விட ஏற்பாடு செய்ய வேண்டும். நிறைய வாடகைப் பணம் வரட்டும் என்று சொல்லி இப்போது காத்துக் கொண்டிருந்தால் கட்டப்பட்ட அந்தக் கட்டடங்கள் பாழடைந்த சூழ்நிலைக்குப் போய்விடும். ஆகவே அந்தக்



கட்டடங்களையெல்லாம் நியாயமான வாடகைக்கு விட்டால் தொழில் அதிபர்கள் தொழில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவு. முதலிலே என்ன விலைக்கு வாங்கினோமோ அந்த விலைக்கே பத்திரப் பதிவு செய்ய வேண்டும். தொழில் அதிபர்கள் எல்லாம் "புதிதாக இப்போது இருக்கின்ற மார்க்கெட் ரேட்டிலே, பத்திரப் பதிவு செய்ய வேண்டும்" என்று சொல்கிறார்கள். ஆகவே, அதை நீக்கி, என்ன விலைக்கு நாங்கள் வாங்கினோமோ, அந்த அளவிற்கே அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

அதைப்போல, TIIC-ஐப் பொறுத்தவரையிலே கடந்த காலத்திலே 500 கோடி ரூபாய்க்கு மேலாக வியாபாரம் செய்தார்கள். ஆனால் இப்போது நிலை என்ன? நட்டத்திலே ஓடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். என்ன காரணம்? அதற்கு, வங்கிகளைக் காட்டிலும் அதிகமான வட்டியை TIIC வசூலிக்கிறது. வங்கிகளிலே கடன் வாங்கினால், சிறு தொழிலுக்கு 16 சதவிகிதம். ஆனால் TIIC-லே வாங்கினால் 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் வரை, இப்போது வங்கி வட்டியைவிட அதிகமாக வசூலிக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து, அந்த வட்டி விகிதத்தை வங்கிகளைப்போலக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே நடந்த கூட்டத்திலேகூட அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு சொன்னேன். TIIC கூடச் சிறு தொழிலுக்காக ஒரு வங்கியைத் தொடங்கலாம் என்று சொன்னேன். ஆகவே, வங்கியிலே இருக்கின்ற வட்டி சதவிகிதத்தைப்போல இந்த TIIC-ம் வழங்க வேண்டும்.

அடுத்து, கடன் வழங்கும்போது ஒரு tariff சொல்கிறார்கள்; ஒரு பர்சன்டேஜ் சொல்கிறார்கள்; அதாவது, Margin money, மிஷின்கள் எல்லாம் வந்ததற்குப் பின்னால், எங்களுடைய ஊரிலேகூட, பனியன் தொழிலுக்காக வருகின்ற மிஷின்களுக்கு எல்லாம் 20 சதவீதம் என்று சொன்னார்கள். ஆனால் மிஷின் வந்து இறங்கியவுடனே—30 சதவீதம் கட்டுங்கள் என்று சொன்னார்கள். நான்கூட அந்த அதிகாரிகளைப் பார்த்து இது தவறு என்று சொல்லி, போராடி, பிறகு மீண்டும் அதை குறைத்துக் கொடுத்தார்கள். ஆகவே, முதலிலே சொல்வது ஒன்று, பின்னால் செய்வது வேறு என்று சொன்னால், சிறு தொழில் எப்படி வளர்ச்சி அடையும் என்பதைத் தயவுசெய்து சிந்திக்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல D.I.C.-ஐப் பொறுத்தவரையிலே தொழில் வணிகத் துறையில் Capital Subsidy-ஐக் எல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அதை நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அந்த Capital Subsidy-ஐக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சிட்கோவைப் பொறுத்தவரையில் நிறையக் கட்டடங்கள் காலியாக இருக்கின்றன. இப்போது அவர்கள் எல்லாம் காலியாக இருக்கின்ற அந்தக் கட்டடங்களை எப்படி மற்றவர்களுக்குக் கொடுப்பது என்ற அந்த உணர்வோடு செயல்படாமல் ஏதோ கந்து வட்டிகாரர்கள் போல அந்தக் கட்டடங்களுக்கு வாடகையை நிர்ணயித்துக் கொடுப்பது நியாயம் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய கட்டளையை ஏற்று உரையை விரைவில் நான் முடித்து விடுகிறேன்.

சென்ற ஆண்டு வணிகர்கள் சார்பில் நிறைய வரிச் சலுகைகளை எல்லாம் கேட்டோம். முதலமைச்சர் அவர்கள் பெரிய மனதோடு அந்தச் சிறு தொழில்களுக்கு எல்லாம் கொடுத்தார்கள். செங்கல் சூளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் இப்போது எங்கள் பகுதியிலே ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். செங்கல் சூளையைப் பொறுத்தவரையிலே அந்தக் கனிம வளத்திலே, கிரானைட்டுகளுக்கு என்ன சட்டம் இருக்கிறதோ, அதை அந்த மண் எடுப்பதற்கும் போடுகிறார்கள். இந்தச் செங்கல் சூளைக்காக மண்ணெடுப்பதில் இரண்டுவிதமான நன்மைகள் இருக்கின்றன. மண்ணை எடுக்கும்போது, குட்டைகள் தூர் எடுப்பதுபோல ஆழப்படுத்தப்படுகின்றன; தண்ணீர் நிரம்புகிறது. ஆகவே, செங்கல் சூளையை நாங்கள் வைத்திருப்பதற்குக் காரணம், விவசாயம் பொய்த்துப்போனதுதான். அதன் காரணமாகத்தான் ஏராளமான நண்பர்கள் இப்போது செங்கல் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அந்த செங்கல் சூளை வைத்துத் தொழில் நடத்துபவர்களுக்கு வரி விதிப்பதிலிருந்து விடுவிப்புக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அந்த மண்ணை எடுப்பதற்கு இருக்கின்ற அந்தக் கடுமையான சட்டங்களையெல்லாம் நீக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அரியலூர் அரசு சிமெண்ட் பற்றிச் சொன்னார்கள். அதை நாங்களும் கேட்டுக்கொள்கிறோம். எங்களுடைய கொறடா, நான் சொல்லாவிட்டால் நிச்சயமாக— அதாவது வேலூரிலே இருக்கும் D.I.C. Regional Office-ஐ மாற்ற வேண்டாம். அங்கேயே அந்த D.I.C. office இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன்.





பிற்பகல் 12-45

பொள்ளாச்சிக்கு பக்கத்திலே இருக்கிற விவசாயிகள் நிரம்பச் சிரமப்படுகிறார்கள். காரணம், அங்கிருக்கிற கரும்பை சித்தூருக்குக் கொண்டு சென்று கொடுக்கிறார்கள். நம்முடைய ஆலையில் அந்தப் பணம் கொடுப்பதைத் தாமதப்படுத்துகிறார்கள். சித்தூர் ஆலைக்குச் செல்வது என்றால் விவசாயிகளுக்குப் பக்கமாக இருப்பதால் சௌகரியமாக இருக்கிறது. அதை ப்ரீயாக நீங்கள் சென்று கொடுத்துவிடலாம் என்று சொன்னால், விவசாயிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய ஆலையிலே அதற்கு ஒவ்வோர் ஆண்டும் கான்ட்ராக்ட் போடுகிறார்கள். மூன்று வருடத்திற்கு ஒருமுறை கான்ட்ராக்ட் போடவேண்டுமென்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மூன்றே மூன்று விஷயம். எப்பொழுதும் போல, எங்களுக்கு ஒரு குளிர்ப்பதனக் கிடங்கு வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் 20 படுக்கைகள் கொண்ட அரசாங்க ஆஸ்பத்திரி கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களை நான்கு வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு தீயணைப்பு நிலையம் சுல்தான்பேட்டைக்கு வேண்டும். நிச்சயமாக உங்களுடைய அறிவிப்பிலே எதிர்பார்க்கிறேன் என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. அதாவது அலுவல் ஆய்வுக் குழுவிலேகூட, எங்களைப் போன்ற ஒன்றிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளுக்கு முக்கியமான மானியத்திலே பேச வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டேன். 10 மானியங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதிலேகூட எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தராமல் இருப்பது மிக துரதிருஷ்டம். அப்படியென்றால் நாங்களெல்லாம் வந்தும் எந்தப் பிரயோசனமும் இல்லையென்று கருதவேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சிலவற்றில் எழுதிக் கொடுக்காததில்கூட பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெருந் தொழில்கள்' என்ற மானியத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. அழகிரி, திரு. ஆர். சிவராமன், திரு. கே. சுப்பராயன், திரு. தங்கம் தென்னரசு, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஜி.கே. மணி, திரு. அப்துல் லத்தீப், திரு. மோகன் கந்தசாமி ஆகியோர் தங்களுடைய அரிய கருத்துகள் பலவற்றை எடுத்துக்கூறி, 'பெருந் தொழில்கள்' என்ற தலைப்பிலே இந்த மானியம் இன்றைக்கு விவாதிக்கப்பட்டாலும் கூட, இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அவரவர் தொகுதிகளிலே தொடங்கப்பட வேண்டிய சிறு தொழில்கள் குறித்தும், ஏன், தீயணைப்பு நிலையங்கள் வரையில், இங்கே பேசி முடித்திருக்கிறார்கள். நான் என்னுடைய விளக்கத்தைச் சுருக்கமாக இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய அழகிரி அவர்கள் "14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஓர் ஆண்டுக்கு இந்து பத்திரிகை வாங்கக்கூட இந்தப் பணம் போதாது" என்று குறிப்பிட்டார்கள். உடனடியாக நான் 'இந்து' பத்திரிகை நிருவாகத்தோடு தொடர்பு கொண்டு (சிரிப்பு) "இந்து பத்திரிகையினுடைய ஆண்டுச் சந்தா எவ்வளவு" என்று கேட்டேன். 1015 ரூபாய் என்றார்கள். (பலத்த சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் அதற்குப் பதில் (சிரிப்பு) இந்த 14 ஆயிரம் ரூபாய் மானியக் கோரிக்கையில்.

**திரு. ச. அழகிரி:** ஒருவேளை ஆயுள் சந்தா கட்டி இருப்பார்களோ? (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஆயுள் சந்தா என்று அழகிரி சொல்கிறார். அது யாருடைய ஆயுள்? கட்டுகிறவர்களுடைய ஆயுளா, பத்திரிகையினுடைய ஆயுளா, என்பதை ஆராய வேண்டும். இந்த 14 ஆயிரம் ரூபாயில் மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு—எல்லாமே மூலதனச் செலவுதான்—மூலதனச் செலவுக்குத்தான் இந்த 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு—ஆயிரம் ரூபாய்; தொலைத் தொடர்பு, மின்னணுவியல் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; நுகர்பொருள் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; சர்க்கரைத் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; உப்புத் தொழில் குறித்த மூலதனச் செலவு ஆயிரம் ரூபாய்; ஏனைய தொழில்கள் குறித்த மூலதனச் செலவு 5 ஆயிரம் ரூபாய்; சரிகைத் தொழில் நிறுவனம் நிதியுதவி ஆயிரம் ரூபாய்;



தமிழ்நாடு தோல் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதனம் ஆயிரம் ரூபாய். கூட்டு மின் உற்பத்தித் தளவாடங்களுக்கு ஆயிரம் ரூபாய். தன்னாட்சி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறும் திட்டத்திற்கு ஆயிரம் ரூபாய். எனவே இந்த மூலதனச் செலவுக்கு அடையாள ஒதுக்கீடு மாத்திரம்தான் செய்யப்பட்டுள்ளது. அதுதான் 14 ஆயிரம் ரூபாய் என்று குறைவாகத் தெரிந்து, அழகிரி அவர்கள் எல்லா அமைச்சர்களுக்கும் அதிக மானியம் தரப்படும்போது, அதிகத் தொகை ஒதுக்கப்படும்போது, பாவம் முதலமைச்சருக்கு மாத்திரம் 14 ஆயிரம் ரூபாய்தானா என்று பரிதாபப்பட்டதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன். என்ன செய்வது, தாய் சிக்கனம் பிடித்துத்தான் பிள்ளைகளையெல்லாம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-50

மற்றொன்று, தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு இன்றைக்கு எந்த இடத்தில் இருக்கிறது என்ற ஒரு சர்ச்சையை நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும்போது நண்பர் அழகிரி அவர்கள் எழுப்பி, "முதலிடத்திற்கு வந்துவிட்டதாக முதலமைச்சர் சொன்னார். இப்போது அது மூன்றாவது, நான்காவது இடத்திற்குப் போய்விட்டது" என்று ஒரு புள்ளிவிவரத்தைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அது இரண்டாவது இடம் என்ற நிலையை அடைந்து, மீண்டும் முதலிடத்தை அடையக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் தொழில் முதலீடுகளில் தமிழ்நாட்டினுடைய நிலவரத்தைப் படிப்படியாகப் பார்த்தால், 1989-91 கால கட்டத்தில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு அப்போதைய கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவிலே மூன்றாவது இடத்தை அடைந்திருந்தது. இது 1989-91-ல். அப்போது தி.மு.க. ஆட்சி. பிறகு, 1991-96 கால கட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியிலே பின்தங்கி, ஐந்தாவது இடத்திற்கு இறங்கிவிட்டது. 1996-ல் கழக அரசு மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தொழில் வளர்ச்சிக்குத் தொடர்நிலை அளித்துவரும் ஆக்கம், ஊக்கம் ஆகியவற்றின் காரணமாக, தமிழகம் தொழில் வளர்ச்சியிலே மீண்டும் தலை நிமிர்ந்து முன்னணியிலே இருந்து வருகிறது. அண்மையில் 22-4-2000 தேதியிட்ட இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம்-C.M.I.E.—Centre for Monitoring Indian Economy, இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளையெல்லாம் தொகுத்து அறிக்கை ஒன்று

வெளியிட்டது, 22-4-2000 அன்று. அதன் விவரங்களை இங்கே தர விரும்புகின்றேன். தமிழ்நாடு 1,41,893 கோடி ரூபாய். இது ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ள இந்தியாவின் மொத்த முதலீட்டில் 10.89 சதவீதம் ஆகும். மராட்டியம், 1,55,362 கோடி ரூபாய், குஜராத் 1,41,207 கோடி ரூபாய், ஆந்திரா 1,33,587 கோடி ரூபாய், ஒரிசா 1,14,070 கோடி ரூபாய், கர்நாடகம் 93,754 கோடி ரூபாய். இந்தப் புள்ளிவிவரங்களின்படி மராட்டிய மாநிலம் முதலிடத்திலும், தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன. அதாவது, வித்தியாசம் 1.04 சதவீதம்தான்.

ஆனால், அதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவென்றால், இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம்-C.M.I.E.—.-அதாவது Centre for Monitoring Indian Economy முதலீடுகளைப் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுக்கும்போது, தமிழ்நாட்டில் சேர்த்திருக்க வேண்டிய 15 ஆயிரம் கோடி ரூபாயை— விவரங்களைச் சொல்ல வேண்டுமானால் அந்த 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு, நெய்வேலி மூன்றாவது சுரங்கம் வெட்டுவதற்கான, 5,500 கோடி ரூபாய் முதலீடு, நெய்வேலி மூன்றாவது தெர்மல் பவர் ஸ்டேஷனுக்கான 7,500 கோடி ரூபாய் முதலீடு, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் வித்தியாச முதலீடான 2 ஆயிரம் கோடி ரூபாய் ஆகியவற்றைச்— சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயையும் சேர்த்திருப்பார்களேயானால், இந்த நிலை முதல் நிலையாகவே ஆகியிருக்கும். மராட்டியம் அடுத்த நிலைக்குச் சென்றிருக்கும். இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயைச் சேர்க்க வேண்டுமென்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி நிறுவனமும், இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்திற்குக் கடிதம் எழுதி கோரிக்கை விடுத்துள்ளன. நியாயமாக இந்த 15 ஆயிரம் கோடி ரூபாயையும் நமது மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள முதலீட்டோடு சேர்க்க வேண்டும். அப்படி 15 ஆயிரம் கோடி ரூபாய் மூதலீட்டையும் சேர்த்துக் கொள்வதாகவும், 15-5-2000 அன்று வெளியிடவுள்ள அறிக்கையிலே அதைத் தெரிவிப்பதாகவும், 5-5-2000 அன்று C.M.I.E. எழுதியுள்ள கடிதத்திலே நமக்கு அறிவித்துள்ளார்கள். அப்படி அறிவிக்கும்போது தமிழ்நாட்டிற்கு வந்துள்ள முதலீட்டின் அளவு 1,41,893+15,000 ஆக மொத்தம் 1,56,893 கோடி ரூபாய் என்ற வகையில் வரும். அப்போது மராட்டிய மாநிலத்தை மிஞ்சி தமிழ்நாடு முதல் நிலைக்கு வந்துவிடும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.



பிற்பகல் 12-55

ஏறத்தாழ, நான்கு ஆண்டுகளில் இந்திய அளவில் முதலீடுகளிலே ஏற்பட்ட உயர்வு 2,29,721 கோடி ரூபாய். அதிலே, தமிழ்நாட்டிலே ஏற்பட்டுள்ள உயர்வு மாத்திரம் 51,243 கோடி ரூபாய் என்பது நம்முடைய சிறப்புக்குரிய ஒரு செய்தியாகும். சுமார் நான்கு ஆண்டுகளில் அகில இந்தியாவிலும் தொழில் முதலீடுகளில் ஏற்பட்டுள்ள உயர்விலே, தமிழகத்தின் பங்கு 22.31 விழுக்காடு என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்றுமதி வளர்ச்சியிலே பார்த்தால், தமிழ்நாட்டிலே இருந்து என்னென்ன பொருட்கள் ஏற்றுமதி ஆகின்றன என்று பார்க்கும்போது, handicrafts-கைவினைப்பொருட்கள், coir-கயிறு, Readymade garments-ஆயத்த ஆடைகள், Textiles-ஜவுளி, Computer Software-கணினி மென்பொருட்கள், Chemicals-இரசாயனப் பொருட்கள், Gems and Jewellery-முத்துக்கள் மற்றும் தங்க ஆபரணங்கள், Drugs-மருந்துகள், தோல் மற்றும் தோல் பொருட்கள்-Leather and Leather Products, முந்திரி மற்றும் முந்திரிப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், உலோகத் தாதுக்கள், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், காபி, டீ, புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் இவை எல்லாம் ஏற்றுமதி ஆகின்றன.

ஏதோ இந்த ஆட்சி வந்து, தொழிலில், பொருளாதாரத்தில் எல்லாம் பின்னுக்குப் போய்விட்டது என்று நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே வருத்தப்பட்டோ, அல்லது ஆத்திரப்பட்டோ, அல்லது கேலிபுரியும் எண்ணத்தோடோ குறிப்பிட்டார்கள். ஒரு புள்ளிவிவரத்தை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1992-93 அ.தி.மு.க. ஆட்சியில் 6,808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தமிழ்நாட்டிலேயிருந்து ஏற்றுமதியாயின. 1996-97-ல் கழக ஆட்சியில் 17,802 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி. 1997-98-ல் 18,982 கோடி ரூபாய் அளவுக்கு அது உயர்ந்துள்ளது. ஆறாயிரம் கோடி என்பது பதினெட்டு ஆயிரம் கோடி என்று உயர்ந்துள்ளது. 7-2-2000 என்று தேதியிட்ட Economic Times என்ற ஆங்கில நாளிதழில் "Exports in Tamil Nadu" என்ற தலைப்பில், "Tamil Nadu is one of the highly industrialised States of our Country and is a major contributor to the Country's exports.

Of late there is a spurt in the growth of industries like software, artificial diamonds and imitation jewellary.

Chennai has now become an important base for global software majors, as the city has the necessary infrastructure with adequate manpower" என்று அந்த ஏடு குறிப்பிடுகிறது. —Economic Times.

அதாவது, "இந்தியாவில் பெரிதும் தொழில்மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரியதாகும். அண்மைக்காலத்திலே மென்பொருள், செயற்கை வைரங்கள் மற்றும் imitation நகைகள் போன்ற பலதொழில்களின் வளர்ச்சி மிகக் கணிசமாக அதிகரித்துள்ளது. சென்னை, தேவையான மனிதவளத்தோடு, உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால், உலகின் மிகப் பெரிய மென்பொருட்களின் முக்கிய தளமாக விளங்குகிறது" என்று 7-2-2000 அன்று வெளிவந்த Economic Times ஏடு குறிப்பிட்டுக் காட்டுகின்றது. கணினி மென்பொருட்கள் தமிழகத்திலே இருந்து எந்த அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்ற அந்தக் கணக்கைப் பார்த்தால், 1995-96-ல் 37 கோடி ரூபாய் அளவிற்குத்தான் கணினி மென்பொருள் ஏற்றுமதி ஆயிற்று. 1998-99-ல் 1246 கோடியே 16 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த 1999-2000-ல் 1890 கோடி ரூபாய். இதிலே கோவையிலேயிருந்து மாத்திரம், கோயம்புத்தூரிலிருந்து மாத்திரம் மென்பொருள் ஏற்றுமதி 1996-97-லே ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாய். 1999-2000-லே 21 கோடியே 17 இலட்சம் ரூபாய்; கோயம்புத்தூரிலிருந்து மாத்திரம் இந்த மென்பொருள் ஏற்றுமதி;

*பிற்பகல் 1-00*

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டால், "இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட்" (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியைப் பற்றி, "Now the third largest, the Tamil Nadu economy is all set to emerge as the second largest among the States. With a heavy concentration of vehicle and auto component production units, the capital city Chennai is rightly called the Detroit of India" என்று குறிப்பிடுகிறது. "பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்களுக்கு இடையே தற்போது மூன்றாவது இடத்திலுள்ள தமிழ்நாடு, இரண்டாவது இடத்தை அடையும். வாகன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏராளமாக அமைந்துள்ளதால் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று பொருத்தமாக அழைக்கப்படுகிறது" என்று இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட் மிக அழகாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. டெட்ராய்ட் என்பது அமெரிக்காவில் மிச்சிகன் மாகாணத்திலே உள்ள ஒரு நகரம்.



அங்கேதான் ஹென்றி போர்டு 1908 ஆம் ஆண்டு தனது Ford நிறுவனத்தை உருவாக்கினார், உலகத்தின் மிகப் பெரிய ராட்சச கார் நிறுவனங்கள் Auto Girants என்று சொல்லக்கூடிய ஜெனரல் மோட்டார்ஸ், போர்டு மோட்டார்ஸ், கிறிஸ்ட்லர் ஆகிய மூன்றும் டெட்ராய்ட் நகரில்தான் உள்ளன. அந்த நகரத்தோடு ஒப்பிட்டு சென்னை இன்றைக்கு முன்னேறி வருகிறது என்று இந்த ஏடு குறிப்பிட்டு இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே ஞாபகப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்று உலகத்திலேயே தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சிதான் பிரதானமாக விளங்குகின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், எழுபதுகளில் வெறும் கருத்துப் படிவமாக மாத்திரமே இருந்த தகவல் தொழில் நுட்பம், இன்று எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிட்டு இருக்கின்றது. மானுட சமுதாயத்தின் சகல துறைகளும் தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில்நுட்பத்தால், குறிப்பாக "e" என்ற ஓரெழுத்து மந்திரத்தால்தான் பின்னிப் பிணைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. உதாரணமாக,

e-Mail, e-Commerce, e-Medicine, e-Value, e-biz e-biz என்றால் e-business--, e-Stock, e-Education -என இப்படி 'e' என்பது சொல்வதற்கு சாதாரண பொருளாக இருந்தாலும்கூட இந்த 'e' தான் இன்றைக்கு உலகத்திலே பிரதானமாக எலக்ட்ரானிக் என்கின்ற அளவிற்கு எல்லா இடத்திலும் எங்கும் நிறைந்த நாதமாகப் பரவிக் கிடக்கின்றது.

செவிக்கும் கண்ணுக்கும் உலகத்தையே காட்டுகின்ற Internet-ல் இப்போது கண்ணால் பார்க்கிறோம்; காதால் கேட்கிறோம்; இது Internet-னுடைய பயனாக இன்றைக்கு இருக்கிறது. இன்னும் எதிர்காலத்தில் மணத்தைக்கூட நுகரக்கூடிய அளவுக்கு internet வளரப் போகிறது என்றெல்லாம் சொல்கின்றார்கள். அந்த அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சியிலே உலகம் முன்னேறிக்கொண்டு இருக்கிறபொழுது, அதோடு சேர்ந்து போட்டியிடக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியாவிலே இன்றைக்கு தமிழ்நாடுதான் முதலிடத்தைப் பெற்று இருக்கிறது என்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் பாராட்டுகிறார்கள்; எல்லா ஏடுகளும் புகழ்ந்து எழுதுகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான், ஒவ்வோர் ஆண்டும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வரும் பொறியியல் பட்டதாரிகளினுடைய எண்ணிக்கை மிகவும் அதிகம். தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் படித்து வெளியே வரும்

23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகளில், 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மேலாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வருகின்றார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேர்களுக்கு மேலாக மென்பொருள் நிபுணர்கள்-Software Professionals-பணியாற்றி வருகின்றார்கள். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரையில்—இந்த ஒரு புள்ளிவிவரத்தை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரையில்—சென்னையிலே உள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேர்களுக்கு விசா வழங்கி உள்ளது; சென்னையில் உள்ள தூதரகம் 21 ஆயிரத்து சொச்சம் பேர்களுக்கு வழங்கி உள்ளது. இதே கால கட்டத்தில் மும்பை தூதரகத்தில் 9734 விசாக்கள்தான் வழங்கப்பட்டு இருக்கின்றன. புதுடில்லி தூதரகத்தில் 5460 பேர்களுக்கும், கல்கத்தா தூதரகத்தில் 1367 பேர்களுக்கும் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம்—National Association of Software and Services Companies (NASSCOM) தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் எல்லாம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் முதல் நகரம் சென்னை (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்துள்ளது.

*பிற்பகல் 1-05*

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை, தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையின் கீழ் 5-10-1998-இல் உருவாக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சரின் தலைமையில் தகவல் தொழில் நுட்பப் பணி முனைப்புக் குழு—I.T. Task Force—உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் முறையாக தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை—I.T. Policy-ஒன்றை உருவாக்கி, அறிவித்துள்ள அரசும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

27-3-1998 அன்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு தமிழக அரசு நிறுவனங்களான TIDCO, ELCOT-ம் இணைந்து 340 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் டைடல் மென்பொருள் பூங்காவை தரமணியில் உருவாக்கி வருகிறது. TIDEL Park-அதைத்தான் நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். கலைஞருடைய கேமரா வெளிச்சமான



இடங்களுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கேமிராவில் இருக்கிற அதிசயம் என்னவென்றால், இதில் ஒரு லைட்டும் இருக்கிறது. இந்தக் கேமரா சுழலும்போது இருட்டான இடங்களையும் வெளிச்சமாக்கும். அப்படிப்பட்ட அதிசயமான கேமரா என்பதை நண்பர் சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 340 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 8 ஏக்கர் பரப்பளவு 12 இலட்சத்து 80 ஆயிரம் சதுர அடி கட்டடம் கொண்ட 14 தளங்கள்- அமைக்கப்படுகின்றன. இந்த டைடல் பூங்காவிற்கு 21-8-1998 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இந்தப் பூங்காவில் தரை வழியாகவும், செயற்கைக் கோள் வழியாகவும், நுண்ணலைகள் வழியாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப இக்கட்டடத்தின் மேல் தளத்தில் V.S.N.L., DoT ஆகிய நிறுவனங்கள் பிரத்தியேகமான முறையில் வசதிகளை உருவாக்கி வருகின்றன. இந்தப் பூங்காவிற்கு 6 ஆயிரம் டன் திறன் கொண்ட குளிர்பதன வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இங்கு அமையும் Thermal Energy Storage System உலகிலேயே மூன்றாவது பெரிய சிஸ்டம் ஆகும். ஏற்கெனவே பிரான்ஸ் நாட்டில் ஒன்றும், ஜப்பான் நாட்டில் ஒன்றும் பெரிய அளவில் பயன்பாட்டில் உள்ளன. இவை மட்டுமின்றி உலகத் தரத்திலான நவீனமயமாக்கப்பட்ட ஏராளமான வசதிகள் இந்தப் பூங்காவில் அமைந்துள்ளன. ஹைதராபாத் மற்றும் பெங்களூரில் உள்ள மென்பொருள் பூங்காக்களைவிட- அங்கேயிருப்பவை இரண்டும் பெரிய மென்பொருள் பூங்காக்கள்-அவற்றைவிட இது மிகப் பெரியது. இதுவரை பூங்காவின் 60 சதவீத இடம் உலகில் பிரசித்தி பெற்ற மென்பொருள் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. வரும் ஜூலை மாதம் 4-ந் தேதியன்று இந்த மென்பொருள் பூங்காவை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் திறந்து வைக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் முதலாவது Venture Capital Fund அதாவது தமிழ்நாடு மென்பொருள் நிதி என்ற ஒன்றை டிட்கோ நிறுவனம் தொடங்கி, இதுவரை நான்கு மென்பொருள் தொழில் முனைவோருக்கு எட்டு கோடி ரூபாய் முதலீட்டுதவியை வழங்கியுள்ளது.

பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்குப் பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகின்றது.

சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் போலாரிஸ் ஆகிய நிறுவனங்களும் தங்களது மையங்களை இந்தப் பகுதிகளில் நிறுவி உள்ளன.

தமிழக அரசு 'தமிழ்நெட் 1999' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை சென்னையில் நடத்தியது. அதையொட்டி, தமிழ் விசைப் பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டன.

அமெரிக்காவிலுள்ள யூனிக்கோட் கன்சோர்டியம் எனும் மையத்தில் தமிழ்நாடு, கூட்டு அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டுள்ளது. இதில் அங்கத்தினராகும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் Tamil Virtual University—டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள 1,200 மேல் நிலைப் பள்ளிகளிலும்—கடந்த ஆண்டு 600 பள்ளிகள், இந்த ஆண்டு கல்வித் துறையினுடைய முயற்சியினால் மேலும் 600 பள்ளிகள்—11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டுவிட்டது. இத்திட்டத்தினை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை 23-4-1999 அன்று தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம். அப்போது உயர்நீதிமன்றம் சொன்னது—தள்ளுபடி செய்துவிட்டு தீர்ப்பிலே உயர்நீதிமன்றம் சொன்னது— 'அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால், அடுத்த ஆண்டு 48 ஆயிரம் மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின்மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் இந்த அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே, படித்து வந்தவர்களின் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது' என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பிற்பகல் 1-10

தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க தமிழ் இணைய ஆய்வு மையம் ஒன்று டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 1996 மே மாதத்திற்கு முன்பு வரை 34 மென்பொருள் நிறுவனங்களே இருந்தன. கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 562 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோவையிலே—சிறப்பாக கோவையைச் சொல்ல வேண்டுமானால்—1995-96-லே நான்கே நான்கு மென்பொருள் நிறுவனங்கள்தான் இருந்தன. இன்றைக்கு கோவையிலே மாத்திரம் 58 மென்பொருள் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதுமாத்திரமல்ல, ஹாலிவுட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்குத் தேவையான மென்பொருட்களில் பெரும்பாலானவை, சென்னையிலுள்ள மென்பொருள் நிறுவனங்களில்தான் தயாரித்து அனுப்பப்படுகின்றன என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியையும் இந்த அவைக்கு நான் கவனமூட்ட விரும்புகிறேன்.

'வேர்ல்ட் டெல்' நிறுவனம் இம்மாநிலம் முழுவதிலும் 13,000 சமுதாய இணைய மையங்களாக அமைப்பதற்கான பணியைத் தொடங்கிவிட்டது. அதன் மூலமாக, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்குப் பரவலாக வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

பிப்ரவரி 5 ஆம் தேதி, 11 ஆம் தேதி இரண்டு தேதியிட்ட Economic and Political Weekly பத்திரிகையில் வெளிவந்துள்ள Raising Global Competitiveness of Tamil Nadu's IT Industry என்ற கட்டுரையில் நிருபம் பாஜ்பாய், நவி ரட்ஜவ் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரையில்,

''தமிழ்நாடு பெரிய அளவில் திறன் வாய்ந்த மனித வளத்தைக் கொண்டுள்ளது. அதனால், இந்தியாவில் தமிழ்நாடு Intellectural Power House" என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இந்த மாதிரியான பலமும், உலகளாவிய கண்ணோட்டமும் முதலீட்டாளர்களுக்கு இசைவான நிர்வாகமும் சேர்ந்து இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திடக்கூடிய முன்னணி மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத்தில் வேகமான முன்னேற்றத்தை உருவாக்கி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத தகவல் தொழில் நுட்பத்தை அடிப்படை யுக்தியாக தமிழ்நாடு அரசு

தேர்ந்தெடுத்துள்ளது. வேகமான தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான சூழலை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு தன்னுடைய முயற்சிகளைப் பன்மடங்கு பெருக்கியுள்ளது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் அண்மைக் காலங்களில் மிகவும் நேர்த்தியாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி அதன் அண்டை மாநிலங்களைவிட வேகமாக முன்னேறி வருகிறது. மல்டிமீடியா மென்பொருள் வளர்ச்சியிலும் மிக முக்கியமான இடமாக சென்னை வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு வளர்ந்து வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்படி பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டக்கூடிய அளவிற்கு, உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலே, குறிப்பாக தமிழகத்திலே தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் இன்றைக்கு முகிழ்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த உரையின் ஒரு கட்டமாகத் தொடங்கப்பட இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் பற்றி இந்த அவைக்குச் சில குறிப்புகளைத் தர விரும்புகிறேன்.

சென்னைக்கு அருகே உள்ள நாவலூரில் உருவாக்கப்பட்டுள்ளது போலாரிஸ் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா. இதில் ஆயிரத்திற்கும் மேலான மென்பொருள் வல்லுநர்கள் பணிபுரிவார்கள். போலாரிஸ் நிறுவனம் இந்தியாவிலுள்ள 15 முன்னணி மென்பொருள் நிறுவனங்களில் ஒன்று. இந்த மென்பொருள் பூங்காவை 24-5-2000 அன்று நான் திறந்து வைக்க இருக்கிறேன். இங்கே ஆயிரத்திற்கும் மேலானவர்கள் பணிபுரிவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

போலாரிஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. அருண் ஜெயின் 2000 ஏப்ரல் 20 ஆம் தேதி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "I spent for 30 years of my life in Delhi and decided to set up Polaris in Chennai with the Management team because I like the environment and ethical values prevailing in the State of Tamil Nadu. With the support of State Government and people of the State, we are able to grow at a pace of more than 100% per year. I admire your leadership, which is giving this conducive environment for companies to flourish in the State of Tamil Nadu."



பிற்பகல் 1-15

அதைப்போலவே மறைமலை நகரில் தமிழ்நாடு அரசு நிறுவனமான TIDCO மத்திய அரசு நிறுவனமான TCIL மற்றும் ஜப்பான் நாட்டின் ஃப்யுஜிகூரா நிறுவனம் ஆகியவை இணைந்து மிக நவீனமான Optic Fibre Telecom Cables உற்பத்தி செய்யும் தொழிற்சாலை 28 கோடி ரூபாய் செலவிலே நிறுவப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையை 26-5-2000 அன்று நான் தொடங்கி வைக்கவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து 2,800 ஏக்கர் பரப்பளவில், 110 கோடி ரூபாய் செலவில் சிப்காட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது பெருந்துறை வளர்ச்சி மையம்—Perundurai Growth Centre—இந்த மையத்தில் ஈரோடு மஞ்சள் வளாகமும் அமைந்துள்ளது. இந்த மையத்தையும், மஞ்சள் வளாகத்தையும் ஜூலை 1 ஆம் தேதி அன்று காலையிலே நான் திறந்து வைக்கிறேன் என்பதைக் குறிப்பாக நம்முடைய பெரியசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு பெரியசாமிக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலில் கூறியபடி சென்னையில் 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் டைடல் மென்பொருள் பூங்கா ஜூலை 4 அன்று திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டு இருக்கின்றேன். தொடங்கப்படும் அந்த நாள், அந்த 4ஆம் தேதி அன்று உலகப்புகழ் பெற்ற 28 நிறுவனங்கள் அங்கே தங்கள் மென்பொருள் தயாரிப்பைத் தொடங்கிட இருக்கின்றன. அந்தத் திட்டத்தை இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

டிட்கோவும், டாக்டர் ஏ.வி.கே. ரெட்டி என்னும் அமெரிக்க வாழ் இந்தியரும் இணைந்து திருப்பெரும்புதூர் சிப்காட் வளாகத்தில் 27 கோடி ரூபாய் செலவில் Condoms உற்பத்தி செய்யும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட Technical Products தொழிற்சாலை ஜூலைத் திங்களில் தொடங்கப்படவுள்ளது.

கும்மிடிப்பூண்டியில் 19.90 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது, ஏற்றுமதித் தொழில் மேம்பாட்டுப் பூங்கா—Export Promotion Industrial Park— இந்தப் பூங்கா அமைப்பதில் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகமும் பங்கெடுத்துள்ளது. ஜூலைத் திங்களில் தொடங்கப்படவுள்ள தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

திருப்பெரும்புதூரில் 500 ஏக்கர் பரப்பளவில் 202 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள சிப்காட் தொழில் பூங்காவும் ஜுலைத் திங்களில் தொடங்கப்படவுள்ளது.

தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு மைய சக்தியாக விளங்கும் நாங்குநேரி உயர் தொழில் நுட்பப் பூங்கா மொத்தம் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைகிறது. டிட்கோவும், இரண்டு அமெரிக்க நிறுவனங்களும் இணைந்து இந்தப் பூங்காவை உருவாக்கி வருகின்றன. இந்த உயர் தொழில் நுட்பப் பூங்கா, மத்திய அரசின் சமீபத்திய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையின் சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக—Special Economic Zone—அறிவிக்கப் பட்டுள்ளது. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் இங்கே சொன்னார்கள். இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஆரம்பித்து என்ன பயன் என்று சொன்னார்கள். நம்முடைய மோகன் கந்தசாமி அவர்கள் பேசும்போது கூட "பெரிய தொழில்களை ஆரம்பிக்கிறீர்கள். சிறிய தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று" என்று கேட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இன்று நாம் விவாதித்துக் கொண்டிருக்கிற மானியமே, பெரும் தொழில்கள் பற்றிய மானியம்தான். இதிலே "சிறு தொழில்கள் என்ன ஆயிற்று" என்று அவர்கள் கேட்டார்கள். சிறுதொழில்களைப் பற்றியும் இந்த அரசு கவலைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. "சில தொழில்கள் செத்துவிட்டனவே, மூடப்பட்டுவிட்டனவே" நம்முடைய சுப்பராயன் அவருக்கே உரிய அந்த நவீன பாஷையில் அல்லது கரடு முரடான பாஷையில் "பிறப்பைச் சொல்லுகிறீர்கள், இறப்பைச் சொல்லவில்லையே" என்று சொன்னார்கள். என்ன செய்வது? ஒரு வீடு என்று இருந்தால், அங்கே இறந்தவர்களும் இருப்பார்கள், பிறப்பவர்களும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். அது சகஜம், இயற்கை. இரண்டு கிழங்கட்டை இருந்தால் செத்துப் போய்விடும். அதுமாதிரி நலிந்த தொழில்கள் இருந்தால் அவை செத்துப்போய்விடும். புதுத் தொழில்கள் வந்தால் அதைப் பாராட்டி கண்ணே, மணியே என்று கொஞ்ச வேண்டும். அப்படிக் கொஞ்ச வேண்டுமென்றுதான் நான் சுப்பராயனைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் நாங்குநேரியைப் பற்றிச் சொன்னார். அங்கே சுமார் 9,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 55,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். வெளிநாட்டு முதலீடு சுமார் 8,000 கோடி நாங்குநேரிக்கு வரும். இங்கே நிறுவப்படும் தொழில் நிறுவனங்கள் மூலம் நம் நாட்டிலே உள்ள மற்ற நிறுவனங்களும் ஒப்பந்த அடிப்படையில்



பணி எடுத்துச் செய்யலாம். தொழில் நுட்பம் உயரும். தூத்துக்குடி துறைமுக உபயோகம் அதிகரிப்பதால் அதன் விரிவாக்கம் நடைபெற வழிவகுக்கும். அயல்நாட்டு முதலீடுகளை மிகவும் பெருக்குகின்ற நடைமுறை இடையூறுகள் இந்தத் திட்டத்தில் அறவே களையப்படும். இந்த Special Economic Zone-ல் அந்த நிலைமை எல்லாம் அறவே களையப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஜுலைத் திங்களில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது இந்த நாங்குநேரி பூங்கா.

மகளிர்க்கான உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா 6.70 கோடி ரூபாய் முதலீட்டில் கேளம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 1000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பூங்கா வரும் ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்படும்.

Tanflora Infrastructure Park; 24.85 கோடி ரூபாய் முதலீட்டில் மலரைப் பதப்படுத்தும் தொழில் பூங்கா ஒன்று ஓசூரில் 220 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. இது 2000 ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செயல்படத் தொடங்கும்.

பிற்பகல் 1-20

இஃதன்னியில் சென்னை வர்த்தக மையம்; தமிழ்நாடு அரசு, (TIDCO) ஆகியவை இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தோடு (ITPO) இணைந்து கண்காட்சி மற்றும் மாநாட்டுக் கூடத்துடன் கூடிய வர்த்தக மையம் ஒன்றினை நந்தம்பாக்கத்தில் அமைக்கின்றன. தமிழ்நாடு அரசும், டிட்கோ நிறுவனமும் இதற்காக அனைத்து வசதிகளுடன் 20 ஏக்கர் நிலத்தினை வழங்கியுள்ளது, இவ்வளாகம் 20,000 சதுர மீட்டர் பரப்பளவில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடனும், சாதனங்களுடனும் அமைய இருக்கிறது. முதல் கட்டத்தில் 5000 சதுர மீட்டர் பரப்புடைய கட்டடம் கட்டப்படும். இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் மிகப் பெரிய சர்வதேசக் கண்காட்சியும், ஆண்டுதோறும் நடைபெறும். இந்திய சர்வதேச தோல்பொருள் கண்காட்சியும் இந்த வளாகத்தில் நடத்தப்படும். இவ்வளாகத்திற்கு மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் 30-1-2000 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார். 2000 நவம்பரில் திறப்பு விழா நடைபெறும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமான இன்னொன்று; இப்போது இந்தத் தகவல் தொழில் நுட்ப விஞ்ஞானப் புதுமைக்கு இடையே Bio-Technology என்ற அந்தத்

தொழில் பற்றியும்—உயிரியல் தொழில் நுட்பத்தைப் பற்றியும்—தமிழக அரசு இன்றைக்குக் கவலை கொண்டிருக்கிறது, உயிரியல் தொழில் நுட்பத் தொழில் மண்டலம் ஒன்றை நிறுவிட TIDCO மூலமாக நாம் திட்டமிட்டிருக்கிறோம். இதற்காக 20 கோடி ரூபாயில் உயிரியல் தொழில் நுட்பவியல் ஊக்க மூலதன நிதி ஒன்றை உருவாக்கவும் உத்தேசித்திருக்கிறோம். உயிரியல் தொழில் நுட்பத் தொழில்களைத் தொடங்க முன்வருவோருக்கு இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நிதியுதவியும் வழங்கப்படவிருக்கிறது.

இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தர மோட்டார் ஸ்பிரிட், அதிவேகப் பயணத்திற்கு உகந்த டீசல் ஆகியவற்றின் விற்பனை மையத்தினை அமைத்து வருகிறது. இம்மையம் டிசம்பர் மாதம் முதல் செயல்படத் தொடங்கும்.

ப்ராக்சைர் இந்தியா பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை 50 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை, தொழிற்சாலைகளுக்கான வாயுக்களை—industrial gases—தயாரித்து வழங்கும். இத்தொழிற்சாலையும் டிசம்பர் மாதம் முதலே செயல்படத் தொடங்கும்.

செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை; இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன் 480 கோடி ரூபாய் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டுள்ள செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை சோதனை உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. ஜூன் மாதத்திற்குள் வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கிவிடும். இதன் மூலம் 450 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அங்கு இரண்டாம் கட்டமாக, 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் டோலமைட் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்சாலையும் இந்த ஆண்டிலேயே உற்பத்தியைத் தொடங்கவுள்ளது.

கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் கிராமத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பென்னார் ரிபைனரீஸ் லிமிடெட் கம்பெனியின் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இத்தொழிற்சாலை 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செயல்படத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும், தருமபுரி மாவட்டத்தில் 432 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முற்றிலும் நூறு சதவிகிதம் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளி ஆலை ஒன்றினை அமைத்திட TIDCO நிறுவனம், திருவாளர்கள் வாசவி தொழில் குழுமத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் பணியில், ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ள பெரிய நிறுவனங்கள் பங்கேற்கும். வர்த்தக ரீதியிலான உற்பத்தியினை இந்நிறுவனம் அடுத்த ஆண்டில் தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியிலும், திருவண்ணாமலை மாவட்டம் வேதியப்பன் மலை—நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் சொல்லுவார்கள்—கவிதி மலைப் பகுதிகளிலும், ஏறத்தாழ 450 மில்லியன் டன் அளவுக்குக் குறைந்த தரமுடைய இரும்புத் தாதுக்கள் கிடைக்கின்றன என்பது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனுபவம் வாய்ந்த எம்.எல். தஸ்தூர் அண்டு கம்பெனி மூலமாக TIDCO சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. 500 கோடி ரூபாய் முதலீட்டில், ஆண்டுக்கு 2 மில்லியன் டன் இரும்புத் தாதுக்களை கஞ்சமலைப் பகுதியிலும், ஒரு மில்லியன் டன் இரும்புத் தாதுக்களை திருவண்ணா மலைப் பகுதியிலும் தோண்டி எடுத்தல்; இரும்புத் தாதுக்களை 35 விழுக்காட்டிலிருந்து 67 விழுக்காடு அளவிற்கு வீரியமுள்ளதாக ஆக்குதல்; இந்த இரும்புத் தாதுக்களைப் பயன்படுத்தி, சேலத்தில் ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன் இரும்புத் துண்டங்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்தல் ஆகிய திட்டங்களை TIDCO நிறைவேற்றிட உள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, 80 கோடி ரூபாய் முதலீட்டில் நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரு நவீன ஆடை தயாரிப்புப் பிரிவினை அமைத்திட TIDCO திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் ஒரு நாளில் கலை நுணுக்கத்துடன் கூடிய 8,000 கிலோ பின்னலாடைகளையும், நெய்யப்பட்ட 70,000 மீட்டர் ஆடைகளையும் உற்பத்தி செய்வதுடன், 4,500 கிலோ எடையுள்ள நூல்களுக்குச் சாயம் ஏற்றும் நவீன வசதிகளைக் கொண்டதாகவும் இப்பிரிவு அமையும்; இத்துடன் ஆயத்த ஆடை தயாரிக்கும் பிரிவு ஒன்றும் இவ்வளாகத்திலே அமையும். இதற்காக, 40 கோடி ரூபாய் மதிப்புடைய இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படும். முதல் ஐந்தாண்டுகளில் 700 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடைகளை இந்நிறுவனம் ஏற்றுமதி செய்யும். இத்திட்டத்தின் முழுமையான உற்பத்தி 2001 மார்ச் மாதத்திற்குள் தொடங்கும்.

பிற்பகல் 1-25

நாட்டிலேயே உயிரியல் தொழில்நுட்பத் தொழில் மண்டலத்தினை உருவாக்கிச் செயல்படுத்தும்— நான் முதலிலே குறிப்பிட்டபடி— முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகில் இத்துறையில் முன்னணி வகிக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இம்மண்டலத்தை வழி நடத்தும். உயிரியல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தை ஒரு முன்னணி மாநிலமாக உருவாக்கும் நோக்கத்தில் அரசு இந்த மண்டலத்தை அமைக்கிறது.

உயிரியல் தொழில்நுட்பத் துறையின் பல்வேறு பலன்களைக் கருத்தில் கொண்டு, ஒரு முன்னோடி உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே 24-3-2000 அன்று நான் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி, அந்தக் கொள்கையை உருவாக்க வேளாண்துறை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமையில், மத்திய அரசு முன்னாள் உயிரியல் தொழில் நுட்பத் துறைச் செயலாளர் டாக்டர் எஸ். இராமச்சந்திரன், மருந்துகள் துறை ஆலோசகர் டாக்டர் எம்டி. நாயர், தனியார் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எஸ். சந்திரசேகர், மதுரை காமராசர் பல்கலைக்கழக மரபுத் துறை பொறியமைப்பு உயிரியல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் டாக்டர் கே. தர்மலிங்கம், அண்ணா பல்கலைக்கழக உயிரியல் தொழில்நுட்பத் துறை மையத்தின் இயக்குநர் டாக்டர் பி. காளிராஜ், ஸ்பிக் நிறுவனத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பகுதித் துணைத் தலைவர் டாக்டர் ஜோசப் தாமஸ், ஸ்பிக் ஆய்வக உயிரியல் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் டாக்டர் குந்தளா ஜெயராமன், அரசு தொழில் துறைச் செயலாளர், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் ஆகியோரைக் கொண்டு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மூன்று மாத காலத்தில் அரசுக்கு அறிக்கையை அளிக்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

இவ்வாறு சென்னையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மாத்திரமல்லாமல், திருப்பெரும்புதூரிலும், திருவண்ணாமலையிலும், சேலத்திலும், தருமபுரியிலும், கோவையிலும், ஈரோட்டிலும், நாங்குநேரியிலும் என்று தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். அந்தப் பணிகளைத் தொடர்ந்து ஆர்வத்தோடு,



வேகவேகமாக நடத்திக் கொண்டு வருகின்றோம். விரைவிலே இங்கே குறிப்பிட்டவாறு அந்த நாட்களிலே இவையெல்லாம் தொடங்கி, பணிகளை ஆற்றும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்கின்ற வருத்தத்தோடு இருக்கிறார். அந்த வருத்தத்தில், அவருக்கு ஏற்பட்ட கோபத்தில் அரியலூரரை ஒரு தாக்குத் தாக்கினார்; என்னை ஒரு தாக்குத் தாக்கினார். ''எல்லாமே கொள்ளை போயிற்று'' என்று சொன்னார். கொள்ளை போய்க்கொண்டிருந்த காலமெல்லாம் கொள்ளை போயிற்று. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது நாம் நல்ல காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தக் கவலை நண்பர் சுந்தரம் அவர்களுக்கு இருக்கத் தேவையில்லை. சுந்தரமும், அவருடைய கட்சிக்காரர்களும், அடிக்கடி அரியலூரரைப்பற்றிப் பேசுவார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட, இன்றைக்குப் பேசவில்லையானாலும், பல நேரங்களிலே ''அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்றுவிடப் போகிறார்கள்'' என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த அவையிலே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரியலூர் சிமெண்ட் ஆலையை நிச்சயமாக இந்த அரசு விற்காது, விற்காது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அதை அறிவிப்பாகச் சொல்கிறேன். அரியலூர் சிமெண்ட் ஆலையையோ அல்லது தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் எந்தப் பிரிவையுமோ, தனியார்மயமாக்கிட எந்தவிதமான நடவடிக்கையும், எந்தவிதமான முயற்சியும், எந்தவிதமான முடிவும் எந்தக் கட்டத்திலும் இந்த அரசால் எடுக்கப்படவில்லை; எடுக்கப்படமாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், தினமும் அறிக்கை வருகிறது; அம்மையாருடைய அறிக்கை. ''அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப்போகிறார், விற்கப் போகிறார்'' என்று அல்லது பினாமிக்குக் கொடுக்கப்போகிறார்; அவருடைய மருமகனுக்கே கொடுக்கப் போகிறார்; என்று தினமும் அறிக்கை வந்துகொண்டிருக்கிறது. நீங்களெல்லாம் பார்த்துப் படித்திருப்பீர்கள். விற்பதையே ஒரு பெரிய பாவம் என்று இன்றைக்குச் சொல்கிறார்களே, ரைட், பாவம்தான். நான் விற்கப் போவதில்லை. விற்றால், சுப்பராயன் ஏற்றுக்கொள்கிறாரோ, பழனிசாமி ஏற்றுக்கொள்கிறாரோ, அல்லது நம்முடைய டி. மணி ஏற்றுக்கொள்கிறாரோ, ஹேமச்சந்திரன் ஏற்றுக்கொள்கிறாரோ, இல்லையோ, மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ, நானே ஏற்றுக்கொள்ள மாட்டேன், அதை. ஏனென்றால், நான் ஒரு

பொதுவுடைமைவாதி என்பதை நான் சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே உள்ள பொதுவுடைமைக்காரர்கள் சில பேருக்கு என்னைப் பிடிக்காததற்குக் காரணமே, இவன் போட்டிக்குப் பொதுவுடைமைவாதியாக இருக்கிறானே என்பதுதான். அதற்காகவே சில பேருக்குப் பிடிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு நான் பொதுவுடைமைவாதி என்று மனதிலே கை வைத்துப் பார்த்து, எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். எனவே, இருப்பதைத் தனியார் மயமாக ஆக்குவதை, தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில், தனியார்மயத்தைத் வரவேற்கிற ஒரே சூழ்நிலையில், இருப்பதை, இருக்கின்ற பொதுத் துறையை, தனியார்மயமாக ஆக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் எப்போது வந்தாலும் அதை எதிர்க்கக்கூடியவன்தான் கருணாநிதி என்பதை இந்த அவையிலே மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவர்கள் என்ன செய்தார்களாம்? இன்று, தி.மு.க. ஆட்சியிலே, ''அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப் போகிறார்கள்'' என்று சொல்லி, தினம் தினம் ஆருடம் கணித்துக்கொண்டு, அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்களே, இவர்கள் என்ன செய்தார்களாம்? ஜெயலலிதா அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், அரியலூர் சிமெண்ட் ஆலை மாத்திரமல்லாமல், ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, மாயனூர் சிமெண்ட் குழாய் ஆலை, ஆலங்குளம் கல்நார்த் தகட்டாலை, விருத்தாசலம் கல்நார்க் குழாய் ஆலை; ஆக மொத்தமாக 'TANCEM' நிறுவனத்தையே விற்பனை செய்து, தனியார்மயமாக்க, *12-12-1994* அன்று பத்திரிகையிலே விளம்பரம் செய்யப்பட்டது. உண்டா? இல்லையா? *12-12-1994* அன்று—(குறுக்கீடு)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த கழகத்தின் சார்பிலே அன்றைக்குப் பெருமுயற்சி எடுத்து, அன்று நம்முடைய இன்றைய அமைச்சர், அன்றைய கழகத்தினுடைய பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களைக் கொண்டுதான் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடரச் சொல்லி இடைக்காலத் தடையாணை வாங்கப்பட்டது அப்போதுதான்.



அரியலூரை மாத்திரம் அல்ல; இப்போது சொன்ன இவ்வளவு நிறுவனங்களையும் சேர்த்து விற்பதற்கு, தனியார் மயமாக்குவதற்கு எடுத்த முயற்சியை வீராசாமி அவர்களால் வழக்குப் போடப்பட்டு அதை அன்றையதினம் தடுக்க முடிந்தது. அந்த வழக்கிலே, அ.தி.மு.க. அரசு ஒரு Counter Affidavit போட்டார்கள். அதைப் படித்துக் காட்டுகிறேன். அவர்களோடு சேர்ந்துகொண்டு, எங்களைக் கிண்டல் பண்ணுகிறார் (சிரிப்பு) எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான்—சேர்ந்ததைத் தப்பாகவெல்லாம் சொல்லவில்லை. அதற்காகச் சொல்லவில்லை—எண்ணிப் பாருங்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அந்த Affidavit-லே என்ன இருக்கிறது தெரியுமா? அந்த Counter Affidavit-லே "In the present situation, there is no shortage of cement in the market and the social obligation of the third respondent (TANCEM) to supply an essential commodity does not exist. As already stated the interests of the workers will be adequately protected". அதாவது, "தற்போதைய சூழ்நிலையில், சந்தைகளில் சிமெண்ட் பற்றாக்குறை இல்லை. அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் தமக்குள்ள சமுதாயக் கடமையை மூன்றாவது பிரதிவாதியான டான்செம் நிறைவேற்றவில்லை."—அதை மூன்றாவது பிரதிவாதியாகவே ஆக்கிவிட்டார்கள். Government நிறுவனம் அது. அதை மூன்றாவது பிரதிவாதியாக ஆக்கி—அதற்கு அக்கறை இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, தொழிலாளர்களின் நலன்கள் போதுமான அளவில் பாதுகாக்கப்பட்டுள்ளன'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தது, "The Government of Tamil Nadu are not in a position to provide substantial funding due to the present financial situation and other priorities" அதாவது "தற்போதைய நிதி நிலவரம் மற்றும் பிற முன்னுரிமைகள் காரணமாக, மேலும் நிதி வழங்கும் நிலையிலே தமிழக அரசு இல்லை. அந்த ஆலைக்கு இல்லை." என்று மறுபடியும் கடைசியாகச் சொல்கிறார்கள், பாருங்கள். "The Government have taken a decision that wherever possible the investment in the Public Sector Companies may be disinvested." அதாவது "பொதுத் துறை கம்பெனிப் பிரிவுகளில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் திரும்பப்பெற அரசு ஒரு முடிவு செய்துள்ளது" என்று அ.தி.மு.க. அரசு கொடுத்த . Affidavit-லே குறிப்பிட்டுவிட்டு, இந்த இலட்சணத்திலே எங்களைப் பார்த்து, "நீங்கள் அரியலூர் சிமெண்ட் ஆலையை விற்கப்போகிறீர்கள்" என்று சொல்வது, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மயிலைப் பார்த்து, ஏதோ பழித்த கதையாகத்தான் இது இருக்கிறது. நாகரிகமாகச் சொல்கிறேன், ஏதோ என்று. அந்த அளவுக்கு

வேண்டுமென்றே இந்த அரசு மீது, எந்தத் துறையானாலும், அந்தத் துறையை மையப்படுத்தி, புகார் சொல்ல, புழுதி வாரித் தூற்ற, அதிமுக-வின் நண்பர்கள், அதனுடைய தலைவியார் அறிக்கைகள் மூலமாகச் செய்கின்ற முயற்சிகள் எடுபடாது என்பதையும், தொழில் வளர்ச்சிக்காக இந்த அரசு...(குறுக்கீடு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். இன்று தனியார் சிமெண்ட் ஆலைகள் எல்லாம் மிக நவீனமான இயந்திரங்களை வைத்து சிறப்பான முறையில், சிமெண்ட் தயார் செய்வதன் மூலமாக அவர்கள் குறைந்த விலையில் தயார் செய்து, நிறைந்த விலையில் விற்கின்ற வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய தமிழக அரசுக்குச் சொந்தமான இந்த சிமெண்ட் ஆலைகளை நவீனப்படுத்துவதற்கு நீங்கள் என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடையை விளக்கத்தோடு அளிக்கிறேன். இப்போதுகூட "அரியலூர் சிமெண்ட் ஆலையினுடைய உற்பத்தி குறைந்து போய்விட்டது" என்று அறிக்கையிலே சொல்லிக் கொண்டு வருகிறார்கள்; "உற்பத்தி எல்லாம் குறைந்து போய் விட்டது கருணாநிதி ஆட்சியிலே" என்று சொல்கிறார்கள். ஒன்றும் குறையவில்லை. அ.தி.மு.க. ஆட்சியிலே 1991-92-லே அரியலூர் சிமெண்ட் உற்பத்தி 3,33,000 டன், 1992-93-ல் 4,13,000 டன், 1993-94-ல் 4,34,000 டன், 1994-95-ல் 3,77,000 டன், 1995-96-ல் 4,29,000 டன். கழக ஆட்சியிலே 1996-97-ல் 4,63,000 டன், குறையவில்லை. 1997-98-ல் 5,38,000 டன். 1998-99-ல் 4,87,000 டன், 1999-2000-ல் 4,46,000 டன், குறையவேயில்லை. அந்த அளவிற்கும் ஆகியிருக்கிறது; அந்த அளவைவிட அதிகமாகவும் ஆகியிருக்கிறது. அதனால், உற்பத்தி ஒன்றும் குறைந்துவிடவில்லை. ஏன் நட்டம் ஏற்படுகிறது என்று கேட்டால், அதற்கு ஒரேயொரு காரணம், தனியார் நடத்துகிற நிறுவனங்களில் தொழிலாளர்களுடைய ஊதியங்கள், பொதுத் துறையிலே கொடுக்கப்படுகிற அளவிற்குக் கொடுக்கப்படுவதில்லை. இதிலே அதிகச் செலவாகிறது என்பதை ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும். நான் தொழிலாளர்களைக் குறை கூறவில்லை. தனியார் பஸ், நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுடைய பஸ், இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்



எப்படியோ, அதுமாதிரிதான், இதிலேயும், தனியார் நடத்தும்போது இலாபம் ஏற்படுகிறது; தனியார் நடத்தும்போது நல்ல உற்பத்தி இருக்கிறது. இப்பவும் உற்பத்தி குறைந்து போய்விடவில்லை. உற்பத்தி அதே அளவிற்கு இருந்தாலும்கூட, இலாபம் இல்லாததற்குக் காரணம், நாம் தொழிலாளர்களுக்குத் தனியாரைப் போலக் குறைந்த சம்பளம் கொடுப்பதில்லை, அவர்களுக்கு நியாயமான சம்பளம் என்ற பெயரில் அவர்களுக்குச் சம்பளம் தர வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு காரணம்.

நவீனமயமாக்க வேண்டுமென்று கேட்டார்கள். இப்போது 'அரசு சிமெண்ட்' வாங்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. இப்போது அரசு சிமெண்ட் வாங்கப்பட்டது. ஆனால், வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற சிமெண்ட்—அது இங்கே சொன்ன 'அம்புஜா' மாத்திரம் அல்ல, எல்லா சிமெண்ட்டும் வந்திருக்கிறது. இப்போது மின்சாரத் துறைக்குக் கூட அந்த சிமெண்ட்தான் வாங்கப்பட்டு இருக்கிறது.—85 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அதே நேரத்தில் அரசு சிமெண்ட் 145 ரூபாய் விலை ஆகிறது. 145 ரூபாய் சிமெண்ட் அவர்களால் வாங்க முடியவில்லை. வாங்கினால் திட்டச் செலவு அதிகமாக ஆகும். எனவே, வாங்க முடியவில்லை, ஆகவே வாங்குவதில்லை, அதுவும் ஒரு காரணம். இவற்றையெல்லாம் சரிபார்த்து—இப்பொழுது திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்களே, 50 சதவிகிதத்திலே போட்டி போட்டுக் கொண்டு, டெண்டரில் போட்டி போட்டுத்தான் சிமெண்ட்டை விற்க வேண்டியிருக்கிறது, மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள்—அதை மாற்ற முடியுமா, அதை மாற்றி ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்று பார்ப்பதற்காக, அதைச் சீரமைத்து நவீனப்படுத்துவதற்கு கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு பரிசீலித்து, ஒரு வார காலம் அல்லது 2 வார காலத்திற்குள்ளாக அதைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்ட பிறகு, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, மேலும் நவீனப்படுத்தி, இந்தச் செலவினங்களைக் குறைக்கவும், சிமெண்ட் உற்பத்தியை அதிகமாக்கவும், அப்படி அதிகமாக்கும் சிமெண்ட்டுக்கு நல்ல கிராக்கி ஏற்படுத்துவதற்கும், அந்தக் குழுவின் மூலம் முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவில் இன்றைக்கு (குறுக்கீடு) இதை முடித்துவிடுகிறேன்.

நிறைய வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களுடைய எண்ணிக்கை 111. நம்பர் நன்றாக இல்லை. (பலத்த சிரிப்பு). இல்லாவிட்டாலும் கூட 111 வெட்டுத்தீர்மானங்களையும் எல்லோரும் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியத்தை ஆதரித்து, கோரிய நிதியை அரசுக்குத் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு பேசியபோது, இந்த அழகப்பா சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான அரசினுடைய நிலத்தை, வேறொரு பினாமி கம்பெனிக்கு 100 ஏக்கர் நிலத்தை விற்று விட்டார்கள் என்று கூறினேன். அதனுடைய மதிப்பு 2,000 கோடி என்று கூறினேன். அதை மாற்றி 2,000 இலட்சம், அதாவது 20 கோடி என்று பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது, ராசிபுரம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றுக்கு மட்டும்தான் என்னிடம் அனுமதி வாங்கினீர்கள். அதோடு உட்காருங்கள். நீங்கள் கேட்ட அனுமதியைக் கொடுத்தேன், அந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச்சிலே ஏதோ தப்பாக 200 கோடி, 20 இலட்சம், 2,000 கோடி என்று சொல்லிவிட்டு, அதை மாற்ற வேண்டுமென்று சொன்னீர்கள். அனுமதி கொடுத்துவிட்டேன், மாற்றிவிட்டீர்கள். இனிமேல் உட்காருங்கள்.

பிற்பகல் 1-40

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 24— தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இஎஸ்எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண்** மானியக் கோரிக்கையின்கீழ் **ரூ.16,22,70,000-க்கு மேற்படாத** தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" **என்னும்** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் *53*— தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

[2000 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



2000 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-5-2000) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

157. சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலுள்ள சேலம் அங்காடிக் குழுவின்கீழ் செயல்படும் பத்தொன்பது அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிகளில் பாசிப் பயறு (அனைத்து வடிவங்களில்), உளுந்து (அனைத்து வடிவங்களில்), துவரை (அனைத்து வடிவங்களில்), மரவள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மரவள்ளிக் கிழங்கு மாவு, மரவள்ளிக் கிழங்கு ஸ்டார்ச், மஞ்சள் (அனைத்து வடிவங்களில்) (குண்டு மற்றும் விரலி) ஆகியவற்றின் விற்பனையை முறைப்படுத்துவது குறித்து

[2000 மே 8

வேளாண்மைத் துறையின் 27-3-1998ஆம் நாளிட்ட 87ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (C) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)

158. 1996-97, 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளுக்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

196. மானியக் கோரிக்கை எண்கள் 24 மற்றும் 53—பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

197. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

198. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

199. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

200. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

201. பெருந்தொழில்கள் பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

202. தமிழ்நாடு அரசு புவியியல் மற்றும் சுரங்கவியல் இயக்ககத்தின் 'குடிமக்கள் உரிமை ஆவணம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

203. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)



**இணைப்பு**

*[69ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]*

## தொழில் கொள்கை

## 2000-2001

### முன்னுரை

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்திட வேண்டும்; சாதனைகள் பெருகிட வேண்டும்; புதிய புதிய தொழில்கள், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட நவீன தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடன் அரசு பலமுனைச் செயல்திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

2. தொழில்களைத் தொடங்க தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்துகொண்ட பின்னரே முதலீட்டாளர்கள் தொழில்களைத் தொடங்கத் தீர்மானித்து முன்வருகின்றனர் என்ற உண்மையை உணர்ந்துள்ள தமிழக அரசு, பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது. இந்த நடவடிக்கை முதலீடுகளைக் கவர்ந்து ஈர்ப்பதில் தமிழ்நாடு எய்துள்ள உன்னத நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள பெரிதும் உதவியுள்ளது.

3. மின்சக்தியைப் பொறுத்தமட்டில், அரசு மற்றும் தனியார் துறைகளில், மின் உற்பத்தி செய்வதற்கும், கூடுதல் மின்சார இருப்பை உறுதி செய்துகொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. சாலைகளைப் பொறுத்தமட்டில், அகில இந்திய சராசரியான ஓராயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பிற்கு 663 கிலோமீட்டர் நீள சாலைகள் என்பதற்கு மாறாக 1,572 கிலோமீட்டர் நீள சாலைகளைக் கொண்டதாக தமிழ்நாடு உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகள் மேம்பாடு, நவீனப்படுத்துதல் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கும் அரசு அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது. மாநில அரசு கடலூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. தனியார் துறை முதலீட்டுடன் சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 மே 8

தொழில் முனைவோர் தொழில் தொடங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க உதவும் வகையில் அவர்களுக்கு அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிலங்களை உடனடியாகக் கிடைக்கச் செய்வதற்கு மாநிலத்தின் பல பகுதிகளில் நில வங்கி தொடங்குவதில் இவ்வரசு கவனம் செலுத்தி வருகிறது.

4. அரசின் இத்தகைய தொழில்நேயம் மிக்க கொள்கை பலனளிக்கத் தொடங்கியுள்ளது. அரசு நிறுவனங்கள் மூலம் அமைக்கப்படும் தொழில் பூங்காக்களில் அதிக அளவில் தொழில்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் மைய அரசு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியை ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமாக (Special Economic Zone) அறிவித்துள்ளது. இங்கு அமெரிக்க தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து ஓர் உயர் தொழில்நுட்பப் பூங்காவை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

5. மொத்த இந்திய ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 15 விழுக்காட்டிற்கும் கூடுதலாக உள்ளது. தமிழ்நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 12—15 விழுக்காடாக உள்ளது. 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய தொழிற்பிரிவுகளைப் பொறுத்தமட்டில், மைய அரசின் புள்ளிவிவரங்களின்படி அகில இந்திய எண்ணிக்கையான 3,569 தொழிற்பிரிவுகளில் 537 தொழிற் பிரிவுகளை இம்மாநிலம் ஈர்த்துள்ளது. இது அகில இந்திய அளவில் உயர்ந்த எண்ணிக்கை (15%) ஆகும். இந்த ஏற்றுமதி நோக்குடைய தொழிற்பிரிவுகளின் மொத்த முதலீடு ரூ.9,678 கோடி. இவை சுமார் 96,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

6. தகவல் தொழில்நுட்பத் துறையில் அரசு மேற்கொண்ட இடைவிடா முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன. 1997—98 ஆம் ஆண்டில் ரூ.393 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி, 1998—99 ஆம் ஆண்டில் ரூ.1,246 கோடிக்கு, அதாவது இந்தியாவில் எந்த மாநிலமும் அடையாத அளவான 217 விழுக்காட்டிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்த ஏற்றுமதி 1999—2000 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கூடுதலாகவே இருக்கும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ), தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் (எல்காட்) இணைந்து ரூ.340 கோடி மதிப்பீட்டுத் திட்டச் செலவில் அமைத்து வரும் டைடல் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (TIDEL Software Technology Park) 2000 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கும். கட்டி முடிக்கப்பட்டவுடன், இப்பூங்கா இந்தியாவிலேயே மிகப்பெரிய மற்றும்



2000 மே 8]

மிக நவீன மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவாக அமையும்; மேலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒரு மில்லியன் சதுர அடி இடவசதி வழங்கக் கூடியதாகவும் இது இருக்கும். தொழில்முனைவோருக்கு இப்பூங்காவின் கணிசமான பகுதி ஏற்கெனவே விற்கப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பரவலாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களிலும் தொழில்நுட்பப் பூங்காக்களைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

7. மாநில அரசு உயிரியல் தொழில்நுட்பத் துறை என்ற மற்றுமொரு நவீன துறையின் முன்னேற்றத்திற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. டிட்கோ நிறுவனம், சென்னைக்கு அருகில் சிறுசேரியில் மகளிர் தொழில் முனைவோர்களுக்காக மைய அரசு மற்றும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்து வருகிறது. இப்பூங்கா இவ்வாண்டு செப்டம்பர் திங்களில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிநவீன உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. உலக அளவில் புதிதாக முன்னேறி வரும் உயிரியல் தொழில்நுட்பத் துறை தமிழகத்தில் விரைவாகவும், முறையாகவும் வளர இக்கொள்கை வழி வகுக்கும்.

8. திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (GUIDANCE Bureau) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) இணைக்கப்பட்டுவிட்டது. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID) தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனத்துடன் (SIPCOT) இணைக்கப்பட்டுவிட்டது. சிப்காட் நிறுவனத்திடம் இருந்த கடன் வழங்கும் பணிகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (TIIC) மாற்றப்பட்டுவிட்டன. இந்த நடவடிக்கை இந்த நிறுவனங்கள் மேலும் சிறப்பாகச் செயல்பட உதவும்.

9. இந்தியாவில் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அயல்நாடுகளிலிருந்தும் நாட்டின் இதர பகுதிகளிலிருந்தும் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளும் பொறுப்பு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டது. தமிழ்நாடு மார்ச் 2000 வரையில் ரூ.1,44,131 கோடி மதிப்புள்ள முதலீடுகளை

[2000 மே 8

(இந்த கால கட்டத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களுக்கான முதலீடுகள் நீங்கலாக) ஈர்த்துள்ளது. 1996 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் இதுவரை இந்தியா முழுமைக்கும் ஒப்பளிக்கப்பட்ட/செயலாக்கத்திலுள்ள மொத்த முதலீடுகளின் மதிப்பு ரூ.2,27,638 கோடி. இதில், தமிழ்நாட்டின் பங்கு ரூ.53,481 கோடி. தமிழ்நாடு, இந்தியாவிலேயே உயர்ந்த முதலீட்டு மதிப்பாக 23.50 விழுக்காடு அளவுக்குப் பெற்றுள்ளது. 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை இந்தியாவில் செய்யப்பட்ட மொத்த முதலீட்டில் தமிழ்நாடு 8.45 விழுக்காடுதான் பெற்றிருந்தது.

10. அயல்நாட்டு நேரடி முதலீட்டைப் பொறுத்தமட்டில், ஆகஸ்டு 1991 முதல் ஜனவரி 2000 வரையில் (விவரங்கள் கிடைத்துள்ள காலம்) இம்மாநிலம் ரூ.14,122 கோடி மதிப்புள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது. இதில் 1996 ஆம் ஆண்டு மே திங்கள் தொடங்கி இதுவரை பெற்றுள்ள முதலீட்டின் மதிப்பு ரூ.10,424 கோடி; அதாவது 73.8 விழுக்காடு. 1996 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில் தொழில் வளர்ச்சி அகில இந்திய அளவில் மேம்பட்டு இருந்ததையும் 1996-க்குப் பிறகு பொதுவான பொருளாதார தேக்கநிலை நிலவியதையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ்நாடு பெற்றுள்ள முதலீட்டின் அளவு குறிப்பிடத்தக்கது. பொருளாதார தேக்க நிலையிலும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் கணிசமான மேம்பாடு அடைய முடிந்தது என்பது நமது முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளின் வெற்றிக்குச் சான்றாக விளங்கும்.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)**

நடுத்தர மற்றும் பெரிய அளவிலான முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து தனியார் நிறுவனங்களையும், தொழில் முனைவர்களையும் பங்குதாரர்களாகக் கொண்டு தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் டிட்கோ நிறுவனம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

தொடக்க காலத்திலிருந்து, வணிக உற்பத்திக்கான தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தனியார் துறை கூட்டுத் தொழில் முனைவர்களை பங்குதாரர்களாகக் கொண்டு கூட்டு முயற்சியில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதை மட்டுமே டிட்கோ நிறுவனம், தனது செயல்பாடாகக் கொண்டிருந்தது. எனினும் மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகளைக்



2000 மே 8]

களைவதிலும், நவீன வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் தற்போது கவனம் செலுத்தி, முதலீடுகளை ஈர்க்கும் வகையில் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்க டிட்கோ நிறுவனம் தனது நோக்கங்களை விரிவுபடுத்தியுள்ளது. இந்த ஆண்டில், ஒற்றைச் சாளர முறையில் அனுமதிகளைப் பெற்றுத் தருவதற்காகப் பொது விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலிக்கும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பினைத் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் டிட்கோ நிறுவனம் கொண்டுவரவிருக்கிறது.

டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வரும் திட்டங்களை, தொழில் திட்டங்கள், தொழில் பூங்காக்கள், மின் திட்டங்கள் மற்றும் இதர கட்டமைப்பு திட்டங்கள் என விரிவாக வகைப்படுத்தலாம். இவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

I. **தொழில் திட்டங்கள்:**

**பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு:**

(i) காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில், திருவாளர்கள் டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டன்ட்ஸ் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து 28.5 கோடி ரூபாய் திட்டச் செலவில் அமைக்கப்பட்டுள்ள டெலிகாம் கண்ணாடி இழை வடங்கள் உற்பத்தித் திட்டம், 1999 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

(ii) ஸ்ரீபெரும்புதூருக்கருகில் 14.5 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள குருதி சேகரிப்புப்பை திட்டம், மாதிரி உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. வெகுவிரைவில், வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கவுள்ளது. இத்திட்டம் 125 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிக்கும்.

(iii) மேட்டூரில் டிட்கோ நிறுவனம் மூலம் தொடங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த உருக்குத் தொழிற்சாலையின் ஒரு பகுதியாகிய வார்ப்பு இரும்பு ஆலையும் சின்டர் ஆலையும் ஏற்கெனவே வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. சுழற்சி ஆலைக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இது விரைவில் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1,000 நபர்களுக்கு நேரடியாகவும், 3,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கிறது.

[2000 மே 8

உருக்குத் தொழிற்சாலையின் பின் இணைப்பாக, 142 கோடி ரூபாய் செலவில் கல்கரிச் சூளை திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 300 நபர்களுக்கு நேரடியாகவும், 1,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிட்டும்.

(iv) கோயம்புத்தூரை அடுத்து, மயிலேறிப் பாளையத்தில் 12.5 கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் இயந்திரப் பட்டறை வசதிகளுடன்கூடிய நவீன வார்ப்பட ஆலை ஒன்று (எஸ்.ஜி. இரும்பு வார்ப்படங்கள்) இணைத் துறையில் அமைக்கப்பட்டுள்ளது. இது 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. இத்திட்டம், 100 நபர்களுக்கு நேரடியாகவும், 300 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கும்.

(v) டிட்கோ நிறுவனத்தால் இணைத் துறையில் 5.6 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்திய இயற்கை மருத்துவப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் 1999 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் 18 வகை அரோமாதெரபி மருந்துப் பொருட்களை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

(vi) கோயம்புத்தூர் மாவட்டம், பொங்கலூரில் 15 கோடி ரூபாய் திட்டச் செலவில் 100% ஏற்றுமதிக்கான கோழி இறைச்சி பதப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்பந்தம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இத்திட்டம் 300 நபர்களுக்கு நேரடியாகவும், 3000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கும். சந்தை வாய்ப்பு குறித்து ஆய்வு நடத்தி, சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்காக ஓர் ஆலோசக நிறுவனம் பணியமர்த்தப்பட்டுள்ளது.

(vii) டிட்கோ நிறுவனம் 100% ஏற்றுமதிக்கான உறைய வைக்கப்பட்ட பிரெஞ்ச் பிரைஸ் தயாரிப்புத் திட்டம் ஒன்றினை 33 கோடி ரூபாய் திட்டச் செலவில் தற்போது வழிகாட்டுத் துறையில் (Escort sector) அமைத்து வருகிறது. இத்திட்டத்திற்காக, கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

(viii) கடலூருக்கு அருகில், நாகார்ஜுனா குரூப் நிறுவனத்துடன் இணைந்து 3520 கோடி ரூபாய் முதலீட்டில், இணைத் துறையில் அமைக்கப்பட்டு வரும் எண்ணெய் சுத்திகரிப்பாலைக்குத் தேவையான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன. நிதி அமைப்புகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. நில மேம்பாட்டுப் பணி தொடங்கியுள்ளது.



2000 மே 8]

வெகுவிரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, வணிக ரீதியிலான உற்பத்தி ஏப்ரல் 2002-ல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 500 நபர்களுக்கு நேரடியாகவும், 1500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கும்.

(ix) அயல்நாட்டில் வசிக்கும் இந்திய டாக்டர் ஏ.வி.கே. ரெட்டி அவர்களைக் கூட்டுத் தொழில் முனைவராகக் கொண்டு 27 கோடி ரூபாய் திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 200 மில்லியன் நவீன கருத்தடை உறைகள் தயாரிக்கும் மெடி—டெக் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் என்ற இணைத் துறை நிறுவனம், ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம், 1999 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. இத்திட்டத்தின் வாயிலாக 100 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

(x) ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் இலுக்கா ரிசோர்சஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து இல்மினைட் கனிமத்தைப் பிரித்தெடுத்து, செழுமைப்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இதற்காக, தொழில் உடன்பாடு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக்கொள்ள அந்நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் கலந்தாலோசித்து வருகிறது.

(xi) மைய அரசின் தற்போதைய கனிமக் கொள்கையின்படி, இரும்புத்தாது வெட்டி எடுக்க தனியார் துறையும் அனுமதிக்கப்படும். சேலம் மாவட்டம், கஞ்சமலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கவுதி மலை, வேதியப்பன்மலை ஆகிய இடங்களில் உள்ள இரும்புத்தாதுப் படிவங்களில் 35% முதல் 40% இரும்பு உள்ளது. எனவே 500 கோடி ரூபாய் முதலீட்டில் இரும்புத்தாது திட்டம் ஒன்றினைச் செயல்படுத்துவதற்காக பின்வரும் வசதிகளை ஏற்படுத்த டிட்கோ நிறுவனம் கருதியுள்ளது:

1. திருவண்ணாமலை பகுதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 1 மில்லியன் டன் இரும்புத்தாது மற்றும் கஞ்சமலைப் பகுதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 2 மில்லியன் டன் இரும்புத்தாது வெட்டி எடுத்தல்;
2. அந்தந்த சுரங்கங்களில் செழுமைப்படுத்தும் ஆலைகளை அமைத்தல்; மற்றும்
3. சேலத்தில் ஆண்டொன்றுக்கு 1 மில்லியன் டன் பெல்லட்டுகளைத் தயாரிக்கும் ஆலை அமைத்தல்.

[2000 மே 8

மைய அரசின் சுரங்க அமைச்சகம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகங்களிடமிருந்து பல்வேறு அனுமதிகளைப் பெற டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தேவைப்படும் அனுமதிகள் கிடைத்த பின்னர், இத்திட்டத்தை இணைத் துறையில் செயல்படுத்த உகந்த தனியார் தொழில் முனைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(xii) நாப்தா கிராக்கர்கள், துணைப் பாலிமர்கள், பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக 5000 கோடி ரூபாய் செலவில் பெரிய அளவிலான பெட்ரோலிய இரசாயன வளாகம் ஒன்றினை எண்ணூரில் அமைக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இதற்காக உலக அளவில் பெட்ரோலிய இரசாயனத் தொழிலில் சிறந்து விளங்குகின்ற ஜப்பான் நாட்டு மிட்சுய் நிறுவனமும், டிட்கோ நிறுவனமும் 5-10-1999 அன்று உடன்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப—பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. நுணுக்கமானவகையில் சந்தை வாய்ப்பு ஆய்வு ஒன்றினை நடத்தி, முடித்தவுடன் இத்திட்டத்தில் முதலீடு செய்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் இந்த ஆய்வு, 2000 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்க இயலும். மேலும் பல்வேறு பாலிமர் செய்முறைப் பிரிவுகளின் மூலம் 10,000 நபர்கள் மறைமுக வேலைவாய்ப்பு பெற இயலும். இப்பிரிவு, 2003-2004 ஆம் ஆண்டுவாக்கில் செயல்படக்கூடியவகையில் திட்டமிடப்பட்டு வருகிறது.

(xiii) பைவோல்டைன் பட்டு (சீனப் பட்டு) உற்பத்தி செய்வதற்காக, ஒவ்வொன்றும் 70 கோடி ரூபாய் திட்டச் செலவில் இரண்டு ஒருங்கிணைந்த பட்டுப்புழு வளர்ப்பு வளாகங்களை வெவ்வேறு இடங்களில் அமைக்க திருவாளர்கள் ஓரியண்டல் செரிடெக் லிமிடெட் (டாட்டா குரூப்) மற்றும் சென்னையைச் சார்ந்த நல்லி சில்க்ஸ் ஆகிய இரு நிறுவனங்கள் கூட்டுத் தொழில் முனைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. திருவாளர்கள் ஓரியண்டல் செரிடெக் நிறுவனம் தற்போது நாசிக்கில் உள்ள அவர்களது தொழிற்சாலையில் பைவோல்டைன் பட்டு (சீனப் பட்டு) தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதனால், தொழில் முனைவர் ஒப்பந்தம் இன்னமும் கையெழுத்திடப்படவில்லை. இத்திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது, 1000 நபர்களுக்கு நேரடியாகவும், 3000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.



2000 மே 8]

(xiv) நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை கூட்டுத் தொழில் முனைவராகக் கொண்டு ஈரோட்டில் 76.87 கோடி ரூபாய் திட்டச் செலவில் நவீன டெக்ஸ்டைல்ஸ் செய்முறைப் பிரிவு ஒன்றினை டிட்கோ நிறுவனம் இணைத் துறையில் அமைக்க முடிவெடுத்திருக்கிறது. இத்திட்டத்தில் டிட்கோ நிறுவனத்தின் பங்கு முதலீடு 3.35 கோடி ரூபாய் ஆகும்.

**II. தொழிற் பூங்காக்கள்:**

தனியாருடன் இணைந்து தொழில்களுக்குத் தேவைப்படும் நவீன வசதிகளைக் கொண்ட தொழிற் பூங்காக்களை உருவாக்குவதை டிட்கோ நிறுவனம் ஒரு கொள்கையாக ஏற்றுச் செயல்படுத்துகிறது. முக்கிய முதலீட்டாளர்களுக்கு உடனடியாக நிலம் ஒதுக்கீடு கிடைப்பதை இது உறுதி செய்யும். மேலும், ஓரிடத்தில் ஒரே மாதிரியான தொழில்கள் அமைக்கப்படுவதால், குறைவான செலவில் மதிப்பு கூட்டப்பட்ட வசதிகளை அளிக்க இயலும். டிட்கோ நிறுவனம் ஏற்றுச் செயல்படுத்தும் பல்வகைப் பூங்காக்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

(1) டிட்கோ நிறுவனத்தின் இணைத் துறை நிறுவனமான மகிந்திரா தொழிற் பூங்கா நிறுவனம், சென்னையை அடுத்து ஆட்டோ துணைப் பாகங்கள் பூங்கா ஒன்றினை 215 கோடி ரூபாய் திட்டச் செலவில் அமைத்து வருகிறது. இந்நிறுவனம், 1000 ஏக்கர் நிலங்களை வாங்கியுள்ளது. எஞ்சிய 350 ஏக்கர் நிலம், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பூங்காவிற்கான அடிப்படை அமைப்புத் திட்டத்தை சிங்கப்பூரைச் சேர்ந்த ஜே.டி.சி. நிறுவனம் வழங்கியுள்ளது. நிதியமைப்பினை முடிவு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் டிட்கோ நிறுவனத்தின் பங்குத் தொகை 2.2 கோடி ரூபாயாகும். இப்பூங்கா இந்த ஆண்[illegible] தயாராகிவிடும். இத்திட்டத்தினால், சுமார் 3500 நபர்களுக்கு நேரடியாகவும், சுமார் 10,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) 600 கோடி ரூபாய் உத்தேச முதலீட்டுடன் எண்ணூரில் அமைக்கப்படவுள்ள பெட்ரோலிய இரசாயனப் பூங்கா திட்டத்திற்கு தனியார் முதலீட்டாளர்களைக் கண்டறிந்து, மதிப்பீடு செய்து தேர்ந்தெடுக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நில எடுப்புப் பணி நடந்தேறி வருகிறது. உப்புத் துறை வசம் உள்ள 1513 ஏக்கர் உப்பு நிலங்களை டிட்கோ நிறுவனம் தனது உடைமையில் எ[illegible]க்

[2000 மே 8

கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விரைவான ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதி வேண்டி டிட்கோ நிறுவனம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பித்துள்ளது. கடல் சார்ந்த சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆய்வினை விரிவாக மேற்கொள்ள, கொச்சியிலுள்ள தேசிய கடலியல் ஆராய்ச்சி நிலையம் நியமிக்கப்பட்டுள்ளது. பி.ஓ.எல். மற்றும் இரசாயனத் தோணித்துறைகளை ஒதுக்கித் தருவது குறித்து மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது. இப்பூங்காவிற்கான மனையிடப் பணிகளை ஜூலை 2000-த்தில் தொடங்கும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா 2003 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கப்பட்டுவிடும்.

(3) சென்னை, தரமணியில் 340 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, மென்பொருள் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நவீனத் தொழில்நுட்பக் கூறுகளைக்கொண்டதாக அமையும். இப்பூங்காவில் இட விற்பனை செய்யும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. இதற்கு மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து நல் ஆதரவு கிட்டி வருகிறது; திட்டப் பணிகள் அனைத்தும் 2000 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதிக்குள் நிறைவுறும்.

(4) தென்தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளையும், சேவை வசதிகளையும் தொடங்க முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில், 800 கோடி ரூபாய் திட்டச் செலவில் உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் இணைத் துறையில் அமைத்து வருகிறது. இப்பூங்காவிற்குள் அமையவிருக்கின்ற புதிய தொழிற்சாலைகளில் சுமார் 8000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1988 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவுற்றுள்ளன. நாளொன்றுக்கு 677 மில்லியன் காலன் தண்ணீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆய்வினை சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிலையம் (Indian Institute of Technology) தயாரித்தளித்துள்ளது. இப்பூங்காவை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலமாக மைய அரசின் வர்த்தக அமைச்சகம் அறிவித்துள்ளது. அண்மையில், மைய அரசு அறிவித்துள்ள புதிய ஏற்றுமதி—இறக்குமதிக் கொள்கையில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஒன்றாக இப்பூங்கா சேர்க்கப்பட்டுள்ளது.



2000 மே 8]

(5) திருவாளர்கள் நசீம் அஹமது அசோசியேட்ஸ் என்ற நிறுவனத்தை சக தொழில் முனைவராகக் கொண்டு மலர்ப் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் கூட்டுத் துறையில் அமைத்து வருகிறது. ஓசூர் வட்டத்தில் 220 ஏக்கர் நிலம் வாங்கப்படுகிறது. இந்திய சிறு தொழில் வங்கி 9.95 கோடி ரூபாயினை குறித்த காலக் கடனாக வழங்க ஒப்பளித்துள்ளது. மைய அரசு மானியமாக 3.5 கோடி ரூபாயைப் பெறுவதற்கு மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு நிதியுதவி நிறுவனத்திடமிருந்து 20% பங்கு மூலதனத் தொகை கோரப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கான பணிகள் இந்த ஆண்டில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6) இந்திய அரசின் உயிரியல் நுட்பத் துறை, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் 6.90 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மகளிர் தொழில் முனைவோருக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. மகளிர் தொழில் முனைவோருக்கு, தொழிற்கூடங்கள் அல்லது மேம்படுத்தப்பட்ட மனைகள் உள்ளிட்டு அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தருவது இதன் கோட்பாடாகும். மைய அரசு தனது பங்காக 4 கோடி ரூபாய் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. மாநில அரசு 0.70 கோடி ரூபாய் மதிப்புடைய 20 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து தருகிறது. எஞ்சியுள்ள 2.20 கோடி ரூபாய் தொகை வங்கிகளிடமிருந்தும், நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் குறித்த காலக் கடனாகப் பெறப்படும். இப்பூங்கா, ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கான அமைப்புத் திட்ட வரைபடமும், விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆய்வை மேற்கொள்ளவும், நிதியமைப்பை முடிவு செய்யவும் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(7) தமிழ்நாட்டில் பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இரப்பர் விளைகிறது. ஏற்றுமதி நோக்கத்துடன் இரப்பர் மற்றும் இரப்பர் மரம் சார்ந்த உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் கிராமத்தில் 14.15 கோடி ரூபாய் செலவில் இரப்பர் தொழிற் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைக்கிறது. இதற்காக 135 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த அரசு நிர்வாக அனுமதி

அளித்துள்ளது. முதற்கட்டமாக 100 ஏக்கர் நிலத்தில் இப்பூங்கா செயல்படுத்தப்படும். இதில், கழிவு, சுத்திகரிப்பு உட்பட அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும். இப்பகுதியில் சுமார் 50 தொழிற்சாலைகள் அமையக்கூடும். அருகில் உள்ள துணை மின் நிலையம் மூலம் 20 எம்.வி.ஏ. மின்சாரம் அளிக்க தமிழ்நாடு மின் வாரியம் சம்மதித்துள்ளது. சுத்திகரிப்பாலையுடன் கூடிய தண்ணீர் வழங்கு திட்டம் ஒன்றினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. இப்பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை இறுதி செய்து, உகந்த ஒரு கூட்டுத் தொழில் முனைவரைக் கண்டறிய டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**மின் திட்டங்கள்:**

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரத்தினால் மின்சாரத் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு தனியார் துறை முதலீட்டினை மின் உற்பத்தித் திட்டத்தில் ஈர்க்க டிட்கோ நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. டிட்கோ நிறுவனம் மேம்படுத்தி வரும் சில மின் திட்டங்கள் பின்வருமாறு:

(i) எண்ணூரில் அமைக்கப்படுகின்ற 6500 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவு கொண்ட திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டத்தின் திட்ட மேம்பாட்டாளர்கள், எல்.என்.ஜி. சேமிப்பு முனையம் அமைப்பதற்கான ஒப்பந்தக்காரர்களை முடிவு செய்யும் பணியிலும், எல்.என்.ஜி. வாங்கி, விற்பதற்கான ஒப்பந்தங்களை முடிவு செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கு எல்.என்.ஜி. தோணித்துறை ஒன்றினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக மைய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வாங்கிக்கொள்வது தொடர்பாக தமிழ்நாடு மின் வாரியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான பணம் வழங்கீடு ஆதரவு ஏற்பாட்டிற்கு (payment support mechanism) உகந்த ஒரு வழிவகை காண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இறக்குமதி வரிச் சலுகைகள் பெறுவதற்காக, இத்திட்டத்தைப் பெரு மின் உற்பத்தித் திட்டமாக அறிவிக்குமாறு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நிதியமைப்பு முடிவுகளை எய்துவதற்கு 2000ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு 2001ஆம் ஆண்டு



ஜனவரித் திங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். 2003 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் செயல்படத் தொடங்கும்வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், 500 நபர்களுக்கு நேரடியாகவும் 2000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும்.

(ii) 4000 கோடி ரூபாய் திட்டமான ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2001 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கி 2003 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 4060 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி 2000 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறைவுறும்.

(iii) சென்னையை அடுத்த பெருங்குடியில் நகராட்சி திடக்கழிவு அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்த திருவாளர்கள் இ.டி.எல். (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை டிட்கோ நிறுவனம் தெரிவு செய்துள்ளது. நாளொன்றுக்கு 700 முதல் 800 டன் குப்பையைப் பயன்படுத்தி 14.85 மெகாவாட் மின்சாரம் ஏற்றுமதி செய்யக்கூடிய இத்திட்டம், கட்டுதல்—சொந்தமாக்குதல்—இயக்குதல் என்ற நடைமுறையில் அமைக்கப்படவுள்ளது. இந்த நடைமுறையை, மைய அரசின் மரபு சாரா எரிசக்தித் துறை வெகுவாகப் பாராட்டியுள்ளது. இத்திட்டத்திற்குத் திடக்கழிவு பெறுவது தொடர்பாக சென்னை மாநகராட்சியுடனும், நிலக் குத்தகை பெறுவது தொடர்பாக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று வாரியத்துடனும், மின்சாரம் வாங்கிக் கொள்வது தொடர்பாக தமிழ்நாடு மின் வாரியத்துடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள திட்ட மேம்பாட்டாளர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார்கள்.

**இதர உட்கட்டமைப்பு திட்டங்கள்:**

(i) மாநிலத்தில் நெடுஞ்சாலைகள், பாலங்கள், புறவழிச் சாலைகளை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, உட்கட்டமைப்புக் குத்தகை மற்றும் நிதிப்பணிகள் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைத்துள்ளது. சுங்க வசூலின் அடிப்படையில், எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. கடலோரப் பாதுகாப்புத் திட்டச் செலவு உட்பட இத்திட்டத்திற்கு 115 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டு வருகின்றன. கிழக்குக் கடலோரச் சாலைத்

[2000 மே 8

திட்டத்தையும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் செயற்படுத்தி வருகிறது.

(ii) மைய அரசின் புதிய கொள்கையின் அடிப்படையில் சென்னையை அடுத்து, இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் ஒன்றினை அமைக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. இதற்கான தொழில்நுட்ப—பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள், முதற்கட்ட ஆய்வினை முடித்துள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த, தேவையான அனுமதிகளை வழங்குமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, சென்னை, நந்தம்பாக்கத்தில் கண்காட்சி மையம் ஒன்றினை அமைக்க டிட்கோ நிறுவனம் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அடிக்கல் 30-1-2000 அன்று நாட்டப்பட்டது. இவ்வரசு டிட்கோ நிறுவனம் மூலமாக 20 ஏக்கருக்கும் கூடுதலான மேம்படுத்தப்பட்ட நிலத்தை அளிக்கும். மைய அரசு, இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் மூலமாக கண்காட்சி வளாகத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யும். இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும், டிட்கோ நிறுவனமும் இணைந்து உருவாக்கும் ஒரு கூட்டு நிறுவனம், இந்தக் கண்காட்சி வளாகத்தைக் கட்டி மேலாண்மை செய்யும். இந்தத் திட்டத்தின்படி, 20,000 சதுர மீட்டர் பரப்பளவுடன் கூடிய கட்டடம் அமையும். முதற்கட்டமாக, 5000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடம் கட்டப்படும். தோல் கண்காட்சிகள் உள்ளிட்ட கிரானைட் கைவினைப் பொருட்கள், துணிமணிகள், வீட்டு உபயோகத் துணிகள், ஆட்டோ துணைப் பாகங்கள் போன்ற இதர வர்த்தகக் கண்காட்சிகளையும், நுகர்வோர்க்குப் பயன்தரும் இதர கண்காட்சிகளையும் இங்கு நடத்தலாம்.

(iv) தமிழ்நாட்டில் விளையும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் மிக முக்கியமான 10 வகைகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தி, உகந்த ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்காக வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகாரக் குழுமத்துடனும், நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த ஏ.டி.ஓ.டி.எல்.ஓ. நிறுவனத்துடனும் ஒரு ஒப்பந்தத்தை டிட்கோ நிறுவனம் 2-11-1999 அன்று செய்து கொண்டுள்ளது. இந்த ஆய்வுக்காக அரசு, டிட்கோ வாயிலாக ரூ. 30 லட்சம் அளிக்கின்றது. இந்த ஆய்வினால், பழங்களும், காய்கறிகளும் வீணாவது குறைக்கப்பட்டு, அவற்றுக்கு நல்ல விலை கிடைக்க இயலும். இதனால் இவற்றை



2000 மே 8]

விளைவிப்பவர்களுக்கு நல்ல பயன் கிடைக்கும். இந்த ஆய்வு 18 மாதங்களில் முடிக்கப்பட்டுவிடும். முதற்கட்ட ஆய்வு விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியுதவிப் பணிகள்:**

சில குறிப்பிட்ட துறைகளில் முதலீட்டாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதில் டிட்கோ நிறுவனம் முக்கிய பங்காற்றத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக, இந்நிறுவனம் இரு நிதித் தொகுப்புகளைத் தொடங்கியுள்ளது.

**(i) தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிதி அமைப்பு:**

உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி உதவி நிறுவனத்துடனும், இந்திய சிறு தொழில் வங்கியுடனும் இணைந்து, தொடக்கத் தொழில் முதலீட்டாளர்களுக்குத் தேவைப்படும் மூலதனத்தை அளிக்க 25 கோடி ரூபாயில் ஒரு நிதித் தொகுப்பினை டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. மென்பொருள், மல்டி மீடியா மற்றும் இதர தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் இந்நிதித் தொகுப்பின் முக்கிய இலக்காகும். இந்நிதியமைப்பின்கீழ் 6 பிரிவுகளுக்கு ஏற்கெனவே நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**(ii) இந்தியா ஆட்டோ துணைப் பொருட்கள் நிதி அமைப்பு:**

ஆட்டோ துணைப் பொருட்கள தொழில்களின் நிதித் தேவைக்காக, உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதியுதவி நிறுவனம், மகேந்திரா குரூப் நிறுவனங்கள், இதர மூன்று நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இந்த நிதியமைப்பை டிட்கோ நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இந்நிதியமைப்பின் நிதித் தொகுப்பு 22.10 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இத்தொகை 30 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்கக்கூடும்.

**இதர செயல்பாடுகள்:**

1. இரயில்வே மற்றும் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அரசுக்குத் தேவைப்பட்ட 695.56 கோடி ரூபாயை டிட்கோ நிறுவனம் பிணைமுறி வெளியிட்டு, ஈட்டித் தந்துள்ளது.

2. முதலீடுகள் மூலம் அதிக வருவாய் ஈட்டி, போதிய நிதியைக் கையிருப்பில் வைத்து, புதிய தொழில் திட்டங்களில் முதலீடு செய்யும் நோக்கத்துடன், ஏற்கெனவே கூட்டுத் தொழில் முயற்சிகளில் செய்யப்பட்ட முதலீடுகளை உரிய நேரத்தில் திரும்பப் பெறுவதற்கான புதிய வழிமுறைகளை டிட்கோ நிறுவனம் வகுத்து வருகிறது.

## தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம்:

## (சிப்காட்)

இம்மாநிலத்தில் நடுத்தர மற்றும் பெரும் தொழில்களை முன்னேற்றும் பணி 1971-ம் ஆண்டில் நிறுவப்பட்ட 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மாநில அரசு ஆதரவுடன் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது:—

1. தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்/நகரியங்கள் ஆகியவற்றை உருவாக்கிப் பராமரித்தல் மற்றும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தல்.
2. தொழில் திட்டங்களுக்கு குறித்த காலக் கடன் வழங்கல்.
3. தொழில் முனைவோர் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடன் (LEASING) மற்றும் குறுகிய காலக் கடன் வழங்குதல்.
4. தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி வசூல் தள்ளி வைப்பு/ தள்ளுபடித் திட்டத்தின்கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.
5. குறிப்பிடப்பட்ட பகுதி மற்றும் குறிப்பிடப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கான மாநில மூலதன மானியம் மற்றும் மின் உற்பத்திச் சாதனங்களுக்கான கூடுதல் மானியம் மற்றும் மகளிருக்கான வேலைவாய்ப்பு அளித்தல்.

### II. வளாகங்களின் வளர்ச்சி

### (அ) தற்போதுள்ள வளாகங்கள்

சிப்காட் நிறுவனம், இராணிபேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. இந்த



வளாகங்களை விரிவுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

(1) 668.61 ஏக்கர் நிலப்பரப்பில் கும்மிடிப்பூண்டி இரண்டாவது திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதில் 224 ஏக்கர் நிலம் ஏற்றுமதி வளர்ச்சிப் பூங்காவுக்கென தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் கடலூர் இரண்டாவது திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய்த் துறை சுமார் 153.44 ஏக்கர் நிலத்தை சிப்காட் நிறுவனத்திடம் ஏற்கெனவே ஒப்படைத்துள்ளது. விரைவில் இரண்டு பெரிய தொழில் நிறுவனங்களுக்கு கணிசமான அளவில் நிலத்தை ஒதுக்கீடு செய்ய சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்துடன் 362 ஏக்கர் பரப்பில் கடலூர் மூன்றாவது திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தப்படும் பணி நடைபெற்று வருகிறது.

(3) ஓசூர், இரண்டாவது திட்டத்தை விரிவாக்குவதற்காக 125.01 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 54.14 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்திற்கான உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஓசூர் இரண்டாம் கட்டத்தின் இரண்டாவது விரிவாக்கத்திற்கு மேலும் 212 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

(4) சுமார் 798 ஏக்கரில் இராணிப்பேட்டையில் மூன்றாவது திட்டம் நிறைவேற்றப்படுகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

(5) சுமார் 1616 ஏக்கர் கூடுதல் நிலப்பரப்பில் தூத்துக்குடியில் இரண்டாவது திட்டம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### (ஆ) புதிய பூங்காக்கள்/ நகரியங்கள்

மேலே குறிப்பிட்டுள்ள தொழில் வளாகங்களைத்தவிர, சிப்காட் நிறுவனம் கீழ்க்கண்ட புதிய பூங்காக்களை அமைத்து வருகிறது. இதன் தொடர்பான பணிகள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

**(1) செய்யாறு தொழில் பூங்கா**

இப்பூங்கா 1,350 ஏக்கரில் அமைக்கப்படவுள்ளது. முதல் கட்டமாக 600 ஏக்கரில் ரூ.17.80 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போது நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(2) இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்கா**

இப்பூங்கா திருப்பெரும்புதூர் வட்டத்தில் 1843.68 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இதுவரை 38 தொழில்முனைவோர்களுக்கு 764.12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(3) திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா**

இப்பூங்கா திருப்பெரும்புதூர் வட்டத்தில் சுமார் 2169 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணிகளும், மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதுவரை 9 தொழில் நிறுவனங்களுக்கு 200.37 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) நெமிலி தொழில் துணை நகரியம்**

நெமிலி தொழில் துணை நகரியம் அமைக்க 2157 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைந்துள்ள தொழிற் பூங்காக்களில் நிறுவப்பட்டுவரும் தொழிற்சாலைகளின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்யும்வகையில் இத்தொழில் துணை நகரியம் அமையும். தற்பொழுது நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**(5) தகவல் தொழில் நுட்பப் பூங்கா, சிறுசேரி**

செங்கல்பட்டு வட்டம், பழைய மகாபலிபுரம் சாலையில் சிறுசேரியில் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனம் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்து வருகிறது. நில மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிப்காட் நிறுவனம் 1000 ஏக்கர் மொத்த நிலபரப்பில் இப்பூங்காவை விரிவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



2000 மே 8]

**(6) ஏற்றுமதி வளர்ச்சி தொழில் பூங்கா**

கும்மிடிப்பூண்டியில் 224 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பூங்கா நிறுவப்பட்டு வருகிறது. மேம்பாட்டுப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. மேம்படுத்தப்பட்ட தொழிற் பூங்கா நிலங்களைத் தொழில் முனைவோருக்கு விற்பனை செய்ய சிப்காட் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**III. திட்ட நிதியுதவி**

1999—2000 ஆண்டில் ரூ.28.30 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ரூ.12 கோடி வரை மதிப்புள்ள திட்டங்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) மற்றும் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) வரிமுறை கடனளி திட்டத்தின் (LC) கீழ் நிதியுதவி செய்யப்படுகிறது. ரூ.16 கோடி வரை கடன் தேவைப்படும் திட்டங்களுக்கு சிப்காட் தனது நிதியிலிருந்தே நிதியுதவி செய்கிறது. சிப்காட்டின் இந்த எல்லா நடவடிக்கைகளின் காரணமாக இந்நிறுவனம் நிறுவப்பட்ட நாளிலிருந்து இதுவரை சுமார் 1,58,153 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

பல்திறப்படுத்தல் திட்டத்தின்கீழ் சிப்காட் நிறுவனம், இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடனுதவி, குறுகிய காலத் தவணைக் கடனுதவி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடனுதவித் திட்டத்தின்கீழ் இயந்திரம் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கு சிப்காட் நிறுவனம் சுலப குத்தகைக் கடனுதவி வழங்குகிறது. ஏற்கெனவே இலாபகரமாக இயங்கும் தொழிற்சாலைகள் தங்களுடைய நடவடிக்கைகளை விரிவுப்படுத்தவோ, நவீனப்படுத்தவோ அல்லது பல்திறப்படுத்தவோ விரும்பினால் அதற்கு இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு 100 விழுக்காடு நிதியுதவி, அதாவது குறைந்தபட்சம் ரூ.5 இலட்சமும், அதிகபட்சமாக ரூ.2.50 கோடியும் ஒரு தொழிற்சாலை பெற முடியும். பெயர்பெற்ற விநியோகஸ்தர்கள்/உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கு மட்டுமே இயந்திரத்தின் மீதான குத்தகைக் கடனுதவி வழங்கப்படும்.

[2000 மே 8

## சிப்காட்–டாசிட் பிரிவு

சென்ற ஆண்டில் அரசு அறிவித்தப்படி, சிப்காட் நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) இணைக்கப்பட்டுவிட்டது. மைய அரசு அளவில் செய்யப்படவேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள்மட்டும் நிலுவையில் உள்ளன. டாசிட் நிறுவனத்தின் பின்வரும் திட்டங்களை சிப்காட் நிறுவனம் எடுத்துக்கொண்டுள்ளது;

**(அ) தொழில் வளாகங்கள்**

**(i) பெருந்துறை வளர்ச்சி மையம்**

சுமார் 2800 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுவரும், இந்த மையத்தின் முதல்கட்ட மேம்பாட்டுப் பணிகள் (1,300 ஏக்கர்) முடிவடைந்துள்ளன. நெசவுத் தொழிற்சாலைகளை ஈர்க்கும்வகையில் ஒரு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ii) கங்கைகொண்டான் வளர்ச்சி மையம்**

தேவையான எண்ணிக்கையில் தொழில்முனைவோர் ஆர்வம் காட்டாததால் இங்கு மேம்பாட்டுப் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோரை ஊக்குவிக்க இந்த ஆண்டில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்கள் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்து மேம்பாட்டு பணிகள் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

**(iii) ஒரகடம் வளர்ச்சி மையம்/தொழில் வளாகம்**

சுமார் 2000 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. இந்த மையத்திற்கான திட்ட தயாரிப்புப் பணி நடந்து வருகிறது. மைய அரசும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, இதற்கென முதல் தவணையாக ரூ.50 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. மேலும் சென்னை ஏற்றுமதி அபிவிருத்திப் பகுதியின் இரண்டாம் கட்டத்தை ஒரகடம் வளாகத்தில் அமைக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.



2000 மே 8]

**(iv) நிலக்கோட்டை**

இத்திட்டத்தின் முதல்கட்ட மேம்பாட்டுப் பணி முடிவடைந்துவிட்டது. சிப்காட் நிறுவனம் நில விற்பனை முயற்சியை மேற்கொண்டுள்ளது.

**(v) பர்கூர்**

சுமார் 1269 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மிகக் குறைந்த தொழில்முனைவோர்களே பங்கேற்க முன்வந்ததன் காரணமாக மேம்பாட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நில விற்பனைக்குத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(vi) கடலூர்**

கடலூருக்குத் தெற்கில் ஒரு தொழில் வளாகம் அமைப்பதற்காக சுமார் 1224 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

**(ஆ) துறைமுகங்கள்**

**(i) கடலூர்**

இந்தப் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தாரர் தொடர்ந்து ஆர்வம் காட்டாத நிலையில் சிப்காட் நிறுவனம் ஒரு புதிய வருவாய்த்திறனை கணக்கிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன்அடிப்படையில் சிப்காட் நிறுவனம் கடலோர வசதிகளைமட்டும் அமைப்பதற்கான ஒப்பந்தம் அடங்கிய ஒரு புதிய திட்டத்தை உருவாக்கும். கடற்கரைப் புறப்பகுதி வசதிகள் அமைக்கும் திட்டத்தை அரசு மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் சிப்காட் நிறுவனம் செயல்படுத்தும்.

**(ii) குளச்சல்**

மலேசிய அரசு உதவியுடன் கன்டெய்னர்கள் போக்குவரத்துக்காக இது ஒரு மையத் துறைமுகமாக மேம்படுத்தப்படவுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கையை மலேசிய அரசு தயாரித்தவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) வணிகம் மற்றும் நிதி மையம்**

வர்த்தகம் மற்றும் வணிகர்களின் நீண்டகாலத் தேவையை நிறைவு செய்யும்நோக்கில் ஒரு வணிகம் மற்றும் நிதி மையத்தை சைதாப்பேட்டையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட ஆலோசகர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். அதனை ஆய்வு செய்தபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஈ) மணலிப் பகுதியில் சாலை மேம்பாடுகள்**

மணலி—மாத்தூர் சாலை அமைப்புப் பணியை வெற்றிகரமாக முடித்தவுடன், சிப்காட் நிறுவனம், சிடெக்ஸில் இருந்து தண்டையார்பேட்டை/கொருக்குபேட்டை சாலை வரையிலான சாலை அமைப்புப்பணியை மணலி தொழிற்சாலைகள் சங்கத்தின் பங்கேற்புடன் மேற்கொள்ளும் வாய்ப்பு குறித்து பரிசீலித்து வருகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையானதாகத் திகழும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், நிலம், கட்டடம், தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் போன்ற அசையாச் சொத்துக்களை உருவாக்குவதற்காக நீண்ட காலக் கடன் மற்றும் நடுத்தர காலக் கடன்களைப் புதிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்குதல் என்ற முக்கிய நோக்கத்துடன் 1949-ம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும். மேலும் இக்கடன் உதவிகள் ஏற்கெனவே உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழிற் பிரிவுகளை நவீனப்படுத்துதல், விரிவுப்படுத்துதல் மற்றும் பல்திறப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் வழங்கப்படும். இக்கழகம் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி, முன்னேற்றம் அடையச் செய்வதில் குறிப்பாக சிறு தொழிற் பிரிவுகளைத் தமிழ்நாட்டில் முன்னேற்றம் அடையச் செய்வதில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது.

இந்த ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனத்திடம் (SIPCOT) இருந்துவந்த தொழிற் பிரிவுகளுக்குக் கடன் வழங்கும் பணிகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் சிறுதொழில், நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்குக் கடன் வசதி வழங்குவதில் இக்கழகம் தனிப்பெரும் நிறுவனமாகச் செயல்படும்.





குறித்த காலக் கடன் என்ற அடிப்படையில் ரூ. 3 கோடி வரை ஒரு தனியான தொழிற் பிரிவிற்கு இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது. தவணை முறைக் கொள்முதல்/குத்தகைத் திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் முதல் ரூ. 2.50 கோடிவரை கடன் உதவி அளிக்கப்படுகிறது.

தொழில்முனைவோர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்வதற்காக தனது கிளை அலுவலகங்களுக்கு ரூ.30 இலட்சம் வரை கடன் வழங்கும் அதிகாரத்தை அளித்துள்ளது. மேலும் இக்கழகம் கடன் வழங்கப் பின்பற்றப்படும் வழிமுறைகளை நவீனப்படுத்தியுள்ளது. துணைப்பிணையம் வழங்குவதில் உள்ள விதிகளைத் தளர்த்தியும் வழிமுறைகளைச் சீர்ப்படுத்தியுமுள்ளது. தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1999 ஆகஸ்ட் மாதம் விழுப்புரத்தில் தனது புதிய கிளையை ஆரம்பித்துள்ளது.

சிறுதொழிற் பிரிவுகளுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டும், வெவ்வேறு தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளைக் கருதியும் இக்கழகம் சிறுதொழிற் பிரிவுகளுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதத்தை ஆண்டுக்கு 16 சதவீதமாகக் குறைத்துள்ளது.

மேலும் இக்கழகம் வாங்கிய கடனை முறையாகக் குறித்த தவணைகளில் திருப்பிச் செலுத்தி, வெவ்வேறு காலக் கட்டங்களில் தவணை தவறாத தொழில்முனைவோராக இருப்பவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு வட்டி குறைப்புச் சலுகை செய்து, சிறப்பு அட்டைகளை வழங்கி கௌரவிக்கிறது.

இவ்வாறு சரியான தவணைகளில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் தொழில்முனைவோருக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் முடிவுற்றபின் அளிக்கப்படும் வட்டிச் சலுகையை 1-4-1999 முதல் மாற்றி, ஒவ்வொரு நிதியாண்டிலும் எல்லாத் தவணைகளையும் தவறாமல் செலுத்துவோருக்கு அந்த ஆண்டு இறுதியில் 1 சதவீத வட்டி குறைப்புச் சலுகை வழங்கும் ஒரே சீரான முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கழகம் ஒற்றைச் சாளரமுறை, வாகனக் கடன், மருத்துவமனை, சிறு மருத்துவமனைகள் கட்டும் திட்டம், பதிவு பெற்ற மருத்துவர்கள் குறித்த திட்டம், மகளிர் தொழில்முனைவோருக்குச் சலுகை அடிப்படையிலான நிதியுதவி, சுலபத் தவணைமுறைக் கடன், தொழிலை நவீனப்படுத்தும்

திட்டம், அங்காடி நிதியுதவித் திட்டம் தொழில் மூலதனம் அளிக்க குறுகிய காலக் கடன் திட்டம் பங்கு மற்றும் முனைப்பு மூலதனத் திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதியுதவி அளிக்கிறது. இக்கழகம் பள்ளி மாணவர்களுக்கு கணினி அறிவைப் பெருக்கும் நோக்கத்தில் கணினி (Computer) வாங்க ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சொத்துக்களை அதிகப்படுத்தும் குறியீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை இக்கழகம், கடன் உதவி பெற்று சரியான தவணைகளில் திருப்பிச் செலுத்தும் தொழில்முனைவோர்களுக்கு விரைவான வழிகளில் நிதியுதவி அளிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வரைமுறை அளவை (உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்டவை) தொழில்முனைவோர் புதிய தளவாடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை அங்கீகாரம் பெற்ற தகுதியான விற்பனையாளரிடம் வாங்குவதற்கு முடிவு செய்யும் தருணத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இக்கழகம், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி வேகத்தைத் தொடரும்பொருட்டு 2000-2001-ம் ஆண்டிற்கான இலக்கைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது:-

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| அனுமதித்தல் | 270 |
| வழங்குதல் | 245 |
| வசூலித்தல் | 334 |

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

தமிழக அரசு கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு எழுது காகிதமும் தயாரிப்பதற்காக கரூர் மாவட்டம் புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியது. இந்தக் காகித ஆலை 1985 ஆம் ஆண்டில் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியது.

### விரிவாக்கத் திட்டம்

பத்து ஆண்டுகளுக்குள் இந்நிறுவனம் ஆண்டுக்கு 90,000 டன்கள் என்று இருந்த உற்பத்தி அளவை ஆண்டுக்கு 1,80,000 டன்கள் என்று



அதாவது இரண்டு மடங்காகப் பெருக்கும் திட்டம் ஒன்றை ரூபாய் 585 கோடி மூலதனச் செலவில் தொடங்கியது. இந்த நிறுவனம் 31-1-1996 இல் வெற்றிகரமாக, வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனம் தனது பங்குகளைப் பங்கு மார்க்கெட்டில் விற்பனைக்குக் கொண்டுவந்து விரிவாக்கத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட நிதியில் ஒரு பகுதியாக ரூபாய் 216 கோடியைத் திரட்டியது. இத்திட்டச் செலவுக்கான எஞ்சிய தொகை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தவணைக் கடன்கள் பெற்றும், நிறுவனத்தின் சொந்த நிதியைக்கொண்டும் ஈடு செய்யப்பட்டது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலரை நேரடி வெளிநாட்டு நாணயக் கடனாக வழங்கியது.

### செயல்பாடு மற்றும் நிதி நிலைமை

இந்நிறுவனம் 1998-99-ம் ஆண்டில் ரூபாய் 126.61 கோடி இலாபம் ஈட்டி 12 விழுக்காடு ஆதாயப்பங்கு வழங்கியுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் செயல்திறன் பயன்பாடு 97.82 விழுக்காடு; 1999-2000ஆம் ஆண்டில் இது 99.37 விழுக்காடு ஆகும்.

### ஏற்றுமதி

இந்நிறுவனம் 1994-95 முதல் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. 31-3-2000 வரை இந்நிறுவனம் 18,760 மெட்ரிக் டன் மரக்கூழ் உபயோகிக்காத அச்சு மற்றும் எழுதும் காகிதங்கள் ஏற்றுமதி செய்துள்ளது. நடப்பு ஆண்டில் இந்நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், சிரியா, நைஜீரியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளையும் சேர்த்துக்கொண்டுள்ளது. இந்நிறுவனம் விற்பனையைப் பெருக்கவும், இதனுடைய காப்பியர் மற்றும் கணினி எழுதுபொருள் காகிதங்களை ஸ்ரீலங்காவில் அறிமுகப்படுத்தவும் அண்மையில் கொழும்பில் வாடிக்கையாளர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டியது.

### மூலப் பொருட்களுக்கான கூடுதல் ஆதாரங்கள்

காகித உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப் பொருட்கள் (கரும்புச் சக்கை) அதிகமாகக் கிடைப்பதற்கு வழிசெய்யும் வகையில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, தொகுதி-2-ல் பல எரிபொருள் மின்சக்தி கொதிகலன் ஒன்றை இந்நிறுவனம் ரூ. 26 கோடி மூலதனச் செலவில் நிறுவியுள்ளது.

### வருங்காலத் திட்டங்களும் வாய்ப்புகளும்

இந்நிறுவனம் எகிப்து நாட்டின் கொய்னா செய்தித்தாள் காகித நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி 1999-ம் ஆண்டு பிப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் கொய்னா செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 22 தொழில்நுட்ப நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது. இந்நிறுவனத்திற்கும் கொய்னா செய்தித்தாள் காகித நிறுவனத்திற்குமிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்று 4-9-1999 ஆம் நாளன்று செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்நிறுவனம், செய்தித்தாள் ஆலை நிறுவி இயக்கி வைக்க கொய்னா செய்தித்தாள் நிறுவனத்திற்கு உதவும். இந்நிறுவனத்தில் முதல்பேப்பர் ஷீட்டிங் மெஷினின் செயல்திறனை மேம்படுத்தவும், தானியங்கி ஷீட்டிங் திறனை அதிகரிக்கவும் ரூ.40 கோடி மதிப்பீட்டில் ஆலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மின்சார உற்பத்தியில் 100 சதவீதம் தன்னிறைவு பெறுவதற்காக மேலும் ஒரு கொதிகலனும் 22 மெகாவாட் திறன்கொண்ட நான்காவது டர்போ (சுழற்சி) மின்உற்பத்தி சாதனமும் நிறுவப்படுகின்றன. இது இவ்வாண்டு அக்டோபர் மாதத்திற்குள் இயங்கத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செய்தித்தாள் தயாரிக்கும்போது கிடைக்கும் உபரி காகிதக் கூழைக் கெட்டிப்படுத்துவதற்கும் அதைப் பயன்படுத்தி தொடர்ந்து தடையின்றி அச்சு மற்றும் எழுதும் காகிதம் தயாரிப்பதற்கும் ரூ.11 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50 டன் உற்பத்தித்திறன் கொண்ட இயந்திரம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இது விரைவில் இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்டஸ் நிறுவனம் (டான்செம்)

ஆலங்குளத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-ல் ஏற்படுத்தப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தைப் பின்னர் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக் கொண்டது. அதனையடுத்து தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூரில் மேலுமொரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தி, 1979 ஆம் ஆண்டு சிமெண்ட உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும் மாயனூரில் 1984-ல் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய்



தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும், தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989-ல் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து (TACEL) எடுத்துக் கொண்டது.

### ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

உற்பத்தி செய்யும் முறையை மாற்றி, ஆலையை நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக அனைத்து இயந்திரத் தளவாடங்களையும் நிறுவி இயக்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான முழுத் தொழில்நுட்ப ஆலோசனைப் பணிகளுக்காக ரூ.1.53 கோடி கட்டணத்தில் திருவாளர்கள் ஹோல்டெக் கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை ஆலோசக நிறுவனமாக டான்செம் அமர்த்தியுள்ளது. ஹோல்டெக் நிறுவனம் ரூ.201 கோடி செலவிலான திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. டான்செம் நான்கு பெரிய சிமெண்ட் ஆலை இயந்திரங்களுக்கான டெண்டர்களை அறிவித்ததுடன் அவற்றிற்கான ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்கும் தேதியை மே 2000 கடைசிக்கு ஒத்திவைத்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவைத் தன்னுடைய நிதியிலிருந்து ஏற்க இயலாத நிலையில் அரசிடம் நிதியுதவி கோரப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

### புதிய முயற்சிகள்

2000-2001 ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான செலவுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் பெருங்குளத்திலிருந்து எரிவாயுவைப் பெறுவதற்காக டான்செம் நிறுவனம் இந்திய எரிவாயு குழுமத்திற்கு விண்ணப்பித்துள்ளது.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை நவீனமயமாக்கி சீரமைத்து செயல்படுத்துவதற்கு அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்), முறையாகவும், விஞ்ஞான ரீதியாகவும், தமிழ்நாட்டில் பெருமளவில் கிடைக்கும், கருப்பு, சாம்பல், வெள்ளை மற்றும் இதர பலவண்ணப் பாறைகளையும், குவார்ட்ஸ்

பெல்ட்ஸ்பார், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல், சிலீகாமணல் மற்றும் கிராபைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து வருகின்றது. 1999-2000 ஆம் ஆண்டில், 23,000 கனமீட்டர் கருப்பு மற்றும் பலவண்ணப் பாறைகளையும் 33,000 சதுரமீட்டர் கிரானைட் பொருட்களையும் 3060 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராபைட்டையும் 5,300 மெட்ரிக் டன் இதர கனிமப் பொருட்களையும் 1,30,000 மெட்ரிக் டன் உயர்வகைக் கனிமங்களையும் டாமின் உற்பத்தி செய்துள்ளது.

2. உலக அளவில் கிரானைட் விற்பனையில் தேக்கநிலை இருப்பினும் டாமின் 1999-2000 ஆம் ஆண்டில் சுமார் ரூ.66 கோடி என்ற விற்பனை அளவை எட்டியுள்ளது.

**புதிய திட்டங்கள்**

**(1) மாலிப்டினைட் திட்டம்**

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டினைட் கனிமத்தை, இந்திய அரசு நிறுவனமாக கனிம ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெட்டியெடுக்கும் முன்னோடி சுரங்கப்பணிக்காக, மைய அரசு ரூ.3.92 கோடி அனுமதித்துள்ளது. தமிழக அரசும் இந்திய புவியியல் நில அளவைத் துறையின் மூலம் வேலம்பட்டி கிராமத்தில் மாலிப்டின கனிம ஆராய்ச்சிக்காக ரூ.1.80 கோடி அளித்துள்ளது. இந்திய புவியியல் நில அளவை துறை 2000 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் ஆய்வுப் பணியை முடிக்கத் திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.1.12 கோடி செலவு செய்துள்ளது. சுரங்க முன்னோடிப் பணிகள் கனிம ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முடிவடையும். இந்த முன்னோடிப் பணிகளின் முடிவுகளையொட்டி மாலிப்டினம் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை தொடங்குவதற்கான திட்ட சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.

**(2) கூட்டுச் செயல் திட்டத்தில் கார்னெட் உற்பத்தி**

கார்னெட் மணல் தொழிற்சாலை ஒன்றை திருவாளர்கள் டிரான்ஸ்வோல்டு கார்னெட் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து கூட்டுச் செயல் திட்டத்தில் தொடங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்நிறுவனத்திடமிருந்து விரிவான திட்ட அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் மேல்நடவடிக்கை தொடரப்படும்.



**(3) கூட்டுச் செயல் திட்டத்தில் கிரானைட் பொருட்கள் உற்பத்தி**

உபயோகப்படுத்தாத குத்தகைப் பகுதிகளைப் பயன்படுத்தி கூட்டுச் செயல் திட்டத்தில் கிரானைட் பொருட்களை உற்பத்தி செய்ய டாமின் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அரசு அறிவுறுத்தியபடி, இணைத்துறைத் திட்டங்களுக்குக் கடைபிடிக்கும் நடைமுறையைப் பின்பற்றியும் இத்திட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்புள்ள தொழில் முனைவர்களின் கருத்தைக் கேட்டு அறிந்தும் கூட்டுச் செயல் திட்டத்திற்கான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளில் தகுந்த மாற்றம் செய்ய டாமின் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**(4) கூட்டுச் செயல் திட்டத்தில் குவார்ட்ஸ் உற்பத்தி**

குவார்ட்ஸ் தொழற்சாலையை திருவாளர்கள் செட்டிநாடு எம்.பி.எஃப் ஹை சிலிகா நிறுவனத்துடன் இணைந்து கூட்டுச் செயல் திட்டத்தில் தொடங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்நிறுவனத்திடமிருந்து விரிவான திட்ட அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் திட்டம் நிறைவேற்றப்படும்.

## தமிழ்நாடு கிராபைட் நிறுவனம்

பின்வரும் இரு நிறுவனங்கள் கிராபைட்டை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவும்பொருட்டு தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தை அணுகியுள்ளன.

**1. எக்ஸஸ் ராக்ஸ் இண்டியா பிரைவேட் லிமிடெட்**

இந்நிறுவனம், நாளொன்றுக்கு 200 டன்கள் கிராபைட் மூலப்பொருள்களை உபயோகித்து செழுமைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை சுமார் ரூ. 40 கோடி முதலீட்டில் நிறுவ விருப்பம் தெரிவித்துள்ளது. திட்டத்திற்கான செயற்குறிப்புடன், மூலப்பொருள் தேவையும் குறிப்பிட்டு அனுப்புமாறு நிறுவனம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

**2. புராஜக் காயன்கான் எஸ்டின் பி.எச்.டி. மலேசியா**

இந்நிறுவனம், சிவகங்கை மாவட்டத்தில் எக்ஸ்போலியேட்டட் கிராபைட் மற்றும் கேப்டிவ் பவர் புராஜெக்ட் தொழிற்சாலை ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளது. இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் எக்ஸ்போலியேட்டட் கிராபைட் பொருட்களை உற்பத்தி

[2000 மே 8

செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பனை செய்ய ஹைதராபாத்திலுள்ள ஏ.ஆர்.சி. இண்டர்நேஷனல் என்ற நிறுவனத்துடன் (பசும்பொன் கிராபைட் மற்றும் பவர் கம்பெனி என்ற புதிய பெயரில்) ஓர் ஒப்பந்தம் (MoU)செய்து கொண்டுள்ளது

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்)

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுத்து, அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1979-ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச் சூளை மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 1999-2000 ஆம் ஆண்டில் டான்மேக், கச்சா மேக்னசைட் உற்பத்தி குறியீட்டளவான 50,500 மெட்ரிக் டன்களுக்கெதிராக 50,713 மெட்ரிக் டன்கள் உற்பத்தியும், விற்பனை குறியீட்டளவான 67,500 மெட்ரிக் டன்களுக்கெதிராக 69,464 மெட்ரிக் டன்கள் விற்பனையும் செய்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனை குறியீட்டளவுகள் பின்வருமாறு:-

| இனம் | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|
| 1. கச்சா மேக்னசைட் | 55,000 | 67,500 |
| 2. முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 30,000 | 30,000 |
| 3. மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 10,000 | 10,000 |

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்)

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) வெடிமருந்து, வெடி ஊக்கி மற்றும் வெடித்திரி தயாரிக்கவும் அவற்றை விற்பனை செய்யவும் தோற்றுவிக்கப்பட்டது. இது டிட்கோவின் துணை நிறுவனமாகும்.



2000 மே 8]

இந்நிறுவனத்தின் தற்போதைய நிறுவுதிறன் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| என்.ஜி. வெடிமருந்து/கலவை வெடிமருந்து | - | 13,945 டன்கள் (ஆண்டுக்கு) |
| வெடி ஊக்கிகள் | - | 4.50 கோடி |
| வெடித்திரி | - | 1.50 கோடி மீட்டர்கள் |

## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் 1956-ஆம் ஆண்டு தனியார் துறையில் ரெயில் பெட்டிகள், மற்ற பிற இரும்பு கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் நலிவடைந்து மூடப்பட்டதும், அதில் பணிபுரிந்த சுமார் 1200 நபர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

இதன் நிகரமதிப்பு, முதலீட்டைவிடக் குறைந்துவிட்ட நிலையில், இதனை ஆய்வு செய்வதற்காக தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் மே திங்கள் 1992-ஆம் ஆண்டில் கேட்டுக்கொள்ளப்பட்டது. நிறுவனத்தின் மறு சீரமைப்புத் திட்டத்திற்குத் தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் சனவரி திங்கள் 1998 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தது. இந்த மறு சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமம் நிர்ணயித்த இலக்குகளுடன் ஒப்பிடும்போது, இந்நிறுவனமானது 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவே தனது தயாரிப்புகளை விற்பனை செய்துள்ளது. உற்பத்திச் செலவு மிகுதி காரணமாக மிகுந்த தேக்க நிலையுள்ள சந்தையில் இந்நிறுவனத்தால் போட்டியிட முடியவில்லை. சிறிது காலத்திற்கு தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுமத்தின் திட்டப்படி இந்நிறுவனம் செயல்படுவதைக் கண்காணித்து பின்னர் இந்நிறுவனத்தின் எதிர்காலத்தைப் பற்றி தீர்மானிக்கலாம் என ராகவன் குழு பரிந்துரை செய்துள்ளது. அதற்கேற்ப, அரசு பல்வேறு கோணங்களில் இதனைப் பரிசீலித்து சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் எதிர்காலத்திற்கான ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளும்.

[2000 மே 8

## தமிழ்நாடு உப்புக் கழகம்

தமிழ்நாடு உப்புக் கழகம் தமிழக அரசால் 1974 ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டு நிறுவப்பட்டது. தற்பொழுது அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.4 கோடி , இதுவரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3.17 கோடியாகும்.

2. தமிழ்நாடு உப்புக் கழகம் தொழிற்சாலைக்கு உகந்த உப்பை உற்பத்தி செய்வதோடு, ஊட்டச்சத்து கலந்த உப்புக்களான இரும்பு ஊட்டச் சத்து உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு, டை எதில் கார்போமைசின் மருந்துச் சத்து கலந்த நல உப்பு மற்றும் அயோடின் கலந்த 'அரசு' உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. இராமநாதபுரம் வாலிநோக்கத்தில் மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 4855 ஏக்கர் பரப்பளவில் 3210 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்தி செய்ய மேம்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தொழிற்சாலைக்கு உகந்த உப்பை உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளதாலும் காஸ்டிக் சோடா மற்றும் சோடா ஆஷ் உற்பத்தி செய்யும் குளோரின் ஆல்கலி தொழிற்சாலைகளில் இந்த உப்பின் தேவை அதிகரிப்பினாலும் வாலிநோக்கத்தில் 2000-2001ல், மேலும் 1240 ஏக்கர் பரப்பளவு மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 520 ஏக்கர் உப்புநீர்தேக்கங்களும் 720 ஏக்கர் உப்பு நீர் சிறுதேக்கங்களும் அடங்கும். மேலும கூடுதலாக 200 உப்பு பாத்திகள் புதியதாக அமைக்கப்படும் இம்மேம்பாட்டின் மூலம் ஆண்டுக்கு உப்பு உற்பத்தி 3 இலட்சம் டன்னாக உயரக்கூடும். 1999-2000-ஆம் ஆண்டின் உற்பத்திக் குறியீட்டு அளவான 1.6 இலட்சம் டன் உப்பு உற்பத்தி எய்தப்பட்டது.

3. மாவட்ட தலைமையிடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர், மத்திய அரசு உப்புத் துறை, யூனிசெப் நிறுவனம், மாநில அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்களின் ஒருங்கிணைப்பு வாயிலாக அயோடின் சத்துக் கலந்த உப்பை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும், இரும்பு/அயோடின் சத்துக்குறைவினால் ஏற்படும் நோய் பற்றியும் விழிப்புணர்வு முகாம் நடத்தி தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு அறிவுறுத்துவதில் தமிழ்நாடு உப்புக் கழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு உப்புக் கழகம் இதுவரை 16 மாவட்டங்களில் இத்தகைய விழிப்புணர்வு முகாம்களை நடத்தியுள்ளது. பிற மாவட்டங்களிலும் இத்தகைய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.



2000 மே 8]

4. தமிழக அரசு ஆணை நிலை எண் 217 (கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) நாள் 20-10-1998 இன்படி பொது விநியோகப் பங்கீட்டு முறைத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு பண்டக சாலைகளின் வழியாக அயோடின் கலந்த 'அரசு' உப்பு ஒரு கிலோ பாக்கெட்டு ரூ.2.50 விலையில் முதல் கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது. இந்த விநியோக திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டதால் அரசு ஆணை (நிலை) எண் 96, (கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), நாள் 28-4-1999 இன்படி இத்திட்டம் குரல்வளைச் சுரப்பி வீக்க நோய் பரவியுள்ள கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், கோயமுத்தூர் நீலகிரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

5. மேற்கூறிய 8 மாவட்டங்களுக்கு மாதாந்திர ஒதுக்கீட்டு அளவு 2250 டன்களாகும். ஆனால் சராசரியாக 600 டன்கள் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. எனவே, இந்நிறுவனம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அயோடின் கலந்த 'அரசு' உப்பு விற்பனையை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசின் அனுமதிக்காக அணுகியுள்ளது. இதனால் மாதாந்திர விற்பனை அளவு குறைந்தபட்சம் 2000 டன்களை எட்டக்கூடும்.

6. இந்நிறுவனம் கர்நாடக அரசின் பொது விநியோக திட்டத்தின்கீழ் அயோடின் கலந்த உப்பை விற்பனை செய்யத் தொடங்கியுள்ளது. ஆந்திர மாநில அரசின் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

7. தமிழ்நாடு உப்புக் கழகம், அயோடின் கலந்த 'அரசு' உப்பினை தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்யும் தனி விற்பனையாளர்களையும் நியமித்துள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

இந்நிறுவனத்தின் எதிர்காலத் திட்டமாக, ஆண்டொன்றிற்கு 36000 டன்கள் செம்மைப்படுத்தப்பட்ட தங்கு தடையின்றி உதிரும் அயோடின் உப்பு மற்றும் 3000 டன்கள் தூள் உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வாலிநோக்கத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. உதிரி அயோடின் உப்பு, மாசு நீக்கப்பட்டதாகவும் இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு உற்பத்திக்கு உபயோகப் படுத்தக்கூடியதாகவும் இருக்கும். இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ.6 கோடி ஆகும்.

[2000 மே 8

இந்நிறுவனம் தனது உற்பத்திப் பொருளைப் பல்திறப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருத்திற்கொண்டு ஆர்டிமியா, ஆர்டிமியா பயோமாஸ், சிஸ்ட் மற்றும் கடல் இரசாயன பொருளான புரோமின் தயாரிக்கும் திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்து வருகிறது. வெளிச்சந்தையின் நிலைமை மற்றும் பிற முன்னேற்றங்களைப் பொறுத்து தகுந்த திட்டங்கள் தீட்டப்படும்.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

**புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் முக்கிய செயல்பாடுகள்,**

*1.* கனிம நிர்வாகத்தைச் செயல்படுத்துதல்

*2.* கனிமங்களுக்காக ஆய்வுகள் மேற்கொண்டு மாநிலத்திலுள்ள வெவ்வேறு கனிம இருப்பிடங்களைக் கண்டறிதல்.

*3.* நீலகிரி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் நிலச்சரிவு தன்மையினைக் கண்டறியும் பொருட்டு புவியியல் தொழில் நுட்பமையங்களில் ஆய்வு செய்தல்.

**I. கனிமங்கள்-நிர்வாகம் மற்றும் முறைப்படுத்துதல்.**

தமிழ்நாடு அரசு, கனிம குத்தகை அனுமதி வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, பட்டா நிலங்களில் பெருங்கனிமங்களுக்கு குத்தகை அனுமதி வழங்கும் அதிகாரத்தை புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநருக்கு வழங்கியுள்ளது, புறம்போக்கு நிலங்களில் பெருங்கனிமங்களுக்குக் குத்தகை அனுமதியும் ஆய்வு மேற்கொள்ள அனுமதியும் மாநில அரசே வழங்கி வருகின்றது.

**II. கனிம ஆய்வு**

**I. சுண்ணாம்புக்கல் ஆய்வு**

மிக முக்கியத்துவம் வாய்ந்த தொழிலான சிமெண்டு உற்பத்தியில் சுண்ணாம்புக்கல் ஒரு முக்கிய மூலப்பொருள் ஆகும். இதைக்கருத்தில் கொண்டு இத்துறை சுண்ணாம்புக்கல் கிடைக்கும் பகுதிகள் அதன் அளவு மற்றும் தரம் குறித்து ஆய்வுகள் செய்து வருகின்றது. இதுவரை பெரம்பலூர் மாவட்டத்தில் 80 சதுர கிலோமீட்டர் பரப்பில் சுண்ணாம்புக்கல் இருக்கும் இடம் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 80 சதுர கிலோ மீட்டர் பரப்பு 500



2000 மே 8]

மீட்டர் இடைவெளிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 500 மீட்டர் இடைவெளிக்கும் ஒரு ஆழ்துளை என்ற வீதத்தில் 80 ஆழ்துளைகள் போட திட்டமிடப்பட்டுள்ளது.

1999-2000-ஆம் ஆண்டிற்கு 11 ஆழ்துளைகள் சராசரியாக 50 மீட்டர் ஆழம் வரை இட திட்டமிடப்பட்டு 11 ஆழ்துளைகள் மொத்தம் 702 மீட்டர் ஆழம் வரை போடப்பட்டுள்ளன. இந்த ஆழ்துளைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி படிவங்கள் இரசாயன பரிசோதனை செய்யப்பட்டபோது தரம் வாய்ந்த சுண்ணாம்புக்கல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 12 ஆழ்துளைகள் சராசரியாக 50 மீட்டர் ஆழம் வரை போடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆழ்துளையின் ஆழம், மற்றும் ஆழ்துளைப் போடத் தேவைப்படும் கால அளவு, அப்பகுதியிலுள்ள சுண்ணாம்புக்கல்லின் தன்மை மற்றும் அதன் இருப்பைப் பொறுத்து அமையும்.

**2) நீலகிரி மாவட்டத்தில் புவி-தொழில் நுட்ப ஆய்வுகள்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூரில் புவி தொழில்நுட்ப மையம் இயங்கி வருகின்றது. இந்த மையம், நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து வருகின்றது. இதுவரை 152 இடங்கள் ஆய்வுசெய்யப்பட்டு புவி தொழில்நுட்ப அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஓம் நகர், அன்பு அண்ணா காலனி, தங்காடு, எல்க்ஹில், சக்கலட்டி, கோதாரிமந்தோடா கிராமம் முதலிய பகுதிகளில் புவிதொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. இம்மையம் ஆண்டுக்கு சராசரியாக 150 இடங்களுக்கு புவித்தொழில் நுட்ப ஆய்வு அறிக்கைகள் வழங்க இயலும். 2000-2001 ஆம் ஆண்டுக்கு 150 இடங்களில் புவிதொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**3) கொடைக்கானல் மற்றும் பழனி மலைப்பகுதிகளில் புவி-தொழில்நுட்ப ஆய்வு**

2000-2001 ஆம் ஆண்டில் சுமார் 145 சதுரகிலோ மீட்டர் பரப்பிற்கு மண்டல வரைபடம் ஒன்று தயார் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நிலத்தின் தன்மையையொட்டி ஆய்வு 145 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. இன்னும் 3 ஆண்டு காலத்திற்குள் கொடைக்கானல் மலைப் பகுதிகள் முழுவதும் புவி-தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்டு முடிக்கப்பட்டுவிடும். எஞ்சிய பகுதிகளுக்கு 2001-2003-இல் மண்டல வரைபடம் தயார் செய்து முடிக்கப்பட்டுவிடும்.

**4) சேலம் மாவட்டம் சில பகுதிகளில் பிளாட்டினம் வகைக் கனிம இருப்பு ஆய்வு**

சேலம் மாவட்டத்தில் பிளாட்டினம் வகைக் கனிமங்கள் உள்ளதா என்று கண்டறிய கஞ்சமலை மற்றும் சரக்ஹில்ஸ் போன்ற மலைப்பகுதிகளிலுள்ள அல்ட்ரா பேசிக் மற்றும் அல்ட்ரா மேபிஃக் மாதிரி கற்களை சேகரித்து, முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5) தமிழ்நாட்டில் சில பகுதிகளில் கனிமக் கழிவுகளை ஆய்வு செய்தல்**

தமிழ்நாட்டில் உள்ள சுண்ணாம்புக்கல் மற்றும் மேக்னசைட் குவாரிகளில் உள்ள கனிமக் கழிவுகளில் அதிக வெப்பம் தாங்கக்கூடிய டின், டங்ஸ்டன், மாலிப்டினம் போன்ற கனிமங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**திட்டம் சாராப் பணிகள்**

திருவள்ளூர் மாவட்டத்தில் சில பகுதிகளில் கிடைக்கும் பென்டோனிடிக் வகைக் களிமண் மற்றும் சப்பென்டோனிடிக் வகைக் களிமண் தொழிற்சாலைகளின் பல்வேறு உபயோகங்களுக்கு உகந்தவை என்று கண்டறிந்ததன் விளைவாக இந்த வகைக் களிமண்கள் மிகுந்த பகுதிகளைக் கண்டு அறியும்பொருட்டு ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பரிசீலனையில் உள்ள புதிய திட்டங்கள்**

*(1)* தற்போதுள்ள நவீன தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப புவியியல் மற்றும் சுரங்கத் துறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த கட்டமாக புவியியல் தகவல் தொடர்பு முறையைத் தலைமையகத்தில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

*(2)* அனுமதி இல்லாமல் கனிமங்களை வெட்டியெடுப்பதையும் அனுமதி இல்லாமல் கனிமங்களை எடுத்துச் செல்வதையும் தடுத்து அதன் மூலம் அரசுக்கு வரும் வருவாயைக் கூட்டும் நோக்கத்துடன் 2000-2001 ஆம் ஆண்டில் மூன்று மண்டல பறக்கும் படைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*(3)* தமிழ்நாட்டில் புதிதாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரம் வாய்ந்த கிரானைட் கற்கள் உள்ள பகுதிகளைக் கண்டறிய 2000-2001 ஆம் ஆண்டில் கிரானைட் கற்கள் பெருமளவில் கிடைக்கும் 2 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**கனிமங்கள் மூலம் கிடைக்கும் வருவாய்**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, அரசின் வருவாயைப் பெருக்குவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசின் வருவாயை இத்துறை படிப்படியாகக் கூட்டியுள்ளது. இத்துறையின் மூலம் 1998-1999 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.110 கோடி வருமானம் கிடைத்தது. இவ்வருவாய், 1999-2000 ஆண்டில் ரூ.127 கோடியாக உயர்ந்துள்ளது.

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டில் உள்ள 36 சர்க்கரை ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் 16, பொதுத் துறையில் மூன்று மற்றும் தனியார் துறையில் 17 ஆலைகள் இயங்கி வருகின்றன.

2. சர்க்கரை உற்பத்தி சமீப காலங்களில் அதிகரித்துள்ளது. எனினும் வெளிச்சந்தையில் சர்க்கரை விற்பனை விலை வீழ்ச்சியினால் சர்க்கரைத் தொழில் கடுமையான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

3. பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் மிகுந்த நட்டத்தில் இயங்கி வருகின்றன. இதற்கான முக்கிய காரணம் கரும்பு கொள்முதல் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருந்த போதிலும் அதற்கேற்றாற் போல் சர்க்கரை விற்பனை விலை உயரவில்லை. செலவினத்திலும் எந்த மாறுதலும் இல்லை. கூட்டுறவுத் துறை ஆலைகளின் நட்டங்களை முடிவில் அரசே ஏற்கிறது. சர்க்கரை ஆலைகள் இயங்கும் சூழ்நிலை, சர்க்கரை விலை கட்டுப்பாடு, சர்க்கரை அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடு போன்றவற்றால் தனியார் துறை சர்க்கரை ஆலைகளும் நட்டத்தில் இயங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

## தகவல் தொழில் நுட்பம்

இந்திய நாட்டின் தகவல் தொழில் நுட்பத்தில் முக்கிய மாநிலமாக தமிழ்நாடு வேரூன்றி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான மென்பொருட்களின் மதிப்பு 1246 கோடி ரூபாயாகும். இது 1997-98 ஆம் ஆண்டின் ஏற்றுமதியைக்

காட்டிலும் 217% வளர்ச்சியாகும். 1999-2000 ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதியின் அளவு மிகவும் திருப்திகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர, 1997-98-ல் 153 ஆக இருந்த பதிவு செய்யப்பட்ட எஸ்.டி.பி.ஐ. பிரிவுகளின் எண்ணிக்கை, 1998-1999-ல் 232 ஆக அதிகரித்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை தமிழ்நாடு வழங்குகிறது. மிகச் சிறந்த அறிவியல் மற்றும் சமூக கட்டமைப்பையும் அனைத்திந்திய அளவில் தலைச் சிறந்த மனித ஆற்றலையும் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. இவை அனைத்தும் நியாயமான செலவில் கிடைக்கின்றன.

இவற்றுக்கு ஆதரவாக, பல்வேறு முக்கிய முயற்சிகளை தமிழக அரசு எடுத்துள்ளது.

1. 1997ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளியிடப்பட்ட தகவல் தொழில் நுட்பக் கொள்கை அறிவிக்கை, காலத்தின் பரிசோதனைகளை வென்று நிற்கிறது. இக்கொள்கையைச் செயல்படுத்துவதற்கான ஆணைகளும் வெளியிடப்பட்டுள்ளன.
2. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து 340 கோடி ரூபாய் திட்டச் செலவில், சென்னை தரமணியில் ஒரு மில்லியன் சதுர அடி நிலப்பரப்பில் உருவாக்கி வரும் டைடல் மென்பொருள் தொழிற் பூங்கா முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பூங்கா இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் செயல்படத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
3. தகவல் தொழில் நுட்ப அடிப்படையில் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க முன்வருவோர்க்கு உதவிட மாநில அளவில் உருவாக்கப்பட்டுள்ள ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund) ஏப்ரல் 1999-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இந்நிதித் தொகுப்பிலிருந்து 5 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.8 கோடியளவிற்கு ஊக்க மூலதன உதவியளிக்கப்பட்டுள்ளது.
4. பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள சிறுசேரியில் 1000 ஏக்கருக்கு கூடுதலான மேம்படுத்தப்பட்ட நிலத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்றினை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (State Industries Promotion Corporation of Tamil Nadu Limited)



ஏற்படுத்தி வருகிறது. தொழில் நிறுவனங்கள் இப்பூங்காவை பெரிதும் வரவேற்றுள்ளன. பல தகவல் தொழில்நுட்பத் தொழில் பிரிவுகளுக்கு இப்பூங்காவில் தொழில் வளாகத்தை அமைப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பழைய மகாபலிபுரம் சாலையில் உயர் தொழில்நுட்பம் கொண்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுகள் விரைவாக அமைக்கப்பட்டு வருவதனால், இத்தகைய தகவல் தொழில் நுட்பத் தொழில்களுக்கு கட்டமைப்பு வசதிகள் அளிக்கும் வகையில் இச்சாலையை நான்கு வழிப் பாதையாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் முன்னேறி வருகிறது.
6. அரசு அமைப்புக்குள் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளை ஏற்படுத்தித் தரவும், தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சி ஏற்படவும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) தொடர்ந்து முனைப்பாக செயல்பட்டு வருகிறது. தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு எல்காட் நிறுவனம் ஒற்றைச் சாளர வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது. எல்காட் நிறுவனத்தின் தகவல் தளமான www.elcot.com தமிழ்நாட்டின் தகவல் தொழில் நுட்பத்திற்கான அலுவல் சார்ந்த தகவல் தளமாக இயங்குகிறது.
7. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஓசூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் அமைவதை ஊக்குவிக்க எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது இதர அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு குத்தகை ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவும் எல்காட் நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. ஆர்வமுள்ள மேம்பாட்டாளர்களிடமிருந்து விருப்ப அறிவிப்புகளும் கோரப்பட்டுள்ளன.
8. எந்த ஒரு நவீனமான மாநிலத்திலும் உயர் அலைத் திறன் கொண்ட தகவல் தொடர்பு கட்டமைப்பு ஒன்று இருப்பது அத்தியாவசிய மான அடிப்படைத் தேவையாகும். இதனை உருவாக்க, அரசு எல்காட் நிறுவனம் மூலமாக இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த திருவாளர்கள் வேர்ல்ட்டெல் நிறுவனத்துடன் கூட்டு முயற்சித் திட்டம் ஒன்றினை அமைத்துள்ளது. வேர்ல்ட்டெல் நிறுவனம் தமிழகம் முழுவதிலும் 13,000 சமுதாய இணைய மையங்களை அமைத்திட உள்ளது. இந்த முயற்சியில், வேர்ல்ட்டெல் நிறுவனத்துடன் ரிலையன்ஸ் ஸ்ட்ராஜிக் இன்வெஸ்ட்மென்ட்ஸ்

பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமும் கூட்டுப் பங்குதாரராகச் சேர்ந்துள்ளது. இத்திட்டத்திற்காக கேபிள்கள் பதிக்கும் பணி மிக விரைவில் தொடங்கப்படவுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழ்நாடு விளங்கும், இதனால் தகவல் தொழில் நுட்பம் மற்றும் இதர தொழில்களில் தமிழகத்தில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள்.

9. தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயன்களைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் வகையில் தமிழ்நெட் 99' என்ற சர்வதேசக் கருத்தரங்கு ஒன்றினைத் தமிழக அரசு, 1999 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடத்தியது. இம்மாநாட்டுப் பரிந்துரைகளின்படி, தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ் எழுத்து வடிவக் குறியீடுகளுக்கான தரங்களை அரசு அறிவித்துள்ளது. இத்தரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருளுக்குச் சான்று வழங்கும் முறைகளையும் அரசு அறிவிக்கை செய்துள்ளது.

10. தமிழில் புதுமையான மென்பொருள் வளர்ச்சியடைவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியமைப்பு ஏற்கனவே 4 திட்டங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது.

11. உலகெங்கிலும் தமிழ்க் கல்வி பெற ஆர்வமுள்ள மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக, தமிழ் இணையப் பல்கலைக் கழகம் ஒன்றினை ஏற்படுத்தி அரசு அறிவிக்கை செய்துள்ளது. ஆங்கிலம் தவிர வேறெந்த மொழிகளிலும் இணையம்மூலம் கல்வியளிக்கும் இத்தகைய பயிற்சி அமைப்பு, உலகில் வேறெங்கிலுமில்லாத ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சிக்கலான தொழில் நுணுக்கப் பிரச்சனைகளையும், நிர்வாக காரியங்களையும் தனித்தனியே தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

12. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழின் பயன்பாடு குறித்து விரிவாக ஆய்வுசெய்வதற்கு ஏதுவாக 'தமிழ் இணைய ஆய்வு மையம்' என்ற இணையப் பயன்பாட்டு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம், புதுமையான தமிழ் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றிற்கு ஆதரவளித்துப் பரிந்துரைத்திருக்கிறது.



13. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கல்வி நிலையம் (டானிடெக்), 1998 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இக்கல்வி நிலையத்தில் முதல் அணி மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலைப் பட்டய படிப்பு முடித்துள்ளனர். இக்கல்வித் திட்டத்தை பல தொழில் நிறுவனங்கள் வரவேற்றுள்ளன. தற்போது இரண்டாம் அணி மாணவர்கள் பயிலுகின்றனர். பல்கலைக்கழக மானியங்கள் குழுவின் திருத்திய வழிகாட்டுதல், முறைகளின்படி `நிகர்நிலைப் பல்கலைக் கழகம்' (Deemed University) என்ற அங்கீகாரத்தைப் பெற டானிடெக் நிறுவனம் கருதியுள்ளது. மேலும், தகவல் தொழில் நுட்பத் தொழில் நிறுவனங்களுக்கு மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் முதுகலைக் கல்வி அமைப்பு முறையை மாற்றியமைத்து வருகிறது.

14. தொலைதூரத்திலிருந்து மருத்துவ சிகிச்சை முறையை அறியும் (Telemedicine) முன்னோடித் திட்டம் ஒன்று விரைவில் வாலாஜா பேட்டை வட்ட மருத்துவமனையில் செயல்படத் தொடங்கும். இம்மருத்துவமனையில் ஏற்படும் எல்லா விதமான மருத்துவ சிகிச்சை சிக்கல்களுக்கும் தீர்வுகாண, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனைகளை ISDN இணைப்பு மூலமாகப் பெற இயலும்.

15. மக்களுக்கு நல்ல ஆளுமையை அளிக்க தொடர்ந்து உறுதிபூண்டு வரும் இவ்வரசு, அதன் ஒரு பகுதியாக, பத்திரப்பதிவுகள், மோட்டார் வாகனங்கள், நிலப்பதிவுறுக்கள், வரைபடங்கள் மற்றும் விற்பனை வரி ஆகிய குறிப்பான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைக் கணினி மயமாக்கி வருகிறது. பத்திரப் பதிவுத் துறையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப் பட்டுள்ளது. 2000-2001ஆம் ஆண்டில், இந்த வசதி மாநிலம் முழுவதிலும் உள்ள மற்ற பதிவு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

16. இதே போன்று, மோட்டார் வாகனத் துறையிலும் 17 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு முன்னோடித் திட்டம் ஒன்று செயல்படுத்தப் பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

[2000 மே 8

17. தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில், மாவட்ட அளவிலும் வட்ட அளவிலும் நிர்வாகப்பணிகள் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளன. கூடுதலாக 50 வட்டங்கள் வெகு விரைவில் கணினிமயமாக்கப்படவுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள அனைத்து வட்டங்களுக்கும் இதனை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

18. பள்ளிக் கல்வித் துறையின் ஒத்துழைப்புடன், மாநிலத்தில் உள்ள 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் விருப்பப் பாடமாக அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் உள்ள 20,000 மாணவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 40 சதவீதம் மாணவிகள் ஆவர். புதுமையான இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுவருவதால் இதனை இதர மாநிலங்கள் மட்டுமன்றி அயல்நாடுகளும் பாராட்டுகின்றன. 1999 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் நாள் அமெரிக்க நாட்டில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தில் மின்னணு ஆளுமை குறித்து நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் இத்திட்டம் பரவலாகப் பேசப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள 535 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

19. தகவல் தொழில் நுட்பத்திற்காக உயர்தரம் கொண்ட மனித ஆற்றலைத் தொடர்ந்து வளப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, 2000-2001 ஆம் ஆண்டில் அனைத்து அரசு கலைக் கல்லூரிகளில் 2 ஆம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு கணினி அறிவு திட்டத்தை விருப்பப் பாடமாகத் தொடங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20. அயல்நாடுகளுடன் இணையம் மூலம் தொடர்பு கொண்டு தகவல் தொழில் நுட்பம் சார்ந்த மருத்துவம், சட்டம் மற்றும் அலுவல் சேவைகள் மேற்கொள்வது இம்மாநிலமெங்கிலும் வெகு வேகமாக பிரபலமாகிக் கொண்டு வருகிறது. கோம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற நகரங்களில் இத்தகைய சேவை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நம்பகத்தன்மையுள்ள சர்வதேச தகவல் இணைப்புகளை இப்பிரிவுகள் பெறுவதற்கு ஏதுவாக, இந்நகரங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அல்லது இருப்பிட அமைப்புகள் அமைத்துத்தர இந்திய மென்பொருள் தொழில்



2000 மே 8]

நுட்பப் பூங்காக்கள் நிறுவனம் (Software Technology Parks of India) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

21. அரசின் நடவடிக்கைகள் ஒளிவு மறைவின்றி நடைபெறுவதற்கு ஏதுவாக பொது மக்களுக்குப் பயன்படும் அரசின் முக்கிய கொள்கைக் குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள், விண்ணப்பப் படிவங்கள், மக்கள் சாசன அறிக்கைகள், புள்ளி விவரங்கள் போன்றவை www.tn.gov.in என்ற அரசு தகவல் தளத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

22. 1998 ஆம் ஆண்டில் இந்த அரசு அமெரிக்க ஹார்வர்டு பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஹார்வர்டு பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், 2000 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5-11 நாளிட்ட `எகானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி' என்ற வார இதழில் `தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம்' என்ற பொருளில் ஆய்வுக் கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரையில், தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழில் தொடங்குவதற்கு சாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி, உலக அளவில் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு முன்னிலை பெறுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையிலும், தகவல் தொழில்நுட்பத் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு உலக அளவில் முன்னிலை பெறுவதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

223319

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.